கோகுலம்

GOKULAM

ஜனவரி '91 விலை ரூ. 3/-



பாரீஸ் பிஸ்கட்டுகள்

"வாழ்க்கை சுவையாக இருக்கவேண்டும்" இதைச் சொல்லப் பல வழிகள் உண்டு...



வாழும் வாழ்வில் சுவை இருக்கவேண்டும். மனத்துக்கினிய மணம் இருக்கவேண்டும். அதற்கு பாரீஸ் காட்டும் வழி: சாறுள்ள பைனாப்பிள் கிரீம் சாறு செறிந்த ஆரஞ்சு கிரீம் கெட்டியான சாக்லேட் கிரீம் புத்துணர்ச்சி தரும் கார்டமம் கிளாஸிக் சத்து நிறைந்த குளுக்கோஸ் உடல்நலத்திற்கு மில்க் பிஸ்கட்டுகள் எந்நேரத்திற்கும் ஏற்ற மாரி வாழ்வில் சுவை கூட்ட இவை எல்லாம் சேர்ந்து சிறந்த சுவையை அள்ளித் தருகின்றன.

பாரீஸ் – அனைவரும் விரும்பும் தரமான பிஸ்கட்டுகள், மிட்டாய்கள்.

PARRYS


Parry's
FRESH & CRISP BISCUITS






கோகுலம்

1991 ஜனவரி மாத இதழ்
மலர் : 8 இதழ் : 12





அருமைச் சிறுவர் சிறுமியரே!

இந்த இதழ் கோகுலம் உங்கள் கைக்கு வந்தவுடன், ஒரு சில நாட்களுக்குள்ளேயே ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கப் போகிறது. அடுத்து இரு வாரங்களில் பொங்கல் திருநாள் வந்துவிடும். உங்கள் அனைவருக்கும் கோகுலத்தின் சார்பில் இப்பொழுதே இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்தை அச்சுறுத்தி வரும் போர் அரக்கனை, பிறக்கப் போகும் புத்தாண்டு வென்று, மீண்டும் என்றுமே தலைதூக்க முடியாதவாறு செய்ய வேண்டும். உலக மக்கள், அமைதியாக, மனிதகுல மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும்.

மத, இன, வகுப்புவாத உணர்வுகளுக்கு விடை கொடுத்து இலட்சிய பாரதத்தை உருவாக்கும் சக்தியும் பொறுமையும் இந்திய மக்களுக்குக் கிடைத்தருளச் செய்யப் பொங்கல் திருநாளில் வேண்டிக் கொள்வோம்.

பெரியவர்களிடம் சுயநலம் இருக்கும். ஆனால், குழந்தைகளாகிய உங்களிடம் அது இருக்காது. அதனால், பிறரை நேசிக்கும் பண்பை உங்களால் எளிதில் வளர்த்துக் கொள்ள முடியும். வேற்றுமைகளைக் களைந்து எதிர்கால இந்தியாவை எத்தகைய பிரச்னைகளிலிருந்தும் காக்கக் கூடிய மகத்தான சக்தி அதுதானே?


அன்புடன்,

ரேவு

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

இந்த இதழில்.....



அழகான குழந்தை

பள்ளியிலும் சரி, கல்லூரியிலும் சரி, தமிழைப் பாடமாகப் பயின்றவர்கள், பயில்கின்றவர்கள் மாணவர் மன்றத்தை மறக்க முடியாது. அதைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர் பேராசிரியர் அமரர் மயிலை சிவமுத்து அவர்கள். 1940 ஆம் ஆண்டு தொடங்கி குழந்தைகளுக்காகக் கதைகளையும் பாடல்களையும் எழுதிக் குவித்து, குழந்தை இலக்கிய முன்னோடிகளில் ஒருவராகத் திகழும் சிவமுத்துத் தாத்தாவின் புகழ்பெற்ற ஒரு சிறுகதையையும் உயிரோட்டமான பாடலையும் உங்களுக்காக இங்கு தருகிறோம்.

ஓர் ஊரிலே ஒரு பெரிய பாடசாலை இருந்தது. அந்தப் பாடசாலையில் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்தப் பாடசாலையின் ஆசிரியர், ஒரு நாள் அந்தக் குழந்தைகளுக்கு ஒரு சிறந்த புத்தியைப் புகட்ட எண்ணினார். அதற்காக அவர், அவர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தார். எந்தக் குழந்தை மிக அழகாகக் காணப்படுகிறதோ, அந்தக் குழந்தைக்கு ஒரு சிறந்த புத்தகமும், விளையாட்டுக் கருவிகளும் பரிசாக அளிப்பதே அந்தப் பரீட்சையின் நோக்கம்.

குறித்த ஒரு நாளில் அங்குள்ள குழந்தைகள் அனைவரும் தங்களை உயர்ந்த ஆடை ஆபரணங்களால் அழகுபடுத்திக் கொண்டு வர விரும்பினார்கள். சகுந்தலை என்னும் சிறுமி, அங்குள்ள குழந்தைகளுள் மிக அழகுள்ளவளாய் இருந்தாள். ஆதலால், அந்தப் பரிசு அவளுக்கே சேரும் என்று அங்குள்ள குழந்தைகள் அனைவரும் எதிர்ப்பார்த்தார்கள்.

சகுந்தலையின் பெற்றோரும் அவ்வாறே எண்ணித் தம் குழந்தையை உயர்ந்த ஆடை ஆபரணங்களால் அழகுபடுத்தினர். தான் அழகாக இருப்பது பற்றிச் சகுந்தலைக்குச் சிறிது கர்வமும் உண்டு. ஆதலால்,

பேராசிரியர் மயிலை சிவமுத்து

* 1940 ஆம் ஆண்டு வெளியானது



மாமி சுட்ட பிட்டு!

மாமி சுட்ட பிட்டு
மடியில் வாங்கிக் கட்டு
சீனி சர்க்கரை இட்டு
சிறிது நெய்யும் சொட்டு
உண்டு ஏப்பம் விட்டு
ஓடி வாநீ பட்டு.

* 1940 ஆம் ஆண்டு வெளியானது.

அவள், அந்த ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டு, மிக்க ஆடம்பரத்துடன் பாடசாலைக்கு வந்தாள்.

சகுந்தலையின் வீட்டுக்கு அருகே ரூபாவதி என்னும் சிறுமி வசித்து வந்தாள். அவளும் அதே பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தாள். அவள், அன்று மிக விலை உயர்ந்த இரவல் நகைகளை அணிந்து கொண்டு சகுந்தலையின் பக்கத்தில் மிக்க கம்பீரத்தோடு வந்து உட்கார்ந்தாள். ரூபாவதியின் விலை உயர்ந்த நகைகளைப் பார்க்கப் பார்க்கச் சகுந்தலைக்குப் பொறாமை அதிகரித்தது. ஆதலால், அவள் தன் முகத்தைச் சுளித்துக் கொண்டு, எவருடனும் பேசாமல் மவுனமாய் இருந்தாள். ரூபாவதியோ, தன் நகைகளைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து, மிக்க கருவத்துடன் தலைநிமிர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

அதே பாடசாலையில் வள்ளியம்மை என்னும் ஓர் ஏழைச் சிறுமி படித்து வந்தாள். அவளுக்கு அதிக ஆடை ஆபரணங்கள் இல்லை. ஆனால், அவள் என்றும் சுத்தமாய் இருப்பாள். நிறம் கறுப்பாய் இருந்தாலும், முகம் களையாகவே இருக்கும். அவளிடம் பிடிவாதம், கருவம் முதலிய கெட்ட குணங்கள் சிறிதும் இருந்ததில்லை. எவ்வளவு வருத்தம் வந்தாலும் அவள் முகத்தைச் சுளித்துக் கொள்ள மாட்டாள். அவள் எல்லாரிடமும் அன்பாகப் பேசுவாள். அவள் முகம் என்றும் புன்சிரிப்புடன் விளங்கும்.

வள்ளியம்மையும் அன்று அந்த அழகுப் பரிசுக்கு வந்திருந்தாள். தான் கறுப்பாய் இருந்தமையாலும், நல்ல ஆடை ஆபரணங்கள் இல்லாமையாலும், தனக்குப் பரிசு வாராது என்றே அவள் நம்பியிருந்தாள். ஆதலால், அவள், தான் அணிந்திருந்த சிறு பொன் சங்கிலியைக் கூடத் தன் தங்கை ஞானாம்பாளுக்குக் கொடுத்து விட்டாள்.

அந்தப் பாடசாலையின் பேரழகியைத் தேர்ந்து எடுப்பதற்கு அறிவில் சிறந்த ஓர் அம்மையாரை அவ்வாசிரியர் நியமித்திருந்தார். அவ்வம்மையார் அங்கே வந்திருந்த குழந்தைகளை எல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டே வந்து, முடிவில் ''வள்ளி அம்மையே இப் பாட்சாலையின் பேரழகி,'' என மொழிந்தனர்.



இதைக் கேட்டதும் அங்குள்ள குழந்தைகள் எல்லாம் முதலில் மிக ஆச்சரியப்பட்டார்கள். களித்த முகத்துடன் இருந்த சகுந்தலையையும், மிக்க கருவத்துடன் இருந்த ரூபாவதியையும், சாந்தமும் புன்சிரிப்புங் கொண்ட முகத்துடன் இருந்த வள்ளியம்மையையும் நன்றாகக் கவனித்துப் பார்த்த பிறகு, அவ்வம்மையார் கூறியதே உண்மை என்பது அவர்களுக்குப் புலப்பட்டது. அப்போது ஆசிரியர், ''குழந்தைகளே, உயர்ந்த ஆடை ஆபரணங்கள் நமக்கு அழகினைத் தர மாட்டா; எல்லா நகைகளிலும் சிறந்தது புன்னகையே என்பதை வள்ளியம்மை நமக்கு விளக்கிக் காட்டி விட்டாள்,'' என்று கூறினார். வள்ளியம்மை ஓர் அழகிய கதைப் புத்தகத்தையும் சில விளையாட்டுக் கருவிகளையும் பரிசாகப் பெற்றாள். சகுந்தலையும், ரூபாவதியும் அன்று முதல் தங்கள் குணங்களைத் திருத்திக் கொள்ள முயன்றார்கள். ●





ஒரே மேடையில் 44 நூல்கள்!

''குழந்தைகளின் சிந்தனையைத் தேவையற்ற பொழுதுபோக்குகளில் சிக்கிச் சிதைய விடாது வைக்கும் மகத்தான பொறுப்பு, குழந்தைகளுக்காக எழுதுவோரின் கரங்களில் இருக்கிறது. குழந்தைகளைத் திறமையான எதிர்காலக் குடிமக்களாக்கி நாட்டைக் காக்கும் பொறுப்பை ஏற்கத் தகுதியுடையவர்களாக்கித் தரும் கடினமான கடமை குழந்தை எழுத்தாளர்களிடமே உள்ளது.''

சென்னை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைகள் தின விழா — இலக்கியப் பரிசளிப்பு விழாவில்தான் கல்வியமைச்சர் அன்பழகன் அவர்கள் இக்கருத்தை வலியுறுத்திப் பேசினார்.


விழாவிற்கு வந்தவர்களைச் சங்கத் தலைவர் தெய்வசிகாமணி அவர்கள் வரவேற்றபோது, தரமான குழந்தை நூல்களை விற்பனை செய்வதில் உள்ள இடர்ப்பாடுகளைக் குறிப்பிட்டு, இந்நிலை தொடரப்பட்டால் எதிர்காலக் குடிமக்களின் மனநலமே பாதிக்கலாம் என்பதை விளக்கினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த கல்வி அமைச்சரவர்கள், ஏவி. எம். அறக்கட்டளையின் தங்க, வெள்ளிப் பதக்கங்களை பண்ருட்டி பரமசிவம், வி. ர. வசந்தன், (தங்கப்பதக்கங்கள்), பாலரமணி, நாகப்பா நாச்சியப்பன் (வெள்ளியப் பதக்கங்கள்) ஆகியோருக்கும், எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளையின் குழந்தைக் கவிஞர் நினைவுப் பரிசுகளை டி. ஜானகி, எஸ். ஆர். ஜி. சுந்தரத்திற்கும், செல்லப்பன் நினைவுப் பரிசுகளைக் கல்லூரி மாணவர்கள் மோ. பாட்டழகன், இர. பாலசுப்ரமணியம் முதலியோருக்கும் வழங்கிப் பாராட்டினார்.

குழந்தைப் புத்தகங்களைத் தரமாகத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை நினைவூட்டிப் பேசிய பள்ளிக்கல்வி இயக்குனர் டி. நாச்சிமுத்து அவர்கள், சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி 13 புத்தக வெளியீட்டாளர்கள் பதிப்பித்திருந்த 44 நூல்களை வெளியிட்டு, சங்கத்தின் தொண்டைப் பாராட்டினார்.


சங்கம், உலகத்தில் எங்குமே இல்லாத ஒரு புதுமை என்று விளக்கிய சங்கத்தின் ஆலோசகர் தணிகை உலகநாதன், அரசு சங்கத்திற்கு உதவி, அதை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தினார். சங்கச் செயலர் மாயன் அவர்கள் நன்றி கூறினார்.

பங்கு கொண்டு பேசிய அனைவருமே, சங்கத்தின் வளர்ச்சிக்குக் காலஞ்சென்ற குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் ஆற்றிய தொண்டை மறக்காமல் குறிப்பிட்டது, மனத்தை நெகிழ வைப்பதாக இருந்தது.




காப்பி

அடிப்பீர், நட்பு கொள்வீர்!



ஹாண்டிபாயை கவனமாக மேலே கொடுக்கப்பட்டுள்ள சதுர கட்டங்களில் பார்த்து வரையவும். மேலும் மனங்குளிர அவனுக்கு வண்ணம்தீட்டியும் மகிழ்ந்திடுங்கள்.



HTA 2888

கேட்கட்டுமா? டாக்டர்





டாக்டர். கு. கணேசன்

எனக்கு அடிக்கடி ஞாபக மறதி ஏற்படுகிறது. இதனால் நன்றாகப் படித்த பாடங்களைத் தேர்வின் போது நன்றாக எழுத முடிவதில்லை! இதற்கு ஒரு வழி கூறுங்கள், டாக்டர்!


— எஸ். சிவக்குமார், சிதம்பரம்.



கவலைப்படாதே, சிவக்குமார்! உன்னை மாதிரி ஞாபகமறதிக்காரர்கள் நம்மிடையே அநேகம் பேர் இருக்கிறார்கள்! ஞாபக மறதியைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் ஞாபக சக்தியைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். நமக்குத் தினமும் ஏற்படும் அனுபவங்களை, பார்த்ததை, படித்ததை, கேட்டதை, மூளையில் பதிவு செய்து, சேமித்து வைத்து, அவசியம் ஏற்படும் போது அதைத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வருவது — ஞாபக சக்தி. இதில் கோளாறு ஏற்படுவதை 'ஞாபக மறதி' என்கிறோம். சரியா? பொதுவாக ஞாபக சக்திக்குக் காரணமாக இருக்கும் மூளையின் பாகங்களான ஹிப்போகாம்பஸ், மாமில்லரி அங்கங்கள், தலாமஸின் பல பகுதிகள் ஆகியவற்றில் ஏதேனும் பழுதேற்படும் போது, அல்லது அப் பாகங்களுக்கு இரத்த ஓட்டம் தடைபடும் போது மறதி ஏற்படுகிறது. இதற்குச் சிறப்பான சிகிச்சை எதுவும் இல்லை. சிவக்குமார்! ஆனால் 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' அல்லவா? நீ தினமும் இரவில் படிக்கும் பாடங்களை, காலையில் எழுதிப் பழகு. படித்ததை எழுத்தில் கொண்டு வரும் பயிற்சியை தினமும் நீ மேற்கொள்வாயானால், உன் ஞாபக மறதி நிச்சயம் மறையும்! அதற்கு என் வாழ்த்துக்கள்!

நான் எதையாவது கூர்ந்து நோக்கினால் என் கண்களில் கண்ணீர் வருகிறது. அது ஏன் டாக்டர்? இத்தொல்லையிலிருந்து மீள ஒரு வழி சொல்லுங்களேன், ப்ளீஸ்!

— எம். என். அப்துல் காதர், காயல்பட்டினம்.



எந்தப் பொருளையும் கூர்மையாகப் பார்க்கும் போது கண்கள் களைப்படையும்.

இந்தக் களைப்புணர்வு நரம்புத் தூண்டல்களின் வழியாகக் கண்களைக் கலங்கச் செய்யும். இது பொதுவான காரணம். கண்களில் ஏதேனும் பார்வைக் கோளாறுகள் இருந்தால் கண்கள் விரைவில் களைப்படையும். இதனால், அடிக்கடி கண்களில் கண்ணீர் வரக்கூடும். எனவே, இப் பதிலைப் படித்ததும் கண் மருத்துவரை நீ கலந்தாலோசித்து உன் கண்ணிலிருக்கும் தொல்லைக்கு தீர்வு கண்டு கொள்!

காதுவலி வரக் காரணம் என்ன டாக்டர்? காது வலிக்கும் காதில் சீழ் வடிவதற்கும் தொடர்பு உண்டா?

— க. கோகிலவாணி, சங்கமங்கலம்.



காது வலிக்கு, பல காரணங்களைச் சொல்லலாம்! நோய்த் தொற்று காரணமாக காதினுள் புண், வீக்கம் உண்டாகும் போது காது வலி வரும். காது 'ஈஸ்டாக்கியன்' என்ற சிறு குழாய் மூலம் தொண்டையுடன் இணைக்கப்பட்டுள்ள காரணத்தால், தொண்டையில் புண் வரும் போது, சளி கட்டும் போது, ஜலதோசம் பிடிக்கும் போது காது வலிக்கும். இம்மாதிரியே அம்மை நோய்களிலும், தொண்டை அடைப்பான், தொண்டைச் சதை அழற்சி போன்றவற்றிலும் காது வலி வரலாம்! காதில் அழுக்கு அடைத்துக் கொள்வதாலும், கல், பயிறு, சிலேட்டுக் குச்சி போன்ற அன்னியப் பொருட்களைக் காதினுள் போட்டுக்கொள்ளும் போதும் காது வலி வரும். அருவிகளில் குளிக்கும் போதும், கிணறுகளில் ஆழச் சென்று மூழ்கிக் குளிக்கும் போதும் காது வலி வரும். சரி, தங்கையே! உன் முதற் கேள்வியில் இணைந்து கொண்டிருக்கும் துணைக் கேள்விக்கு வருகிறேன். காதில் சீழ் வடிந்தால் காது வலிக்கும் என்பது உண்மை. ஆனால், காதில் வலிக்கும் போதெல்லாம் சீழ் வடிய வேண்டிய அவசியமில்லை! போதுமா, கோகிலவாணி?

காலிலோ, கையிலோ புண் ஏற்பட்டால் சீழ் பிடித்துப் புழு வந்து விடுகிறது சிலருக்கு! இந்தப் புழு எப்படி உருவாகிறது, டாக்டர்?

— மா. சென்றாயன், தாலகுளம்.



சரியான சந்தேகம், சென்றாயன்! சபாஷ்! மிகவும் அசுத்தமான, நாள் பட்ட புண்களில் சீழ் பிடிக்கும் போது புழு உருவாவது உண்மைதான்! அது எப்படி உருவாகிறது, தெரியுமா? சீழ் பிடித்த புண்களில் ஈக்கள் மொய்க்குமல்லவா? அப்போது அந்த ஈக்கள் புண்களில் முட்டையிட்டு விடும். பின்பு அம் முட்டையிலிருந்து வரும் லார்வாக்கள்தான் புண்ணில் நாம் பார்க்கும் புழுக்கள்! இதை ஆங்கிலத்தில் 'மெக்காட்ஸ்' (MAGGOTS) என்றழைக்கிறார்கள். இம்மாதிரியான புழுக்கள் புண்ணில் உருவாவதைத் தவிர்க்க வேண்டும். அதற்கு, புண்களை சுத்தமாகத் துடைத்து, மருத்துவர் பரிந்துரையின் பேரில் மருந்து தடவி, சுத்தமான துணியால் புண்ணுக்குக் கட்டுப் போட வேண்டும்! சரியா, சென்றாயன்?



ஸ்பெயினில் குழந்தைகள் தங்கள் பெயருக்கு இனிஷியல் எழுத்தாக அம்மாவின் பெயரைத்தான் உபயோகிக்கின்றனர்.

— நாகை கே. ரவி, கோவை – 18.

பிறந்தநாள் கவியரங்கம்

விழிமின்!

குமரி முனைக்கு வாருங்கள்,
கூர்ந்து கடலைக் காணுங்கள்,
அமர்ந்த நிலையில் பாறையிலே
அவரை நினைத்துப் பாருங்கள்!

வீர முழக்கம் கேட்கிறதா,
விவேகானந்தர் தெரிகிறதா?
ஈர நெஞ்சம் விரிகிறதா,
இவருரை மனத்தில் பதிகிறதா?

'இந்திய மண்ணின் துகள் துகளும்
வந்தனைக் குரிய புனிதமடா!
எந்த மண்ணில் இருந்தாலும்
சொந்த மண்ணை மறவாதே!''

''ஏழையின் பசியினை ஆற்றுங்கள் — அவர்
விழியின் கண்ணீர் மாற்றுங்கள் — இது
'வாழுந்தெய்வ' வழிபாடு — ஆம்
வழிவழி மதங்கள் கோட்பாடு!''

விழிமின், எழுமின் சிங்கங்காள்,
வெற்றி பெறும்வரை விறுடனே
உழைமின், உயர்மின், உறுதியுடன்,
உலகம் உங்கள் காலடியில்!

— ரா. பா. சாரதி.



வங்கச் சிங்கம்


வங்கச் சிங்கம் நேத்தாஜியை
மறக்க முடியுமா? அவர்
வளர்த்து வைத்த நாட்டுப் பற்றைத்
துறக்க முடியுமா?


எங்கோ ஒரு ஜெய் ஹிந்த் ஒலி
எழுந்தால் போதுமே — நம்
இதயத் திலே சுபாஷ் போசின்
வடிவம் பூக்குமே!

ஆங்கி லேயர் நமது நாட்டைச்
சுரண்டிக் கெடுக்க — அவர்
ஆதிக் கத்தை நம்மோர் பல
வழியில் எதிர்க்க
புரட்சிப் படைத் திரட்டிப் பெரும்
போரே புரிந்தார் — சுபாஷ்
போஸாம் நந்தம் அஞ்சா நெஞ்ச
புனிதத் தலைவர்.

துன்பத் தையும் இன்பம் ஆக்கிக்
கொள்ளும் துணிவும் — நாட்டின்
துயர் முழுக்கத் துடைத்து விடத்
துடிக்கும் மனமும்
என்றும் என்றும் நேதாஜி போல்
நமக்கும் இருந் தால் — நம்
இந்தி யாவை உலக அரங்கில்
தலைமை தாங்குமே!

— ரா. பொன்ராசன்.





அவரா கருமி?

ஞானகிமணாளன்

அவரை எல்லோரும் ஊரில் 'லாலாஜி' என்று அழைப்பார்கள். மிகவும் கண்டிப்பானவர். அதே நேரத்தில் கருணை உள்ளவரும் கூட.

அன்று லாலாஜி எங்கோ வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தார். கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டார். தலையில் முண்டாசை அணிந்து கொண்டார். நிலைக் கண்ணாடி எதிரில் போய் நின்று சரிபார்த்துக் கொண்டார். பிறகு, கைப்பிரம்பை எடுத்துக் கொண்டு, அறையை விட்டு வெளி வந்தார்.

அது ஒரு பெரிய பங்களா. அழகான தோட்டத்தின் நடுவில் அது கம்பீரமாக நின்றது. வீட்டு வாசலில் போர்ட்டிகோ உண்டு. அங்கு இரட்டைக் குதிரைகள் பூட்டிய 'சாரட்' வண்டி ஒன்று அவரை ஏற்றிச் செல்லத் தயாராக இருந்தது.

வெளி வராந்தாவில் வந்து நின்ற லாலாஜி வண்டியோட்டியைப் பார்த்து, "என்ன...? கிளம்பலாமா?" என்றவாறு சாரட்டில் ஏறி அமர்ந்து கொண்டார். அடுத்த நிமிடம், வண்டியோட்டி சாட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு வண்டியைக் கிளப்பத் தயாரானார். அதற்குள் லாலாஜிக்கு ஒரு சந்தேகம்.

அது மாலை நேரம். மெல்ல மெல்ல இருள் கவிந்து கொண்டிருந்தது. இரவு வந்து விட்டால், வாகனங்கள் விளக்கு ஒன்றைக் கொளுத்தி வைத்துக் கொள்ளாமல் சாலையில் செல்லக் கூடாது என்பது சட்டம். இப்போதும் அது உண்டு. ஆனால், பல ஊர்களில் மீறப்படுகிறது. அது ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட சமயம். அவர்கள் எந்தச் சட்டமாக இருந்தாலும் கண்டிப்பாக 'அமுல்' படுத்துவார்கள். லாலாஜிக்கு அந்தச் சட்டம் பற்றிய நினைவு வந்தது.

"இருள் சூழ்ந்து விட்டதே... வண்டி விளக்குகளைக் கொளுத்தி விட்டாயா...?" என்று வண்டியோட்டியை வினவினார் லாலாஜி.

"மறந்தே போனேன்... இதோ கொளுத்தி விடுகிறேன் ஐயா..." என்றவாறு, சாட்டையை வண்டியில் வைத்து விட்டு, தீப்பெட்டி எடுத்து வர வீட்டுக்குள் சென்றார் வண்டிக்காரர். லாலாஜி வண்டியிலேயே அமர்ந்திருந்தார்.

அச் சமயம், தோட்டத்து கேட்டைத் திறந்து கொண்டு, இரண்டு பேர் லாலாஜியைப் பார்க்க வந்தனர். லாலாஜி அவர்களைக் கவனிக்கவில்லை. வந்தவர்கள் 'லாலாஜி கிளம்பி விட்டாரே... எப்படிப் போய்ப் பேசுவது?' என்று தயங்கியவாறு, ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றனர்.

உள்ளே போன வண்டிக்காரர், தீப்பெட்டியுடன் திரும்பி வந்தார். வண்டி விளக்கில் ஒரு சிறிய கண்ணாடிக் கதவு இருந்தது. அதைத் திறந்து வைத்து விட்டுத் திரியைச் சற்றுத் தூண்டி விட்டார். பிறகு ஒரு தீக்குச்சியைப் பெட்டியில் உரசிப் பற்ற வைத்தார்.

அப்போது காற்று சற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. எரியும் தீக்

குச்சியை இரண்டு உள்ளங் கைகளாலும் குவித்து மூடி, விளக்குத் திரியைப் பற்ற வைப்பதற்குள், காற்றில் தீக்குச்சி அணைந்து விட்டது.

லாலாஜி அந்த வண்டியோட்டி செய்வதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். வண்டியோட்டி இன்னொரு தீக்குச்சியை எடுத்துப் பற்ற வைத்து விளக்கைக் கொளுத்த முயன்றார். அதுவும் முன் போலவே அணைந்து விட்டது. பிறகு மூன்றாவது குச்சி... அதற்கும் பழைய கதை தான்... அடுத்தது நான்காவது... ஐந்தாவது... இப்படிப் பத்துத் தீக்குச்சிகள் வரை வீணாகி விட்டன! எனினும்,விளக்கு ஏற்றிய பாடில்லை.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த லாலாஜி பொறுமை இழந்தார். வண்டியோட்டியிடம் ஆத்திரம் வந்தது.

''இந்தாப்பா... எத்தனை தீக்குச்சிகளை வீணடிப்பாய்? நீ செய்வது நியாயமா...?'' என்று கோபித்துக் கொண்டார்.


உடனே வண்டிக்காரர், ''காற்று பலமாக வீசுகிறது ஐயா... நான் என்ன செய்ய...?'' என்றான்.

''இங்கே காற்று வீசினால், விளக்கைக் கழற்றிக் கொண்டு போய், காற்று வீசாத அடக்கமான இடத்தில் வைத்து ஏற்றி வர வேண்டியது தானே...! அப்போது ஒரே ஒரு தீக்குச்சி போதுமே...! ஒன்பது தீக்குச்சிகளை வீணடித்து விட்டாயே..?'' என்றார்.

லாலாஜியைப் பார்க்க வந்த இருவரும், அங்கு நடப்பதைக் கண்டு திடுக்கிட்டனர். அவ்விருவரும், வேறு யாருமல்ல. அந்த நகரத்தில் உள்ள ஒரு அனாதைக் குழந்தைகள் காப்பகப் பொறுப்பாளர்கள். அவர்கள் லாலாஜியைச் சந்தித்து அவரிடம் நன்கொடை ஏதாவது பெற்றுச் செல்லலாம் என்று வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் சொன்னார். ''இந்த மனிதர் சுத்தக் கஞ்சனாக இருப்பார் போலிருக்கிறதே... இந்தக் கல்லிலா நாம் நார் உரிக்க முடியும்...?'' என்றார்.

அடுத்தவர், ''ஆமாம்.. ஆமாம்.. சில தீக்குச்சிகளைக் கொளுத்தியதற்கே இப்படிக் கஞ்சத்தனமாகக் கோபிக்கும் இவர், நமக்கு என்ன கொடுத்து விடப் போகிறார்...?'' என்றார்.

முதலாமவர், ''இவரிடம் கேட்டு, நம் மதிப்பை இழந்து விடக் கூடாது. வா போய் விடலாம்...'' என்றார். இருவரும் மெல்ல அந்த இடத்தி



விருந்து வெறியேறலாயினர். ஆனால், அதற்குள் லாலாஜி அவர்களைப் பார்த்து விட்டார். உடனே, ''யார் நீங்கள்? என்னைப் பார்க்க வந்து விட்டு, ஒன்றும் சொல்லாமல் போனால் எப்படி? என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று வினவினார்.

இருவருக்கும், அவர் நன்கொடை தருவார் என்ற நம்பிக்கை இல்லை. எனினும், அவர் கேட்டு விட்டாரே! எனவே, தாம் வந்த விவரத்தைக் கூறி விட்டு, முடிந்த தொகையைக் கொடுத்தருள வேண்டும் என்று வேண்டினர்.

சற்று நேரத்துக்கு லாலாஜியிடம் பதில் இல்லை. பிறகு சாரட்டை விட்டுக் கீழிறங்கி வீட்டுக்குள் போனார். திரும்பி வரும் போது, அவர் கையில் ஒரு காசோலை இருந்தது.

''இந்தாருங்கள்... இது என் நன்கொடை...'' என்றவாறு அதை அவ்விருவரிடமும் கொடுத்தார். அதை வாங்கிப் பார்த்த இருவருக்கும் மயக்கமே வந்து விடும் போல் ஆகி விட்டது. ஏன் தெரியுமா?

லாலாஜி எத்தனை ரூபாய்க்குக் காசோலை வழங்கியிருந்தார் தெரியுமா? பத்தாயிரம் ரூபாய்...! அவர்களால் நம்பவே முடியவில்லை. ஒருவர் லாலாஜியிடமே கேட்டு விட்டார்.

''ஐயா...! தவறாக எண்ணக் கூடாது. இப்போது மிகத் தாராளமாகப் பத்தாயிரம் ரூபாய் வழங்குகிறீர்கள். ஆனால், சற்று முன்பு சில தீக்குச்சிகளை அந்த வண்டிக்காரர் செலவு செய்து விட்டார் என்று அத்தனை ஆத்திரப்பட்டீர்களே... அது ஏன்? உங்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே...!'' என்றார்.

உடனே லாலாஜி புன்முறுவலுடன், ''அதுவா...? சொல்கிறேன்... என்னைக் கஞ்சன் என்று கூட நினைத்திருப்பீர்கள். உண்மை அதுவல்ல. நான் கொடுக்கும் பத்தாயிரம் ரூபாயின் கடைசி பைசா வரையில் நீங்கள் ஏழைக் குழந்தைகளின் நலனுக்காக, செலவு செய்வீர்கள் என்ற நம்பிக்கை என்னிடம் உண்டு. எனவே, என்னைப் பொறுத்தவரையில் இது பயனுள்ள செலவு. அதனால் மகிழ்ச்சியோடு கொடுத்தேன். ஆனால், அந்த வண்டிக்காரர் சற்று கவனமாகச் செயல்பட்டிருந்தால், ஒரே ஒரு தீக்குச்சியிலேயே அவர் அந்த விளக்கை ஏற்றியிருக்க முடியும். ஒன்பதை வீணடித்து விட்டாரே... அவற்றால் யாருக்கு என்ன பயன் ஏற்பட்டது...? அத்தனை குச்சிகள்



எரிந்ததும் பயனற்ற செலவுதானே...? எனவே கோபித்தேன்...'' என்றார்.

அந்த இருவருக்கும் ஒரு பெரிய உண்மை புரிந்தது. அவர்களுக்கு மட்டுமா? நமக்கும் கூடத்தான்.

லாலாஜி தொடர்ந்தார். "எந்தச் சிறிய செலவாக இருந்தாலும், அதனால் யாருக்காவது பலன் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அது வீண் செலவுதானே...? அதை நாம் தவிர்க்க வேண்டும்...'' என்ற லாலாஜி, "பொதுப் பணத்தைக் கையாளும் நீங்கள் இன்னும் கவனமாகச் செயல்பட வேண்டும் என்று அறிவுரை கூறி, இருவரையும் அனுப்பி வைத்தார்.

இப்படிக் கண்டிப்பும் கருணையும் கொண்டிருந்த லாலாஜி யார் தெரியுமா? அவர்தான் லாலா லஜபதிராய்! நம் பாரத விடுதலைக்காகப் பாடுபட்ட முன்னணித் தலைவர்களில் அவரும் ஒருவர். 'பாஞ்சாலச் சிங்கம்' என்று புகழப்பட்டவர். ஆங்கிலேயரோடு போராடிப் பலமுறை சிறை சென்று அடியும் உதையும் பெற்று, அதன் காரணமாகவே உடல் நலம் குன்றித் தம் உயிரை நாட்டுக்காக அர்ப்பணம் செய்த உத்தமத்தியாகி! லால்—பால்—பால் (Bal) என்று அழைக்கப்பட்ட விடுதலைப் போராட்ட மும்மூர்த்திகளில் ஒருவர். லால் எனப்பட்டவர் நமது லாலா லஜபதிராய்! பால் எனப்பட்டவர் பிபின் சந்திர பால்! பால் (Bal) எனப்பட்டவர் லோகமான்ய பால் கங்காதர திலகர்! இம் மூவரும் ஒரே காலத்தவர்கள்.

இவர்கள் எல்லாம் அமைத்துத் தந்த போர்க்களத்தில்தான் காந்தி, நேரு, படேல், ராஜாஜி போன்றோர் தொடர்ந்து போராடி நமக்கு விடுதலை பெற்றுத் தந்தனர்.

இந்த ஜனவரி மாதம் லாலா லஜபதிராயின் 125 வது பிறந்த தினம். இந்த நன்னாளில், அவரை நினைவுபடுத்திக் கொண்டு, அவர் காட்டிச் சென்ற நல்வழிகளில், நம்மையும் ஈடுபடுத்திக் கொள்வோம்.

கதை, கட்டுரை அனுப்புவோர் கவனிக்க!

கோகுலத்திற்குக் கதை, கட்டுரை, பாடல், சிரிப்பு, துணுக்குகள் அனுப்புவோர் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருகிறது. சிலர் எதை எழுதுவது என்று கேட்கிறார்கள்.

குழந்தைகள் சுவைத்து மகிழத்தக்க எதை வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். ஆனால், ஆசிரியர், பெற்றோர், உடல் குறையுள்ளோர் போன்றவர்களைக் கேலி செய்யும் படைப்புக்களை மட்டும் அனுப்பாதீர்கள்.

கதைகள் கோகுலத்தின் 3 பக்கங்களுக்கு மேல் போகக் கூடாது. பாடல்கள் 20 வரிகளுக்கு மேல் இருக்கக் கூடாது. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுத வேண்டும். துணுக்குகளை அஞ்சல் அட்டையில் எழுதியனுப்பினால் போதும். அறிவியல் செய்திகளாக இருந்தால், அதற்கான ஆதாரம் எது என்பதையும் குறிப்பிட வேண்டும். நாங்கள் கேட்காது புகைப்படத்தை அனுப்ப வேண்டாம்.

தினமும் நூற்றுக்கணக்கில் கடிதங்கள் வருவதால், பரிசீலனை செய்து அறிவிக்கக் குறைந்தது ஒரு மாதமாகும். போதிய தபால் தலை இணைத்திருந்தால் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படாதவை திருப்பியனுப்பப்படும்.


கோகுலத்திற்கு அனுப்புமுன், உங்கள் படைப்புக்களை நண்பர்களிடம் படித்துக் காட்டி கருத்தைக் கேளுங்கள். குழந்தைகளிடம் கதையைக் கூறி, பாடலைப் பாடிக் காட்டி அவற்றை எப்படி வரவேற்கிறார்கள் என்பதைக் கவனித்து அதற்குப் பிறகு அவசியமானால் திருத்தி அனுப்புங்கள். மற்றவர் எழுதியதை மட்டும் அனுப்பி விடாதீர்கள். எதுவும் உங்கள் சொந்தமாக இருக்கட்டும்!

இது உங்கள் கோகுலம்!

அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர் கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032.

ஜாதி, மதம் அல்லது நிறத்தைப் பற்றி அவன் சிந்திக்கவில்லை. அவனுடைய ஒரே சிந்தனை — மற்றொருவரைக் காப்பாற்ற வேண்டும் என்பதே

வீரச் செயல்கள் புரிந்த நம் நாட்டின் இளம் குழந்தைகளை வணங்கு-கிறோம். மனித குலத்தின் மீதுள்ள அவர்களின் தன்னலமற்ற அன்பு மற்றும் அக்கறை நீடிக்கும் என்ற நம்பிக்கையில். நமது நாடு வளம்பெற, நேருஜியின் கனவை நனவாக்க...



ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த **மாஸ்டர் கிருபாசிந்து பிரதான்** ஏழு வயது குழந்தையை புலியின் பிடியினின்று காப்பாற்றினான்.

ஹரியானாவைச் சேர்ந்த **சந்தியா தேவி** தன் கிராமத்தினைப் பயமுறுத்திக் கொண்டிருந்த ஒரு ஓநாயைக் கொன்றாள்.

''சுதந்திர இந்தியா என்ற மிகச்சிறந்த மாளிகையை நாம் கட்ட வேண்டும் — எங்கே அதன் எல்லா குழந்தைகளும் வாழ முடியும்''

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

அவர்களின் பாதுகாப்பான எதிர்காலத்திற்காக இன்ஷ்யூர் செய்யவும்.

MAA COMMUNICATIONS-B-LIC/19A TAM

சார் தபால்!

வியப்பு!

* வேப்பிலை கறிவேப்பிலை ஆனதால் ஏற்பட்ட அழிவை ராஜாஜி அவர்கள் மிக அழகாகக் கூறியதோடு பக்தியின் பெருமையையும் கூறியுள்ளார். மகிழ்ச்சி.

திருமழபாடி. ஜே. அன்பு பாலாஜி.

* ராஜாஜி அவர்கள் குழந்தை இலக்கியத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டை விளக்கும் வகையில் அமைந்திருந்த, டாக்டர் பூவண்ணனின் கட்டுரை மெய்மறக்கச் செய்து விட்டது!

பழையனூர். ரு. சம்பந்தம்.

* டாக்டர் பூவண்ணனின் 'ராஜாஜியிடம் பரிசு வாங்கினேன்' கட்டுரை கட்டுரையாக அமையாமல் ஒரு சிறுகதையாகவே இருந்தது.

செஞ்சி. தா. ஷேக் உசேன்.

* ''படிப்பில் கோட்டை விடாதே''வை, சிறுகதை என்றுதான் படித்தேன். ஆனால், முடிவில் வியப்படைந்தேன். அட! அவர்கள் தான் இவர்களா?

சீர்காழி. ஜே. கணேசன்.

* ஜெயராம்ஜியின் ''பாரத ரத்னா நெல்சன் மண்டேலா'' கட்டுரை அருமையாக இருந்தது. காந்தியை நினைக்கும் போதெல்லாம் இவரையும் நினைக்காமல் இருக்க முடியாது ...!

மொரப்பூர். ச. உமர்கான்.

* 'மூங்கில் இளவரசி' சிறுகதை நிச்சயம் சிறுவர்களைக் கவரும்.

சீர்காழி. ஜி. கே. வேலு.

* 'பார்த்தா பறக்கிறது வௌவால்?' படிப்பினைக் கதையாக மட்டுமின்றி, அறிவியல் உண்மைகளையும் விளக்கியுள்ளது.

சேலம் — 1. ரவி பாலாஜி.

* 'ஏன்? ஏன்? ஏன்?' படித்தேன். பெட்ரோல் டாங்கிகளை அபாயத்திலிருந்து காக்கும் சிறிய சங்கிலியின் மிகப் பெரிய செயலை எண்ணி வியந்தே போனேன்.

பூந்தோட்டம். து. பாண்டியன்.

* ''கண்ணாடி மலை அழகிகள்'' சித்திரக் கதை விறுவிறுப்பாக அமைந்தது. சித்திரங்களும் வெகு நேர்த்தியாகவும் மிகப் பொருத்தமாகவும் அமைந்திருந்தன.

ஈரோடு. டி. சந்திரன்.

* ''படிப்பு முடிந்ததும் விடுமுறையைக் கழிக்க சினிமாவுக்குப் போகலாமா, சுற்றுலா செல்லலாமா என்று நினைக்கும் மாணவர்கள் மத்தியில், விடுமுறையை ஒரு நல்ல பயனுள்ள விதத்தில் கழித்திருக்கும் சுமதி, சுந்தரை நினைத்து, நினைத்துப் பெருமிதம் கொள்கிறேன்.

தக்கோலம். ஏ. சலாவுதீன்.

* பிறந்த நாள் விழா கொண்டாடும், பணக்காரச் சிறுவர்கள், வாசு செய்ததைப் போல், வருடா வருடம் ஒரு ஏழைச் சிறுவனுக்கு டிரஸ் வாங்கித் தந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடலாமே!

குடந்தை. எஸ். கே. மூர்த்தி.

* ''சிலந்திகளில் இத்தனை வகைகளா ...!? அசத்தி விட்டது புது. புது சிலந்திகள் பற்றிய செய்திகள்.

கும்பகோணம். கவிட் ரவி.

* ''குண்டுமணி'' சார் எல்லா விளையாட்டுப் போட்டிகளைப் பற்றியும் கூறி எங்களை உற்சாகப்படுத்தும் உங்களைப் பாராட்ட வார்த்தைகளே கிடையாது!

சேலம் — 3. ஜி. வேலு.

* மஞ்சள் காமாலையைப் பற்றி டாக்டர். கணேசன் விளக்கிய செய்தி மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

ஈரோடு. சி. சுமதி.


* ''ஹரிசிங்கின் வீட்டுக்குள் கொண்டு வராதே' ஒருவித வியப்பு, ஒரு நெகிழ்வு, ஒரு மகிழ்வு.

தக்கோலம். பி. அ. முஸ்தாபா கமால்.

* ''திருடன் எங்கே?'' சிறுக[illegible]மை.

சங்கமங்கலம். க. பே[illegible]ணி.

அணு சக்தி



பூமிக்கடியிலிருந்து ஓர் உலோகச் சிலை கிடைக்கிறது. அது எந்த நூற்றாண்டைச் சேர்ந்தது என்பது பற்றி நிபுணர்களிடையே கருத்து வேறுபாடு. சோதனைக்குப் பிறகு அதன் காலம் துல்லியமாகக் கண்டுபிடிக்கப் படுகிறது. இதை முடித்து வைத்தது கார்பன் அணு(க்கதிர்) சோதனை.

பசுமைப் புரட்சி இயக்கத்தின் போது, ஒரு குறிப்பிட்ட விவசாயியின் வயலில் மட்டும் அதிக விளைச்சல் தொடர்ந்து இருப்பது கவனிக்கப் பட்டது. பரிசோதனை நடத்திய போது, அவர் பயன் படுத்திய விதைகளில் அணு (கோபல்) வீச்சு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. விவசயாத் துறையிலும் அணுசக்தி புகுந்து கொண்டது.

எவ்வளவோ உள்ளடுக்குகளைக் கொண்ட கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் பிரம்மாண்டமான இயந்திரம், விவசாய நீர்த் தேக்கங்களின் பிரம்மாண்டமான எஃகுத் தடுப்புச் சுவர்கள் என்று கண்களால் காணமுடியாத முக்கிய உள்ளுறுப்புக் கருவிகளில் அரிப்பு, விரிசல் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டிய காரிய நிலை. கை கொடுத்து உதவுகிறது அணு (கோபல்) க்கதிர் பரிசோதனை.

சரியான மருந்து கண்டு பிடிக்கப் படாத புற்று நோய். பாதிக்கப்பட்ட பகுதியை அறுவை சிகிச்சை செய்து நீக்கிவிடுகிறார்கள். புற்று நோய் புதிதாக மேலும் பரவாமல் இருக்க உதவிக்கரமளிக்கிறது அணு (கோபல்) க்கதிர் சிகிச்சை.

மின்சாரப் பற்றாக்குறை காரணமாக ஆண்டு தோறும் பாதிக்கப் பட்டு வந்த தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி, கல்பாக்கம் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்ட பிறகு சீராகியிருக்கிறது. இந்த மின் உற்பத்திக்குக் காரணமாக இருப்பது அணு சக்தி.

இரண்டாவது உலகப் போரில் ஜப்பான் நாட்டின் ஹிரோஷியாமா, நாகசாகி நகரங்களின் மேல் குண்டு வீசப்பட்டு இலட்சக்கணக்கான மனித உயிர்கள் பலியாயின. நகரங்களே தரைமட்டமாயின. இதைச் செய்தது அணு சக்திக் குண்டுகள்.

இப்படி ஆக்கவும் அழிக்கவும் வல்ல அணு சக்தி என்பது என்ன?

ஆட்டம் என்று அழைக்கப்படும் ஆங்கிலச் சொல், உண்மையில் கிரேக்கச் சொல்லாகும். பிரிக்க முடியாதது என்பது பொருள்.

உலகப் பொருள்கள் எல்லாம் கதிரவன், நட்சத்திரங்கள், மலைகள், விலங்குகள், பறவைகள், மனிதர்கள் உட்பட, உருவாக அடிப்படையாக இருப்பவை தனிமங்கள் என்ற எலிமெண்ட்ஸ். நூற்றுக் கணக்கான தனிமங்களை வகைப்படுத்தியிருக்கிறார்

சேரநம்பி

கள். உதாரணம்: உலோகங்கள், கார்பன் என்ற கரி போன்றவை. இந்தத் தனிமம் என்ற எலிமெண்ட்ஸ் ஸின் மிகச் சிறிய பகுதியே அணு வாகும்.


அணுக்கள் மிக மிகச் சிறியவை. மைக்ரோஸ்கோப் என்ற உரு பெருக்கிக் காட்டியால் கூட இவைகளைக் காண முடியாது. ஒரு முற்றுப் புள்ளி யின் நூற்றில் ஒரு பங்கில், ஒரு குண்டூசியின் குத்து முனையில் மட்டும் கோடிக் கணக்கான அணுக்கள் குவிந்துள்ளன என்றால், அவை எவ்வளவு நுண்ணியவை என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம்.

இந்த விளக்கத்தை அறிவியல் அடிப்படையில் முதலில் நிருபித்துக் காட்டிய பெருமைக்கு உரியவர் ஆங்கில விஞ்ஞானி ஜான் டால்டன் என்பவர். அணுவைப் பிளக்கவோ பிரிக்கவோ முடியாது என்று இவர் 1808 ஆம் ஆண்டில் விளக்கினார். இதை மறுக்க அறிவியல் அடிப்படையில் ஏதும் இல்லாததால் டால்டனின் கொள்கை ஏற்கப்பட்டது. ஆராய்ச்சிகள் தொடர்ந்தன.

பொருள்கள், சேர்மம் என்ற காம்பவுண்ட் அல்லது தனிமம் என்ற எலிமெண்ட்ஸ்சால் ஆனவை. பொருள்களின் கடைசி நிலை அணு அல்ல. அணுக்களையும் கூடப் பிரிக்க முடியும். அணுக்கள் மோலிகூல் என்ற மூலக் கூறுகளால் ஆனவை என்ற புதிய உண்மை கண்டுபிடிக்கப் பட்டது. இதை அறிவியல் அடிப் படையில் நிருபித்துக் காட்டியவர் ஆவ்வா காட்ரா என்ற விஞ்ஞானி.

எனவே, பொருள்களின் கடைசி நிலை அணு அல்ல; மோலிகூல்ஸ் எனப்படும் மூலக்கூறுகளே என்ற அடிப்படையில் ஆராய்ச்சிகள் தொடரப்பட்டன.

தங்கத்தைச் சிதைத்துக் கொண்டே போனால், தங்க அணு கிடைக்கும். இப்படி, சிதைக்கப்படும் பொருளைச் சார்ந்து அணுக்கள் கிடைக்கும். உதாரணம்: இரும்பு அணு, வெள்ளி அணு, உப்பு அணு, நீர் அணு (ஹைட்ரஜன் அணு). மூலவகை அணுக்களில் தற்பொழுது 105 வகைகள் உள்ளன.



ஒவ்வொரு அணுவுக்குள்ளும் எலெக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் எனும் மூன்று அடிப்படைத் துகள்கள் உள்ளன. ஹைட்ரஜன் தவிர மற்ற எல்லா அணுக்களிலும் இந்த மூன்றையும் காணலாம். வேதிப் பொருட்களில் (கெமிகல்ஸ்) இவை மகத்தான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

எலக்ட்ரானை சர் தாம்சன் 1897லும் புரோட்டானை ருதர்ஃபோர்டு 1911லும், நியூட்ரானை ஜான் சாட்விக் 1932லும் கண்டு பிடித்தனர்.

இந்த மூன்றுக்கும் என்ன தொடர்பு? ஒவ்வொரு அணுவுக்குள்ளும் அணுக்கரு, வெளிப்பாதை என்ற இரண்டு பகுதிகள் உள்ளன. நியூக்ளஸ் என்ற அணுக்கரு அணுவின் மையத்தில் உள்ளது. இதில் தான் நியூட்ரான்களும் புரோட்டான்களும் இடம் பெற்றுள்ளன.


அணுக் கருவைச் சுற்றியுள்ள பகுதியே வெளிப்பாதை. இதில்தான் எலக்ட்ரான்கள் எப்பொழுதும், கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத அளவு வேகத்துடன், சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கும். இது மின்காந்த விசையின் விளைவே. சூரியனை பூமியும் மற்ற கிரகங்களும் சுற்றி வருவது போல் நியூக்ளஸ் என்ற அணுக் கருவைச் சுற்றி எலக்ட்ரான்கள் மிகமிக வேகமாகச் சுற்றி வருகின்றன.

புரோட்டான் ஓர் அலகு நேர்மின் தன்மையுடையது. எலக்ட்ரான் ஓர் அலகு எதிர்மின் தன்மையுடையது. புரோட்டான், நியூட்ரானின் எடை (சுமார்) ஓர் அலகு. நியூட்ரானுக்கு மின்னேற்றம் கிடையாது.

சில தனிமங்களின் (எலிமெண்ட்ஸ்) அணுக்கள் தாங்களாகவே சிதைகின்றன. அப்பொழுது அவற்றின் அணுக்களில் இருந்து சில புரோட்டான்களும் எலக்ட்ரான்களும் வெளிப்படுகின்றன. கதிரியக்கம் என்பது இதுதான். இது வெளிப்படும் போது, கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத அளவுக்குக் கடும் வெப்பம் வெளிப்படுகிறது. அணு சக்தி என்பது இதுதான்.

சூரியனுக்குள் தொடர்ந்து அணுச் சிதைவு ஏற்படுவதாலேயே சூரியனிடமிருந்து வெப்ப அலை வெளியேறுகிறது. கதிரியக்கமும், அணுசக்தியும் உலகத் தலைவிதியை மாற்ற வல்லவை.

டர்பைன் என்ற மின் சுழலி (சக்கரம்)யைச் சுழல வைத்து மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். நீரின் வேகம் அல்லது நீராவியைக் கொண்டு இதைச் சுழல வைக்கிறார்கள். நீரின் வேகத்தால் சுழன்று உற்பத்தி செய்யப்படுவது நீர்மின்சாரம். நிலக்கரியை எரித்து, நீரைக் கொதிக்க வைத்து அதன் நீராவி சக்தியால் சுழலியைச் சுழல வைத்து எடுக்கப்படும் மின்சாரம் அனல் மின்சாரம்.



அணுவின் (வெப்ப) சக்தியைக் கொண்டு, நீராவியை உருவாக்கி, அதனால் சுழலியை இயக்கி உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அணு மின்சாரம்.

அணு வெப்பத்தை (சக்தி) உருவாக்கும் அணு உலையை அமைப்பதை ஒரு சின்னச் சூரியனை உருவாக்குவதற்கு ஒப்பிடலாம். அணு உலையில் செயற்கை முறையில் அணுச் சிதைவு செய்து, வெளிப்படும் அளவிலா வெப்ப (அணு) சக்தி வெளிப்படுகையில் கண்களுக்குத் தெரியாத வேறு சில கதிர்களும் வெளிப்படுகின்றன. இவை மனித குலத்திற்கே பெரும் நாசம் விளைவிப்பவை. அதோடு இந்த உலைகள் 25 முதல் 30 ஆண்டுகளே வேலை செய்யும். உலைகள் மிகவும் பாதுகாப்பாக

அமைக்கப்பட வேண்டும். இவை வெளியேற்றும் கழிவுப் பொருளில் புளூட்டோனிக் கலவை இருக்கும். இது ஆயிரக் கணக்கான ஆண்டுகள் வரை மனித குலத்திற்கே நாசத்தை விளைவிக்கும் கதிரியக்கம் கொண்டவையாக இருக்கும். எனவே இவற்றை என்ன செய்வது என்பது உலக விஞ்ஞானிகளுக்குப் பெரும் பிரச்னையாக உள்ளது.

அணு சக்தியைக் கொண்டு நீர் மூழ்கிக் கப்பல்களையும், விமானங் களையும், ஏன் மோட்டார் லாரி, ரயில்களையும் கூட இயக்கலாம். ஆனால் இவைகளிலும் அணுக் கழிவுப் பிரச்னை எழுவதால் இதற்கு விஞ்ஞானிகள் ஊக்கமளிப்பதில்லை.

அணு உலையில் வெளிப்படும் வெப்பத்தைக் கட்டுப்படுத்திப் பயன் படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். இந்த முறையைக் கண்டு பிடித்தவர் 1942 ஆம் ஆண்டில் ஃபெர்மி என்ற விஞ்ஞானி.

கட்டுப்படுத்தாத அணு சக்தியின் நாச விளைவுகளுக்கு ஜப்பானின் நாகசாகியும், ஹிரோஷிமாவும் நிரந்தர சாட்சிகள். அணுச் சிதைவுக்குப் பயன் படுத்தப்படும் மூலகப் பொருள்களின் வீரியத்தைக் குறைத்து அவற்றின் கதிர் வீச்சு விளைவுகளைக் கட்டுப்படுத்தி மருத்துவம், விவசாயத் துறைகளில் பல பிரமிக்கத்தக்க நன்மைகளை விஞ்ஞானிகள் செய்து வருகிறார்கள்.

அணுசக்தி ஒரு தீப் பொறியைப் போன்றது. இதைக் கவனமாகப் பயன் படுத்தினால் பல நன்மை களைப் பெற இயலும். கட்டு மீறினால் ஊரையே சுட்டெரித்து மனித குலத்தையே முடித்துவிடும்.

நான் போனால் போகலாம்!

ஆசிரியர் அறிவுரை கூறிக் கொண்டிருந்தார். மாணாக்கர் அவர் அறிவுரையை கேட்டுக் கொண்டிருந்தனர்.


"நல்வினை செய்தவர் சொர்க்கம் புகுவார்; தீவினை செய்தவன் நரகம் சேர்வான்" என்று ஆசிரியர் கூறினார்.

"உங்களில் சொர்க்கம் புகத்தக்கவர் யாரேனும் இருக்கின்றீர்களா?" என வினவினார் ஆசிரியர்.

ஒரு மாணாக்கன் எழுந்தான். "ஐயா! நான் போனால் போகலாம்" என்றான்.

அனைவரும் அவனை வியப்புடன் நோக்கினர். "நம்மை விட இவன் நல்வினை செய்தவனோ? நாம் போவோம் என்று கூறுவதற்கு இயலாமல் இருக்கையில், இவனுக்கு மட்டும் சொர்க்கம் புகத் தகுதி எப்படி வந்தது?" என்று நினைத்தனர்.

மாணாக்கரின் திகைப்பைப் போக்க ஆசிரியர் விரும்பினார்.



"அப்பா, சொர்க்கம் புக உனக்கு மட்டும் தகுதி எப்படி வந்தது?" என வினவினார்.

"ஐயா, அடியேன் சொர்க்கம் புகுவேன் என்று கூறவில்லையே!" என்று அடக்கத்துடன் கூறினான் அந்த மாணவன்.

அனைவரின் வியப்பும் மேலும் அதிகமாயிற்று.

"நான் போனால் போகலாம்" என்று சொன்னாய் அல்லவா?" என்றார் ஆசிரியர்.

"ஆம்" என்று கூறினான் மாணவன்.

"இப்போது அப்படிக் கூறவில்லை என்று மறுக்கின்றாயே! ஏன்?" என்றார் ஆசிரியர்.

"நான் போனால் போகலாம் என்று நான் கூறியதை இப்போதும் மறுக்கவில்லை! நான் சொன்னதன் பொருளை மாறாக எடுத்துக் கொண்டீர்கள் போலும்! நான் என்பது அகம்பாவத்தைக் குறிக்கும் அன்றோ! அகம்பாவம் உள்ளவரைத் தீவினைதானே செய்யத் தூண்டும். அகம்பாவமாகிய நான் என்ற எண்ணம் போனால், நல்வினை செய்யும் ஆர்வம் வரும். அப்போதுதான் சொர்க்கத்தின் வாசல் திறக்கும். அதைக் கருதியே 'நான்' போனால் போகலாம் என்றேன்" என்று விளக்கம் தந்தான் மாணாக்கன். அனைவரும் அவன் விடை கேட்டு அகமகிழ்ந்தனர்.

— எ. ஹரிகிருஷ்ணன், எலவனாசூர்.

வழி தெரியாதா பாட்டி?

ஜி.ப. வசந்தன்

அந்த இரயில் நிலையத்தின் முன் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் உட்கார்ந்திருந்த ரிக்ஷாக்காரர்கள், பிளாட்பாரத்தில் இரயில் வந்து நிற்பதை பார்த்ததும் பரபரப்படைந்து சவாரிக்கு ஆள் பிடிப்பதற்காக எழுந்து ஓடினர்.

கதிர்வேலுவும் தன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு, பெட்டி படுக்கைகளோடு வெளிவந்த கூட்டத்தினுள் புகுந்தான். ''எங்க சார் போகணும். நம்ம ரிக்ஷாவில் குந்துங்க சார்,'' ''பஸ்ஸ்டாண்ட் தானே ரிக்ஷாவில போகலாங்க'' என்று ஒவ்வொருவரிடம்மாகச் சென்று கோரிக்கை விடுக்கலானான். அவன் அழைப்புக்குச் செவிகொடுக்காமல் பலரும் விலகிப் போய்க் கொண்டிருந்தனர்.

கூட்டம் கொஞ்சங் கொஞ்சமாகக் கலைந்து இரயில் நிலையம் வெறிச்சோட ஆரம்பித்தது. கதிர்வேலுவுக்கு சவாரி ஒன்றும் கிடைக்கவில்லை. அவன் மனச்சோர்வுடன் திரும்பிச் செல்ல நினைத்த போது, இரயில் நிலையத்தின் வாசலைத் தாண்டி, பெரிய நார்க் கூடை ஒன்றைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ஒரு வயதான மூதாட்டி அங்குமிங்கும் பார்த்து விழித்தவாறு வெளியே வருவதைப் பார்த்தான்.

கதிர்வேலுவின் மூளைக்குள் மின்னலொன்று பளிச்சிட்டது. பார்த்த உடனேயே தெரிந்து போயிற்று, அந்த மூதாட்டி ஊருக்குப் புதியவர் என்பது.

அவன் அந்த மூதாட்டியின் அருகே ஓடிச்சென்று, ''பெரியம்மா... வாங்க.ரிக்ஷா இருக்குது.எந்த இடத்துக்குப் போகணும்?'' என்று கையிலிருந்த கூடையை உரிமையுடன் வாங்கிக் கொண்டான்.

அந்த மூதாட்டி நிதானமாக மூச்சு விட்டு, தன்னை இளைப்பாற்றிக் கொண்டு, ''புதுசா வீடுகளெல்லாம் கட்டி இருக்கே....., மணிவண்ணன் நகருன்னு..அங்க தாம்பா போகணும்'' என்று சொல்ல, அவன் முகத்தில் ஏமாற்றம் படர்ந்தது.

மணிவண்ணன் நகர், இரயில் நிலையம் இருந்த இடத்திலிருந்து சுமார்ஒன்றரைகிலோமீட்டர்தொலைவிலேயே இருந்தது. மிஞ்சி மிஞ்சிக் கேட்டாலும் நான்கு ரூபாய்க்கு மேல் கிடைக்காது. காலையிலிருந்து சவாரி ஒன்று கூடக் கிடைக்கவில்லை. இப்போது ஏதாவது பணம் சம்பாதித்துக் கொண்டு போய்த் தாயிடம் கொடுத்தால்தான் மதியமாவது கஞ்சி குடிக்கலாம். இல்லையென்றால் பட்டினி தான்.

தான் ரிக்ஷா மிதிக்கும் பணத்திற்கெல்லாம் சாராயத்தைக் குடித்து விட்டு, எப்போதும் வயிற்றுவலி வயிற்றுவலி என்று திண்ணையில் படுத்துக்கிடக்கும் தகப்பன், வேலை செய்வதற்கு உடம்பில் சக்தியில்லாமல் இரத்த சோகை பிடித்த தாய்,



"எங்க கடையில நூறு ரூபாய்க்கு எதை வாங்கினாலும் ஒரு பேனா இலவசமாத் தர்றோம்."

"நூறு ரூபாய்க்குச் சில்லறை வாங்கினாக் கூடவா?"

— சா. இரா. மணி, வந்தவாசி.

உடம்பில் ஒட்டுத் துணிகளோடு ஒரு வேளை சோற்றுக்குத் தவிக்கும் தம்பி, தங்கைகள் — இது தான் கதிர்வேலுவின் வீட்டுச் சூழ்நிலை. இதில் பள்ளிக்கூடம் செல்வது என்பது அவனைப் பொறுத்தமட்டில் ஒரு எட்டாத கனவு. மூன்றாவது வகுப்போடு அவன் பள்ளிப்படிப்பை நிறுத்தியாயிற்று. அக்கம் பக்கத்தில் எடுபிடி வேலைக்குப் போய் தினமும் ஐந்தோ பத்தோ சம்பாதித்துக் கொண்டு வருவான். அது தான் அவர்களது பசியின் கொடுமைக்கு பல நேரம் பரிகாரமாக அமைந்தது.

குடித்துக் குடித்து வயிறெல்லாம் புண்ணாகி எழுந்து நடக்கவே முடியாத நிலை தகப்பனாருக்கு உருவாகி விடவே அவர் ஓட்டிய சைக்கிள் ரிக்ஷாவை இப்போது கதிர்வேலு ஓட்டும்படி ஆயிற்று.

வெகு அருகில் இருக்கும் மணி வண்ணன் நகருக்குப் போக வேண்டும் என்று மூதாட்டி கூறியதும் பெரிதும் ஏமாற்றமடைந்தவன் சட்டென்று சமாளித்துக் கொண்டவனாக, "மணி வண்ணன் நகரா..... அது எங்கே இருக்கு?" என்று தெரியாதவனைப் போல் கேட்டான்.

"சரியாப்போச்சு... ரிக்ஷாக்காரப் புள்ள, உனக்கே தெரியாதா" என்றாள் அந்தப்பாட்டி சலிப்புடன்.

சரிதான், பாட்டி ஊருக்குப் புது ஆள் என்று நிச்சயப்படுத்திக் கொண்ட கதிர்வேலு, சற்று யோசிப்பவனைப் போல பாவனை செய்து விட்டு, "ஓகோ, புதுசா நிறைய வீடுங்க கட்டறாங்களே, அது தானே? தெரியும், தெரியும்... அது ஊருக்கு ஒதுக்குப் புறமா ரொம்ப தூரம் தாண்டியில்ல இருக்கு? ம், ஏறுங்க போகலாம்" என்றான்.

சற்று நேரம் எதையோ யோசிப்பதைப் போல தயங்கி நின்ற மூதாட்டி மெதுவாக, "தம்பி, அங்க போக எவ்வளவு பணம் கேட்பே?" என்று அவன் முகத்தைப் பார்த்தாள்.

கதிர்வேலு சற்றுக் கூடத் தயங்காமல், "வழக்கமா அங்கு போகப் பன்னிரண்டு ரூபா வாங்குவோம்" என்றான்.

"பன்னிரண்டு ரூபாயா!" என்று திடுக்கிட்டவள் "ரயில்நிலையத்துல இருந்து பத்து நிமிஷத்துல போயிடலாம்னு எம்மகன் எழுதியிருந்தானே... கொஞ்சம் பாத்துக் கேளுப்பா" என்றதும்,

"பத்து நிமிடத்துல போக என்ன பக்கமாகவா இருக்கு? சரி சரி பத்து ரூபா கொடுங்க" என்றவாறு அவன் கூடையை வண்டியில் வைத்தான்.

'தெய்வமே' என்ற முனகலுடன் ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்த பாட்டி, "பார்த்து கவனமா போப்பா" என்றவாறு பின்புறம் சாய்ந்து கொண்டாள்.

"நீங்க கவலையே படாதீங்க பாட்டி. சரியாக் கொண்டு போய் சேர்த்துருவேன்" என்ற கதிர்வேலு, ரிக்ஷாவில் குதித்தேறி விறுவிறுவென்று மிதிக்கலானான்.

ரிக்ஷா பிரதான சாலையை அடைந்ததும், மணிவண்ணன் நகர் இருந்த திசையைத் தவிர்த்து, அதற்கு நேர் எதிர்ப்புறமாகத் திருப்பி அந்த நகரின் வீதிகள் சந்து பொந்துகளுக்குள் எல்லாம் புகுந்து தன் மனம் போன போக்கில் செலுத்தினான்.

சற்று நேரத்தில் பாதை மேடாயிற்று. பலத்தைத் திரட்டிக் கதிர்வேலு அழுத்த அழுத்த ரிக்ஷா அங்

குலம் அங்குலமாக நகர்ந்தது. மேலும் அவனால் அழுத்த முடியாமல் கால்கள் சோர்ந்து போகவே, கீழே குதித்தவன் வியர்க்க விறுவிறுக்க, ரிக்ஷாவைத் தள்ளிக் கொண்டு நடந்தான். எப்படியும் பாட்டியிடமிருந்து பத்து ரூபாயை வாங்கி விட வேண்டும் என்ற ஆசையில் மூச்சைப் பிடித்துக் கொண்டு தள்ளினான்.

அந்த நட்ட நடுப் பகல் வெயிலில் அவன் பரிதாபமாக வண்டி தள்ளுவதைப் பார்த்த மூதாட்டியின் மனத்தில் இரக்கம் தோன்றியிருக்க வேண்டும். அவர் அவனிடம், ''ஏம்பா, நான் வேணும்னா கொஞ்சம் இறங்கிக்கறேன்..... மேடு தாண்டிய பிறகு ஏறலாம். பாவம், சின்னப் புள்ள... இந்த வயசுல இப்படி சிரமப்பட உனக்கு என்ன கஷ்டமோ?'' என்றாள்

கதிர்வேலு அவசரமாக மறுத்து. ''நீ உட்காரு பாட்டி.எனக்கு இதெல்லாம் பழகிப்போச்சு'' என்று மூச்சு வாங்கினான்.

''என் பேரன் வயசுல நீ இந்த மேட்டுல அல்லாட, நான் உக்காந்து வர என்னமோ போல இருக்குப்பா... பரவாயில்ல, கொஞ்ச தூரந்தானே, நடந்து வர்றேன்'' என்றவாறு பாட்டி பிடிவாதமாகக் கீழே இறங்கிக்கொண்டாள்.


இனி மணிவண்ணன் நகர் வருவது வரை இந்த மேடு தான். வயதான பாட்டி தள்ளாடியவாறு நடக்க, வெறுமனே ரிக்ஷாவைத் தள்ளிக்கொண்டு வருவதற்கும் அவன் மனம் ஒருப்படவில்லை.

அவன் எவ்வளவு சொல்லியும் பாட்டி ரிக்ஷாவில் வருவதாக இல்லை. வேறு வழியின்றி ரிக்ஷாவைத் தள்ளிக் கொண்டு சற்று தூரம் நடந்தவன்,

''நீ நடந்து வர்றதுன்னா, அப்புறம் எதுக்கு ரிக்ஷா...? நான் போறேன்'' என்றான் வீராப்பாக.

அவனை உற்று நோக்கிய பாட்டி ''அப்படின்னா பேசினபடி கூலியை வாங்கிக்கிட்டுப் போ'' என்று தன் கைப்பையிலிருந்து பத்துரூபாயை எடுத்து அவன் முன் நீட்டினாள்.

என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு கணம் தயங்கிய கதிர்வேலு, ''வேலையைச் செய்து முடிச்சுட்டுத் தான் எனக்குக் கூலி வாங்கிப்



பழக்கம்.... உன்னை நடுவழியில விட்டுட்டுப் போறதுன்னா எதுக்குக் கூலி...? நீயே வச்சுக்கோ'' என்று மறுத்தான்.

பாட்டி சட்டென்று நின்று அவன் முகத்தை வாஞ்சையுடன் பார்த்தாள். "வேலை செய்துட்டுத்தான் கூலி வாங்குவேன்னு சொல்ற உன் நேர்மையைப் பாராட்டறேன். இப்படி, செய்யற வேலையை திருத்தமா செய்யணும்னு நினைக்கிற உனக்கு, அடுத்தவங்களை ஏமாற்றணும் எங்கிற எண்ணம் நிச்சயமா இருக்கக் கூடாது இல்லியா?'' என்று கேட்டவாறு மேலே நடக்கலானாள்.

கதிர்வேலுவுக்கு ஒரே வெட்கமாகப் போயிற்று. தன்னுடைய தந்திரத்தைப் பாட்டி புரிந்து கொண்டு விட்டாள் என்று நினைத்தவன், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''பாட்டி நீங்க சொல்றது உண்மை தான். ஆனா, இப்ப வண்டியில் ஏறுங்க. மணிவண்ணன் நகருக்கு ரொம்ப தூரம் இருக்கு'' என்றான்.

அவனைப் பார்த்து பாட்டி புன்முறுவலுடன் ''ஆமாம்பா, தப்பான வழியில சுத்திக்கிட்டு வந்தா ரொம்ப தூரந்தான் இருக்கும்'' என்றவாறு மீண்டும் தன் நடையைத் தொடர்ந்தாள்.

கதிர்வேலுக்குப் புரிந்து போயிற்று பாட்டி ஊருக்குப் புதியவள் அல்ல என்பது. பின் ஏன் தெரியாதது போல் பாவனை செய்தாள்! ''அப்ப உனக்கு மணிவண்ணன் நகருக்கு வழி தெரியுமா?'' அதை ஏன் முதல்லேயே சொல்லலை?'' என்று தலை குனிந்தவாறு கேட்டான்.

''நல்லாவே தெரியும். பக்கத்துல இருக்கிற இடத்துக்குப் பத்து ரூபா கேட்டியே....! சரி, என்னத்தான் செய்யப் போறே பார்க்கலாம்னு தான் பேசாம இருந்தேன். ஒரு நாணயமான மனிதனா நீ வாழணும்னா, வெறும் உழைப்பு மட்டும் போதாதுப்பா, உண்மையும் இருக்கணும். உன் மனசுல விஷம் போல இந்த ஏமாற்றுகிற நினைப்பு விழக் கூடாது பாரு. அதைச் சுட்டிக் காட்டணும்னு தான் முதல்ல உண்மையைச் சொல்லலை'' என்றாள் பாட்டி.

கதிர்வேலு ஒரு நிமிடம் தன் தகப்பனாரை நினைத்துக் கொண்டான். உண்மையற்ற அவரது மனப்போக்கால் தன் குடும்பம் அனுபவிக்கும் இன்னலை நினைத்தான். நேர்மையற்ற அவரது வாழ்க்கையால் அவருக்கும் பிறருக்கும் எத்தனை துன்பங்கள்!

சற்று நேரம் மௌனமாக நின்ற கதிர்வேலு சட்டென்று ரிக்ஷாவைத் திருப்பி நிறுத்தினான். பாட்டி இப்ப வந்து வண்டியில் ஏறுங்க, சரியான வழி எதுன்னு புரிஞ்சுக்கிட்டேன். இனி இந்த வண்டி தப்பான வழிக்குப் போகாது,'' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்த பாட்டி மீண்டும் வந்து ஏறிக் கொள்ள கதிர்வேலு நிதானமாக ரிக்ஷாவை மிதிக்கலானான். ரிக்ஷா சரியான வழியில் நடைபோட்டது.




பெரு நாட்டில் கம்பா எனப்படும் பழங்குடியினருக்கு கண்கள் எல்லாம் தலைகீழாகவே எல்லாவற்றையும் காண்கின்றன. இது அவர்களுக்குப் பழக்கமாகி விட்டதால் மனிதர்களும், விலங்குகளும் தலைகீழாக நடப்பது அவர்களைக் குழப்புவதில்லை. அவர்களிடம் ஏதாவது பேப்பரைக் கொடுத்தால் அதிலுள்ள எழுத்துக்களை தலைகீழாக திருப்பிப் படிக்கின்றனர்!

— எம். ஆனந்தன், வந்தவாசி.

ஒட்டகம் நீரைச் சேமிக்குமா?

ரேவதி



பேண்டு இசை மெல்லியதாக முழங்கியது.

வட்ட வடிவ அரங்கத்தின் ஒரு மூலையில், உயர்ந்து நின்ற கம்பிக் கூண்டுக்குள் 'ரிங் மாஸ்டர்' புலி சிங்கங்களைக் கொண்டு வந்து ஒரே வரிசையில் நிற்க வைத்திருந்தார். அதற்கு நேர் எதிரே யானைகள் ஒன்றின் மேல் ஒன்றாக முன் கால்களைத் தூக்கி வைத்து வரிசை வகுத்தன. ஒட்டகங்களும் குதிரைகளும் கால்களால் தாளம் போட்டு நின்றன. நடுவிலே வண்ண வண்ண உடையணிந்த பார் விளையாட்டுக்காரர்கள், சைக்கிளில் மாயா ஜாலம் புரியும் பெண் கலைஞர்கள், சட்டை போட்ட நாய்கள், கோமாளி என்று சர்க்கஸின் எல்லாக் கலைஞர்களும் அணியணியாக நின்று கால் தாளம் போட்டனர்.

ஒலிபெருக்கி பேசியது.

"காட்சியைக் காண வந்துள்ள பெரியோர்களே, தாய்மார்களே, குழந்தைகளே... உங்கள் எல்லோருக்கும் வணக்கம். இன்னும் ஒரு மாத காலம் இங்கே இருப்பதாகத்தான் திட்டம் போட்டோம். ஆனால், எதிர்பாராத விதமாக ஏற்பட்டுவிட்ட தண்ணீர்ப் பஞ்சம் காரணமாக, நாங்கள் இன்றோடு உங்களிடம் தற்காலிகமாக விடைபெறுகிறோம். எங்களுக்கு ஆதரவு காட்டி ஊக்கமளித்த உங்கள் அன்புக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறோம்."

குடிநீர்ப் பஞ்சம் காரணமாக சர்க்கஸ் முகாம் அந்த ஊரிலிருந்து கிளம்பியது. அடுத்த நாள் காலையிலேயே கூடாரத்தைப் பிரிக்கும் பணி தொடங்கியது. கூடாரப் பொருள்கள், 'காலரி' பலகைகள், கொம்புகள், மரச் சாமான்களெல்லாம் லாரிகளில் ஏற்றப்பட்டன. கூண்டில் இருந்த கொடிய விலங்குகள் கூண்டோடு பாதுகாப்பாக மூடு லாரிகளில் ஏற்றப்பட்டன.

மேனேஜர், அச்சுதனையும் கரீமையும் அழைத்தார். அச்சுதன் யானைப் பாகன். கரீம், ஒட்டகங்களைக் கவனித்துக் கொள்பவர்.

"ஐயா, புது இடம் சேர்ந்து, கூடாரமடித்து, எல்லா ஏற்பாடுகளையும் செய்து காட்சியைத் தொடங்க இருபது நாட்களுக்கு மேலாகப் போகிறது. எங்களுக்கு என்ன அவசரம்? நாங்கள் யானைகளையும், ஒட்டகங்களையும் நடை பயணமாகவே அழைத்து வந்து விடுகிறோம்," என்று அனுமதி வேண்டினார் அச்சுதன்.

"மிருகங்களைப் பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம். கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம்" என்று ஒத்துப் பாடினார் கரீம்.

"எனக்கு இந்த உத்தரவாதம்தான் முக்கியம். தினமும் ஒரு கார்டு தவறாமல் எழுதிப் போடணும். இன்றைக்கு இருபதாம் நாள் அங்கே வந்துவிட வேண்டும்" என்று உறுதியாகக் கூறி

அனுமதித்தார் மேனேஜர்.

அம்மா, அப்பா, குட்டி என்று மூன்று யானைகளும், மூன்று ஒட்டகங்களும் நடைபயணமாகக் கிளம்பின.

கழுத்திலே 'டிங்டாங்' மணியும், நெற்றியில் விபூதிப் பூச்சும், முதுகில் வண்ணப் பட்டாடையும் அழகு செய்ய அசைந்தாடி வந்த யானைகளும், கால்களில் சலங்கை ஒலிக்க, நெற்றியில் பதக்கம் மின்ன, வண்ணப் பட்டாடை போர்த்தி ஆடி வந்த ஒட்டகங்களும் ஊர் மக்களின், குறிப்பாகக் குழந்தைகளின் அன்பான வரவேற்பைப் பெற்றதில் அதிசயம் ஏதுமில்லை.

அரிசி, கோதுமை, பழம், தேங்காய் மூடி, வெல்லம், அவல், கடலை என்று போகின்ற இடமெல்லாம் உணவு கிடைத்தது. சில ஓட்டல்களில் யானைகளுக்குச் சாதம் கூடப் போட்டு அன்பு காட்டினார்கள். வரும்படிக்கும் பஞ்சமில்லை. இதையெல்லாம் எதிர்பார்த்துத்தானே அச்சுதனும், கரீமும் நடைபயணமாகக் கிளம்பினார்கள்!

இரண்டு நாட்கள் ஓடின. தங்கள் புத்திசாலித்தனத்தை எண்ணி இருவரும் மகிழ்ந்து கொண்டனர். மூன்றாவது நாள், புதுப் பிரச்னை வந்து விட்டது. யானைகளின் பிரும்மாண்டமான உருவங்களைப்பார்த்துமிரண்ட பசுமாடு ஒன்று தறிகெட்டு ஓடி, நாலைந்து பேரை முட்டித் தள்ளி, காயப்படுத்தி விட்டது! அதனால், அவைகளை ஊர்த் தெருக்களில் ஊர்வலமாக நடத்திக் கொண்டு செல்ல போலீஸ் தடை விதித்தது!

அச்சுதனுக்கும் கரீமுக்கும் பெருத்த ஏமாற்றம். அதுவரை வளங்கொழிக்கும் தெய்வங்களாகத் தோன்றிய மிருகங்கள் அதற்கு மேல் அவர்களுக்குப் பெருஞ்சுமையாகி விட்டன! ஊருக்குள் போக முடியாததால் இலவசமாகக் கிடைத்த உணவு வகைகள், குடிநீர், வரும்படி எல்லாம் போச்சு! குடிதண்ணீர் கூடக் கிடைக்காமல் படாதபாடு பட்டார்கள். குறிப்பாக யானைகள் பெரிதும் பாதிக்கப் பட்டன. போதிய குடிநீரும் இல்லாது, தேவையான அளவு உணவும் இல்லையென்றால் அவை மட்டும் என்ன செய்யும்?

அன்று இரவுப் பொழுதை ஏதோ ஓர் ஊருக்கு வெளியே இருந்த மண்டபத்தில் கழித்தனர். அச்சுதனும், கரீமும் களைப்பால் உறங்கி விட்டனர். ஆனால், யானைகளும் ஒட்டகங்களும் உறங்கவில்லை.

"சரியான உணவும், குடிநீரும் கிடைத்து நான்கு நாட்களாகப் போகிறது. நாம் இப்படித் தவிக்கிறோம். ஆனால்,இந்த ஒட்டகங்கள் அலட்டிக்கவே இல்லையே?" என்று அதிசயத்துடன் கூறியது பெண் யானை.

அதைக் கேட்டுக் கொண்டு அம்மா ஒட்டகத்தால் சும்மா இருக்க முடியவில்லை.


"உங்களுக்குத்தான் பகாசுர வயிறு. போற இடமெல்லாம் கிடைச்சதையெல்லாம் தின்னு, தண்ணீர் குடிக்கிறீங்க. எங்களால் ஒரு வாரம் கூடத் தண்ணீர் இல்லாமல் இருக்க முடியும். உங்களைப் போல அசுரப் பசி எங்களுக்கு இல்லே."


"யாரைப் பார்த்துப் பகாசுர வயிறுன்னு சொன்னே? எப்படி அசுரப் பசின்னு சொல்லுவே?" என்று மூன்று யானைகளும் கோபாவேசமாகத் தாக்கக் கிளம்பின. ஒட்டகங்கள் பயந்து ஓட, யானைகள் துரத்த, ஏக கலாட்டாவானது. எரிச்சலோடு தூக்கம் கலைந்து எழுந்த அச்சுதனும், கரீமும் பிரம்பை எடுத்துத்

"அமாவாசைக்கும், பௌர்ணமிக்கும் என்ன வித்தியாசம்?"

"அமாவாசைன்னா ராத்திரி டிஃபன் பண்ணுவாங்க; பௌர்ணமி சாப்பாடு தான் சார்!"

— சீர்காழி வி. ரேவதி.





தங்கள் மிருகங்களைச் செமை அடி அடித்து அடக்கினர். இரண்டும் ஒரே இடத்தில் இருந்தால் மறுபடி சண்டை போடும் என்று எண்ணிய கரீம், ஒட்டகங்களோடு சற்றுத் தொலைவில் சென்று படுத்துக் கொண்டார்.

தாய்க்கு அருகே வந்து ஒண்டிக் கொண்டது குட்டி ஒட்டகம்.

"ஏம்மா, இந்த யானைப் பயல் மட்டும் எது கிடைச்சாலும் என்ன கிடைச்சாலும் சாப்பிடறான். அண்டா அண்டாவாத் தண்ணி குடிக்கிறான். அப்படியும் தாகம் தாகம்கிறானே...! நமக்கு அப்படிப் பசியும் எடுப்பதில்லே, தாகமும் எடுப்பதில்லையே?" என்று கேட்டது குட்டி ஒட்டகம்.

"அதுதான் ஆண்டவன் நமக்குக் கொடுத்திருக்கும் பரிசு.நாம் வசிக்க வேண்டிய இடம் மணல்பாங்கான பாலைவனம். வெயில் அனலா தகிக்கும். அந்த வெப்ப நிலைக்கு ஏற்ற மாதிரி நம்ப உடம்பை ஆண்டவன் படைத்திருக்கிறான். மனிதர்களுக்கும் மற்ற விலங்குகளுக்கும் வெயிலைத் தாங்க முடியாது. வியர்வை அருவியாய்ப் பெருகும். உடம்புல இருக்கிற நீர்ப்பகுதியெல்லாம் வியர்வையா வெளியே வந்தால் தாகம் எடுக்கத்தானே எடுக்கும்? தண்ணி வேணும்ங்கிறதுக்கு அறிகுறிதான் தாகம் எடுப்பது" என்றது அம்மா ஒட்டகம்.

"அப்ப, நமக்கு மட்டும் ஏம்மா வியர்ப்பதில்லை?"

"நமக்கும் வியர்க்கும். ஆனால், அதற்கு மிகக் கடுமையாக வெயிலடிக்க வேண்டும். பாலைவனம் போன்ற வறண்ட, மணற்பாங்கான பகுதிகளில்தான் அவ்வளவு கடுமையான வெப்பம் இருக்கும். சூழ்நிலையின் வெப்பத்திற்கு ஏற்றபடி நம்மால் நம்முடைய உடல் வெப்பத்தை அதிகரித்துக் கொள்ள முடியும். இதனால்தான் நமக்குவியர்வைஉண்டாவதில்லை. இது நமக்கு மட்டுமே உள்ள இயற்கையின் நன்கொடை. அதோடு, நம் முதுகில் உள்ள உரோமப் படலம் வெப்பத்தை நம் உடலுக்குள் புக அனுமதிப்பதில்லை. வியர்வை இல்லை என்றாலே உடம்பில் நீருக்குச் செலவு இல்லையே! தாகம் எப்படி எடுக்கும்?"

"இரண்டு நாட்களுக்கு முன்பு நாம் சாப்பிட்டதுதானே? அப்புறம் தண்ணீர் கூடக் குடிக்

கவே இல்லையே?''

''உணவு கிடைக்கும் போது நாம் நன்றாகத் தேவைக்கு அதிகமாகவே சாப்பிடுவோம். அதிகப்படியான உணவை நாம் கொழுப்பாக.மாற்றித் திமிலில் சேர்த்து வைக்கிறோம். உணவு கிடைக்காத போது இந்தக் கொழுப்புச் சேமிப்பு நமது உயிர் செல்களுக்கு உதவி அவற்றை இயங்க வைக்கும். நீயே பார்த்திருப்பாயே... அப்பாவின் திமிலும், என் திமிலும் நாம் சர்க்கசை விட்டுக் கிளம்பும் போது இருந்ததைவிட மெலிந்து போயிருப்பதை.''

''அப்படின்னா, தண்ணீர் கிடைக்காத போது, இந்த மனிதர்கள் நம்மைக் கொன்று நம் உடம்பில் உள்ள தண்ணீர்ச் சேமிப்பை எடுத்துக் கொண்டு விடுவார்களா?''

அம்மா ஒட்டகம் சிரித்தது.

''நீ மிகவும் பயந்து போயிருக்கிறாய். வெப்பத்தை உடலுக்குள் புக விடாது. வியர்வை பெருக விடாது நாம் காக்கும் நீர், நமது உடலை நல்ல படியாக வைத்திருப்பதற்காகத்தான். அது மற்றவர்களுக்குப் பயன்படாது. அப்படி எந்த முட்டாளாவது தண்ணீருக்காக நம்மை வெட்டினால், அவன் ஏமாந்துதான் போவான். ஏன் தெரியுமா? வயிற்றில் சேர்த்து வைக்கும் நீர் அடர்த்தியானது. பச்சையாக அருவருப்பான நாற்றமுடன் இருக்கும். இந்த நீரைப் பருகி ஒருவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வது என்பது வெறும் கட்டுக் க்தை தான்.''

பாதி இரவில் மணற்காற்று வீசியது. கண்களைத் திறக்க முடியவில்லை. கரீம், தாங்க முடியாமல் கூரை வீட்டின் தாழ்வாரத்தில் அனுமதி கேட்டு முடங்கிக் கொண்டார்.

''என்னம்மா இது! நம்மால் காற்றைத் தாங்க முடியுது. இந்தக் கரீமால் முடியலையே?'' என்று கேட்டது ஒட்டகக் குட்டி.

''நம்ம மூக்கில் ஒரு சவ்வு இருக்கிறது. அதை மூடிக் கொண்டு விட்டால், இந்தக் காற்று என்ன...? இதைப் போன்ற இதன் அப்பன், தாத்தா காற்றுக்குக் கூட நாம் பயப்பட வேண்டாம்,'' என்றது அம்மா.


அப்பா ஒட்டகம் திடீரென்று முனகியது. அம்மா நெருங்கிச் சென்று விசாரித்தது.

''அடிக்கும் போது கண்மண் தெரி

முறமும் சல்லடையும்

தேவபுரி மன்னன் தன் குரு சொல்வதையே கேட்பான். ஒரு முக்கியமான வேலைக்காக அரண்மனைக்குக் கூடுதலான ஒரு பணியாளர் வேண்டுமென மன்னன் அறிவித்திருந்தான். வந்திருந்தவர்களில் இரண்டு பேரை மன்னன் தேர்வு செய்தான். அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற பொறுப்பைக் குருவிடம் ஒப்படைத்தார்.

குரு அவர்களோடு பேசி முடித்து விட்டு



ஒருவனிடம் முறமும், மற்றவனிடம் ஜல்லடையும் தந்து மன்னனிடம் அனுப்பினார். குருவின் முடிவு மன்னருக்கு விளங்கவில்லை. மன்னர் மந்திரியிடம், ''குருவின் முடிவு என்ன என்பதை உங்களாலாவது ஊகிக்க முடிகிறதா?'' என்று கேட்டார். மந்திரி சற்று அவகாசம் அளியுங்கள். முடிவைக் கூறி விடுகிறேன் என்றார்.

மந்திரியின் வீட்டில் அவரது மனைவி நெல்லில் உள்ள உமியை முறத்தின் மூலம் புடைத்து எடுப்பதைப் பார்த்தார். பிறகு இடித்த மாவை ஜல்லடையால் சலிப்பதைக் கவனித்தார். குருவின் முடிவு என்ன என்பது மந்திரிக்கு விளங்கி விட்டது.

மன்னரிடம் சென்று முறம் வைத்திருப்பவனையே வேலைக்கு அமர்த்துங்கள் என்றார். ஏன்? என அரசர் கேட்டார். 'அதற்கு மந்திரி முறம் வைத்திருப்பவன் தீமையை நீக்கி விட்டு நன்மையை ஏற்பவன். சல்லடை வைத்திருப்பவன் நன்மையை ஒதுக்கி விட்டு தீமையைக் கடைபிடிப்பவன் என்றார்.

மன்னனுக்கு ஒரே மகிழ்ச்சி!

— ஆ. ஸ்ரீதர், வெள்ளக்குட்டை.

யாமல் அடித்து விட்டார் இந்த கரீம். உடம்பில் இரத்தம் கூட வருகிறது. எரிச்சலெடுக்கிறது.''

''இந்தக் கரீமுக்கு ஏதாவது தண்டனை தர வேண்டும். என்ன செய்யலாம்?'' என்று யோசித்த அம்மா ஒட்டகம், குட்டியை அழைத்தது.

''நான் போய் கரீம் படுத்திருக்கும் பனை ஓலைக் கூரையைத் தின்னப்போகிறேன். நீ போய், அதோ அந்த ஓலைப் பாயைத் தின்றுகொள். உங்க அப்பாவைக் கண்மண் தெரியாத அளவுக்கு அடித்த அவருக்கு நல்ல தண்டனை கொடுப்போம்,'' என்றது அம்மா ஒட்டகம்.

அம்மா ஒட்டகம் பனை ஓலைக் கூரையைத் தின்ன, குட்டி ஒட்டகம் ஓலைப் பாயைத் தின்னத் தொடங்கியது! பாவம் கரீம்!

அறிவியல் உண்மைகள் :

* **பசி வந்துவிட்டால் ஒட்டகம் எதை வேண்டுமானாலும் தின்னும். விதிவிலக்கு எதுவும் இல்லை.**
* **சூழ்நிலைக்கு ஏற்ப, தன் உடல் வெப்பத்தை உயர்த்திக் கொள்ளவோ, குறைத்துக் கொள்ளவோ ஒட்டகத்தால் முடிகிறது. அதன் உடலின் முதுகு ரோமங்கள் சூட்டையோ குளிரையோ உடலுக்குள் விடாமல் பாதுகாக்கிறது. இதனால், அதன் உடலின் நீர், வியர்வையாக வெளியேறிச் செல்லாது சேமிக்கப்படுகிறது. இந்தச் சேமிப்பால் மற்றவர்களுக்குப் பயன் இல்லை. பயன்படுத்தவும் முடியாது. ஒட்டகத்திற்கு மட்டுமே பயன். 105 டிகிரிக்குமேல்தான் இதன் உடல்வியர்க்கும்!**
* **மிகுதியான உணவுப் பொருள், கொழுப்பாக்கப்பட்டு இதன் திமிலில் சேர்க்கப்படுகிறது. உணவு கிடைக்காத போது இது பயன்படுத்தப்படுகிறது.**
* **நீர் கிடைக்கும் போது ஒட்டகம் பத்து நிமிடங்களில் 90 லிட்டர் அளவு நீரைக் கூடத் தன் இரைப்பையில் சேர்த்து வைத்துக் கொள்ளும்.**
* **இதன் மூக்குத் துளையில் உள்ள சவ்வு, மணற் காற்று உள்ளே புகாமல் இதைக் காக்கிறது.**



பரலோகம் வா!

பணக்காரர் ஒருவர் கோவில் ஒன்று கட்டினார். அதற்குத் தினம் பூஜை செய்ய ஒரு பூசாரியையும் நியமித்திருந்தார். பணக்காரர் பல தொழில்களைச் சிறப்பாகச் செய்பவர். நிறைய வருமானம் வந்தது. கணக்குகளை முடித்து விட்டுத் தினம் இரவு தாமதமாகத்தான் வருவார். உடனே கோவிலுக்குச் சென்று உள்ளம் உருக 'அப்பனே, என்னை நல்ல நிலையில் வைத்து சந்தோஷமான வாழ்வை அளித்திருக்கிறாய். அந்நிலை குறையாமல் அப்படியே என்னை உன்னிடத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று வேண்டுவார்.

பூசாரி தினமும் அவருக்காகக் கோயிலில் காத்திருந்து, அவர் வந்து விட்டுச் சென்ற பிறகுதான், கோயிலைப் பூட்டி விட்டுத் தன் வீடு செல்ல வேண்டும். பணக்காரர் தாமதமாக வருவதால் தினமும் தொலைவில் உள்ள தன் வீட்டிற்கு இரவில் தாமதமாகச் செல்லும்படி இருந்தது பூசாரிக்கு. அவர் ஒரு ஐடியா செய்தார்.

அன்று பணக்காரர் வழக்கம் போல் இரவு வெகு நேரம் கழித்துக் கோவிலுக்கு வந்தார். கோவிலில் பூசாரியைக் காணவில்லை. வெளியில் எந்த வெளிச்சமும் இல்லை. கோவிலுக்குள் திருவிளக்கின் ஒளி மட்டுமே தெரிந்தது. பூசாரி வெளியில் சென்றிருக்கலாம் என்று நினைத்து அவர் எப்போதும் தான் வேண்டுவதையே சொல்லிக் கடவுளிடம் வேண்டினார்.


என்றும் இல்லாத அதிசயமாக விக்கிரகத்தில் இருந்து குரல் வந்தது! "அப்படியே ஆகட்டும். நாளை இதே நேரத்தில் நீ இங்கு வந்தால் யாம் புஷ்பப் பல்லக்கு அனுப்புகிறோம். அதில் நீ ஏறிப் பரலோகம் வந்து விடு'' என்று ஒலித்தது. சுவாமியின் கழுத்தில் இருந்த பூ மாலையில் இருந்து மலர் ஒன்று உதிர்ந்தது!

மறுநாள் பணக்காரர் இருட்டும் முன்பாகக் கோவிலுக்கு வந்தார். பூசாரி இருப்பதால் வாய் விட்டுக் கூறாமல், மனத்திற்குள்ளாகவே சுவாமியிடம், 'அப்பனே என்னை மன்னித்து விடு. வயதாகி, மூப்படைந்த காலத்துடன் வரும் இறப்பையே விரும்புகிறேன். நான் இத்தனை நாள் வேறுவிதமாக உன்னிடம் வேண்டியதற்கு மன்னித்து விடு' என்றார். அன்று முதல், நேரத்துடனேயே கோவிலுக்கு வந்தார்.

பூசாரியும், இருட்டும் முன்பே, சீக்கிரமாகத் தன் வீடு போய்ச் சேர்ந்தார்.

— எல். அமுதா, மன்னார்குடி.

பூந்தளிர்க் கவியரங்கம்



திருவிழா

எங்கள் ஊரில் திருவிழா
எட்டு ஊரும் சேர்ந்ததே!

பார்த்த இடத்தில் பட்சணம்
ஈயைக் கொஞ்சம் விரட்டணும்!

அழகாய்ச் சுற்றும் ராட்டினம்
அது ஆகாயத்தைத் தொட்டதே!

பாப்பா வாங்கிய பலூனும்
பத்தே நொடியில் வெடித்ததே!

தம்பி விரும்பிய கடிகாரம்
தூக்கி எரியத் தூண்டுதே!

சிறியோர் பெரியோர் ஒன்றாக
சிரித்து மகிழக் காட்சிகள்

ஆண்டுதோறும் தப்பாமல்
நடக்கும் ஊர்த் திருவிழா!

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

தம்பி



கடமை ஒன்னே பெரிதென்ற
கருத்தை ஏற்கணும் தம்பி,
மடமை எண்ணம் நீக்கிவிட
மறக்க வேண்டாம் தம்பி!


பெரியோர் கருத்தை ஏற்றுத்தான்
பெருமைகள் சேர்க்கணும் தம்பி,
வறியோர் யாரையும் கண்டாலே
வழங்கணும் உதவிகள் தம்பி!

உழைக்க நன்கு கற்றுத்தான்
உலகில் உயரணும் தம்பி,
பனையாய் உயரே வளர்ந்தாலும்
பணிவாய் இருக்கணும் தம்பி!

அன்பே இறைவன் என்றேதான்
அருளைப் பெறணும் தம்பி,
பண்பில் சிறந்த மனிதனெனப்
பாரோர் போற்றணும் தம்பி!

— தி. அறிவரசு, திருச்சி — 7.

பூனையாரே!



பூனையாரே, பூனையாரே,
எங்கே போறீங்க?
பானைகளை உருட்டிவரப்
பதுங்கிப் போறீங்க!

உருண்ட விழியைத் திறந்து வைத்து
உற்றுப் பார்ப்பீங்க!
உரியில் வைத்த பாலும் மோரைத்
தொட்டுப் பார்ப்பீங்க!

வலிமை தாழ்ந்த எலியைக் கண்டால்
பாய்ந்து போவீங்க;
வன்மை மிக்க நாயைக் கண்டால்
பயந்து போவீங்க!

'மியாவ், மியாவ்' என்றே இசை
மீட்டிப் பார்ப்பீங்க;


மென்மையான உடலை மெல்ல
உயர்த்திப் பார்ப்பீங்க!

புலிகள் போல வரிகள் உடலில்
போட்டுக் கொண்டீங்க;
புதுமையான போலி வேஷம்
மாட்டிக் கொண்டீங்க!

பூனையாரே, பூனையாரே
உழைத்து வாழுங்க!
பூவுலகில் இன்பமுடன்
நிலைத்து வாழுங்க.

— மாத்தூர் பரமசிவம்.

செய்வது என்ன?



பசுவை வளர்த்தவர்க்கு — அது
பாலைச் சுரந்து தரும்.
பயிரை வளர்த்தவர்க்கு — அது
பயனை விளைந்து தரும்.

தென்னை வளர்த்தவர்க்கு — அது
தேங்காய் ஈன்று தரும்.
தேனீ வளர்த்தவர்க்கு — பூவின்
தேனைத் திரட்டித் தரும்.

தம்மை வளர்த்தவர்க்கு — இவை
திரும்ப நன்மை செய்யும்.
நம்மை வளர்த்தவர்க்கு — திரும்ப
நாம் செயும் நன்மை என்ன?

பெற்று வளர்த்து விட்ட — நம்
பெற்றோர் மனங்குளிர
பொற்புறள்ள பிள்ளை யென்று-பிறர்
போற்றி உரைப்ப தன்றோ?

— சி. மாணிக்கம், கீழச்செருவாய்.

ஆசைகள்!




துள்ளி துள்ளி நீயும்
ஆட வேண்டும் — நானும்
பள்ளி சென்று நன்றாய்ப்
படிக்க வேண்டும்!

நல்ல நல்ல பாதையில்
நடக்க வேண்டும் — பெரியோர்
சொல்லுக்கு என்றும் கீழ்ப்
படிய வேண்டும்!

உதவிடும் எண்ணம் மனத்தில்
பிறக்க வேண்டும் — என்றும்
உண்மை நிலைக்க நீயும்
உழைக்க வேண்டும்!

தாரகை, பெங்களூர் — 13.

என்ன வேண்டும்?



அன்பின் வழி நடந்து
அல்லல் தனைக் கடந்து
இன்பம் பெருகிடவே,
எல்லோரும் வாழ வேண்டும்.

சாதிப் பிரிவை நீக்கி
சமயப் பூசலைப் போக்கி.
பேதம் இல்லா வாழ்வில்
பெருமிதம் கொள்ள வேண்டும்.

நாட்டுப் பற்று டனே
நயம் பயக்கும் நன்மக்கள்
காட்டும் பாதையிலே
கடமையைச் செய்ய வேண்டும்.

— கே. எம். எஸ். தாவூது.
திருநெல்வேலி — 7.

யானைமுகா!



ஆனை முகனே ஓடிவா — நான்
ஆசை கொண்டேன் ஆடிவா!
பானை வயிறா பாடுவேன் — உன்னைப்
பார்த்து மகிழவே நாடுவேன்.

அகன்ற காதுடன் ஓடிவா — நீ
அழகு தோன்ற ஆடிவா!
அகில மெங்கும் காக்கவே — உண்மை
அன்பு நெறியை ஆக்கவே.

சிவனின் மகனே சிரித்து வா — எனக்குச்
சிறந்த வரமே கொடுக்கவா!
அவனி எல்லாம் சிறக்கவே — இந்த
அடியேன் உன்னை நினைக்கவே.

கந்தன் தமையா ஓடிவா — எனக்குக்
கல்வி அறிவை ஊட்டவா!
உந்தன் ஞானம் கூட்டிவா — நெஞ்சில்
உயர்ந்த ஞானம் பூட்டவா.

— பெ. கண்ணன், அப்புக்கோடு.



அருமையே!

பொன் வண்ணத்தில்பச்சையாய்
பூ கண் கள்நிறை தோகையால்
ஆண் ம யில்கள் கூடியே
ஆடும் சூழல் அருமையே.

வேனிற் காற்று வீசியே
விண்ணும் கறுத்துப் போனது.
காணி நிலமே சிரித்தது;
கவலை யாவும் மறைந்தது.

தூறல் மழையும் பயிர்களை
தொட்டுத் தொட்டு மகிழ்ந்தது.
கீறல் மின்னல் வானத்தில்
கிழித்துக் கொண்டு விரைந்தது.

அணைகள் யாவும் நிரம்பியே
ஆறு களிலே பாய்ந்தது.
இணையி லாத இன்பமாய்
எண்ணி மக்கள் மகிழ்ந்தனர்.

— கொ. மா. கோ. இளங்கோ,
உத்தரப்பிரதேசம்.

யானை வருது!



கோவில் யானை வருகுது — தெருக்
கோடியிலே வருகுது!
அசைந்து அசைந்து வருகுது — மணி
ஆடி ஆடி ஒலிக்குது!

தும்பிக்கையை நீட்டுது — அது
தொட்டு ஆசி வழங்குது!
பழத்தை வாங்கித் தின்னுது — அது
பழக்கமாகிப் போனது!

நெற்றி நிறையத் திருநீறு — அதன்
நடுவில் வைத்த குங்குமம்!
இரவியும் மதியும் ஒளிருது — கண்
இமைக்கு மேலே வரைந்தது!

அரிய பெரிய உருவந்தான் — அதன்
அண்மை யார்க்கும் அச்சந்தான்!
அங்கு சத்தால் அடக்குவார் — அதன்
அன்பைப் பெற்ற பாகனார்!

தினமும் யானை வருகுது — எங்கள்
தெருவெல்லாம் பார்க்குது!
வயது மறந்து போகுது — அதை
வேடிக்கையாய்ப் பார்க்கையில்!

— ஜி. மீனாட்சி, காஞ்சிபுரம்.

சிலுவை சுமந்தவரே!



பெத்லகம் நகரில் பிறந்தவரே!
பேரருள் ஒளியாய்ச் சிறந்தவரே!
கைத்தொழில் தச்சுப் புரிந்தவரே!
கடவுளாய் நெஞ்சுகள் நிறைந்தவரே!

கொடியவர் சவுக்கைச் சுழற்றிடவே,
கொத்தடி மையெனச் சிலுவையினை
நெடிய தொலைவரை சுமந்தபடி,
நேயக் கனிவுடன் கடந்தவரே!

பாவிகள் எனப்படும் மனிதரெலாம்
பண்படும் வகையில் சிலுவையிலே
ஆவியை நீத்த ஆண்டவரே!
அவர்க்கென உயிர்ப்புப் பூண்டவரே!

தன்வழி யாவரும் தொடர்ந்துவர,
தலையில் முள்முடி அணிந்தவரே!
அன்பு நெறிதனில் நின்றவரே!
அதனால் உலகினை வென்றவரே!

— கே. கிருஷ்ணமூர்த்தி,
கடலூர் — 4.

பாம்பு

பாம்பு பாம்பு பாம்பு!
பயத்தை ஊட்டும் பாம்பு!

கயிறு போன்ற பாம்பு!
கடிக்கத் தாவும் பாம்பு!

தரையில் ஓடும் பாம்பு!
தவளை பிடிக்கும் பாம்பு!

ஊர்ந்து செல்லும் பாம்பு!
ஓடி ஒளியும் பாம்பு!

கால்கள் இல்லா பாம்பு!
காட்டில் திரியும் பாம்பு!

வளையில் வாழும் பாம்பு!
விஷத்தைக் கக்கும் பாம்பு!

உழவர் நண்பன் பாம்பு!
உடம்பு நீண்ட பாம்பு!

நாக்கை நீட்டும் பாம்பு!
நமக்கு "நல்ல பாம்பு"!

—அனக்குடி சீதா, தஞ்சாவூர்.



மாயச்சட்டை

ஜப்பானின் வட கோடி. ஆற்றுக்கு அப்பாலுள்ள தனித்த பகுதியில் ஒரு சிறு கிராமம். வெகுகாலத்திற்குமுன்னால் அங்கு ஒரு கோமாளிச் சிறுவன் இருந்தான். அவன் ஏதாவது குறும்புகள் செய்து கொண்டே இருப்பான்.

ஒருநாள் அவன் ஒரு பூதத்தைச் சந்தித்தான். அதனிடமும் தன் கை வரிசையைக் காட்ட நினைத்தான். அந்த பூதத்திற்கு நீண்ட பெரிய மூக்கு. கறுப்புத் தொப்பி. அதைச் சுற்றிப் பட்டுக் கயிறு. தொள தொளவென்று தொங்கும் நீண்ட வைக்கோல் சட்டை. கழுத்துப் பாகத்தில் சட்டையைச் சுருக்கி ஒரு சணல் கயிறு. காலில், மரப் பாதணிகள். இவ்வாறு அந்த பூதம் வினோதமாகக் காட்சி அளித்தது. அது அனாவசியமாக வம்புக்குப் போகாது. ஆனால் தன்னிடம் வரும் வம்பையும் சும்மாவிடாது!

அப்போது சிறுவன் ஒரு ஊசி இலை மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். அவன் கையில் ஒரு சிறு மூங்கில் துண்டு இருந்தது. அதை எப்படி' ஒரு புல்லாங் குழலாகச் செய்யலாம் என்று யோசனை பண்ணிக் கொண்டிருந்தான்.

''சிறுவன் மூங்கிலை வைத்துக் கொண்டு என்ன விளையாடுகிறான்?'' என்ற கேள்வி பூதத்தின் மனத்தில் எழுந்தது. பதிலைத் தெரிந்து கொள்ள அது துடிப்பாக இருந்தது.

''இந்தப் பூதம் வயிறு குலுங்கச் சிரித்தால், எப்படி இருக்கும்? இதனிடம் கொஞ்சம் விளையாடலாமா?'' என்ற கேள்விகளுக்கு விடை தேடுவதில் சிறுவன் துடிப்பாக இருந்தான்.

உடனே சிறுவன் மூங்கிலைக் கண்ணின் மேல் வைத்துக் கொண்டு, அண்ணாந்து, ஆகாயத்தைப் பார்த்தான். ''தம்பி! இந்த ஓட்டை மூங்கிலை வைத்துக் கொண்டு என்ன செய்கிறாய்? விண்ணுலகக் காட்சிகளை எல்லாம் காண முயல்கிறாயா?'' என்று பூதம் ஆர்வத்தோடு கேட்டது.

பூதத்தின் கேள்வியைச் சிறுவன் லட்சியம் செய்யவே இல்லை. மறுபடியும் ஆகாயத்தை ஆராய்ந்தான். ''நட்சத்திர மண்டலங்களையும், அங்கு வசிக்கும் தேவதைகளையும் நீ பார்க்கிறாயா, என்ன? சொல்லு தம்பி!'' என்று பூதம் அடக்க முடியாத ஆர்வத்துடன் நச்சரித்தது.

''மதிப்பிற்குரிய பூதமே! இது ஒரு மாய மூங்கில். இதுவரை நீ காணாத காட்சிகளை எல்லாம் இதன் மூலம் காணலாம்!'' என்று சொல்லிவிட்டுச் சிறுவன் மறுபடியும் ஆகாயத்தைப் பார்த்தான்.

''ஆகா.... ஆகா..... எவ்வளவு அழகு!..... எவ்வளவு அழகு!....'' என்று வியந்தான். ஆனால் என்ன காட்சிகளைக் கண்டான் என்று மட்டும் அந்தக் குறும்புச் சிறுவன் சொல்லவே இல்லை.

''தம்பி! ஒரே ஒரு தரம் அந்த மூங்கிலைக் கொடேன். நானும் பார்க்கிறேன்!'' என்று அந்த பூதம்

மூலம் : ஜப்பான் நாட்டுக் கதை
தமிழில்: வாமனன்

மயக்க மருந்து வேண்டாம்!

'முதலாவது உலகப் போரில் உடலில் 44 குண்டுகள் காயம் அடைந்த முசோலினி 'மயக்க மருந்து வேண்டாம். என் கையில் புத்தகம் ஒன்று கொடுத்து விட்டு ஆபரேஷன் செய்யுங்கள்' எனக் கூறினார். அதன்படி டாக்டர் 44 காயங்களையும் மயக்க மருந்து இன்றி ஆபரேஷன் செய்தார்!

— ஜ. சலீம், வந்தவாசி.

கெஞ்சியது. சிறுவன் மறுத்தான்.

பூதம் ஒவ்வொன்றாகப் பல பரிசுகளை நீட்டிச் சிறுவனுக்கு ஆசை காட்டியது.

"இந்தப் பட்டுக் குல்லாயை உனக்குப் பரிசாகத் தருகிறேன்!"

சிறுவன் மறுத்தான்.

"இந்தப் பளபளக்கும் மரமிதியடிகளைத் தருகிறேன்!" சிறுவன் மறுபடியும் மறுத்தான்.

"நிறையப் பொற்காசுகள் தருகிறேன்?" சிறுவன் ஏற்கவில்லை.

"இந்த வைக்கோல் சட்டையைத் தருகிறேன்!" என்றது பூதம்.

சிறுவனிடம் மழைச் சட்டை இல்லை. எனவே, ஒரு கணம் யோசித்தான். முடிவுக்கு வந்தான்.

"நீ இவ்வளவு ஆர்வமாகக் கேட்கிறாயே என்பதால் சம்மதிக்கிறேன். நீ வைக்கோல் சட்டையைக் கொடு. பதிலுக்கு நான் இந்தத் தொலைநோக்கிக் கண்ணாடியைத் தருகிறேன். நீ ஆசைதீரப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். ஆனால், ஒரு நிபந்தனை. ஒரே ஒருநாளைக்குத்தான் நான் இதைத் தருவேன். நாளை இதே நேரத்தில், இதே இடத்தில் நாம் சந்திக்கிறோம். அப்போது நீ இதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஆனால், வைக்கோல் சட்டையை நானே வைத்துக் கொள்ளலாம் இல்லையா?" என்று சிறுவன் கேட்டான்.

"ஓ! தாராளமாக வைத்துக் கொள்ளலாம்! நீ பெரியவனான பிறகு இதைப் போட்டுக் கொள்ளலாம்!" என்று கண்களைச் சிமிட்டிக் கொண்டே பூதம் சொல்லியது.

சட்டையும், மூங்கிலும் கைமாறின.

சிறுவன் வைக்கோல் சட்டையை அணிந்தான். கழுத்துக் கயிற்றைக் கட்டிக் கொண்டான். வீடு நோக்கிப் பாய்ந்தான். தன் புதிய சட்டையை அம்மாவுக்குக் காட்டும் அவசரத்தில் அவன் பூதத்தை மறந்தே போனான்.

வாசலில் செருப்புகளை எறிந்து விட்டுச் சிறுவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அம்மா தரையில் உட்கார்ந்து அவனுக்குக் கம்பளிச் சட்டை ஒன்று தைத்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு முறை கூப்பிட்டும், அம்மா தலை நிமிர்ந்து அவனைப் பார்க்கவே இல்லை. "அம்மா இப்படி இருக்க மாட்டாளே? இன்றைக்கு மட்டும் ஏன் இப்படி?" என்று குழம்பினான். அம்மாவைச் சுற்றி வந்து ஓடினான். குதித்தான். உரக்கக் கூவினான். எதுவுமே பலன் அளிக்கவில்லை. அவள் கருமமே கண்ணாகத் தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

சிறுவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பயந்தான். உதவிக்கு நண்பர்களைக் கூப்பிடுவதற்காக வாசலுக்குப் போனான். செருப்புக்களைத் தேடுவதற்காகக் குனிந்த போது, அவன் திடுக்கிட்டான். அவனுடைய கைகளைக் காணவில்லை! அவனால் தன்னைத் தானே பார்க்க முடியவில்லை! கண்களுக்குப் புலனாகாமல் அவன் மாயமாக மறைந்து விட்டிருந்தான்!

அவன் கழுத்துக் கயிற்றை அவிழ்த்ததும், வைக்கோல் சட்டை கீழே நழுவியது. அப்போது அவனுடைய உருவம் திரும்பவும் வந்தது. அவன் தன்னைத் தானே பார்க்க முடிந்தது. அதை மறுபடியும் போட்டுக் கொண்டதும், அவன் மாயமாக மறைந்தான்!

சிறுவனின் கவலைகள் யாவும் பறந்து போயின. "நான் நினைத்

தனைவிட இந்தச் சட்டை அருமையாக இருக்கிறதே! அம்மாவோ, மற்றவர்களோ, என்னைப் பார்க்கவும் முடியாது. என் குரலைக் கேட்கவும் முடியாது. பேஷ்! பேஷ்! என்பாடு கொண்டாட்டம் தான்!'' என்று சொல்லிச் சந்தோஷப்பட்டான்.

மறுபடியும் வீட்டின் உள்ளே போய் அம்மா வைத்துக் கொண்டிருந்த தையல் பெட்டியைத் தட்டி விட்டான். அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. பெட்டி தானாகவே சரிவதைக் கண்டு அவள் ஆச்சரியப் பட்டாள்.

பிறர் கண்களுக்குப் புலனாகாமல் தான் மறைந்து போவதைச் சிறுவன் உறுதி செய்து கொண்டான். பிறகு தன் குறும்புகளைத் தொடர்வதற்காகத் தெருவில் நடந்தான்.

தற்பெருமை அடித்துக் கொள்ளும் சிலரை வழியில் கண்டான். அருகில் சென்று அவர்களுடைய காதுகளை முறுக்கினான். பெண்கள் சிலர் பழக் கூடைகளைச் சுமந்து சென்றனர். பழங்களை எடுத்து வாரி இறைத்தான். தெருவின் ஒரு முனையில் ஆளில்லாமல் கைரிக்ஷா ஒன்று நின்றிருந்தது. அதை வேகமாக இழுத்துச் சென்று பயணிகள் விடுதிக்கு முன்பு நிறுத்தினான். இப்படி மேலும் பல குறும்புகளைச் செய்தான்.

விடுதிக்கு முன்னால் மக்கள் கூட்டமாகக் கூடினர். ஊரில் நடக்கும் அதிசயங்களை அவர்கள் பரிமாறிக் கொண்டனர். சிறுவன் அவற்றைக் கேட்டு ரசித்தான். மேலும் என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

ஊராரிடம் கிடைத்த செல்வாக்கு அவனுடைய கர்வத்தை வளர்த்திருந்தது. வைக்கோல் சட்டையால் கிடைத்த மாய உருவம் அவனுடைய கொடுமைக் குணத்தை வளர்த்து விட்டது. நண்பர்களோ, சின்னவர்களோ, பெரியவர்களோ, எதிரே



யார் வந்தாலும், அவர்களை அவன் சொல்லமுடியாத இன்னலுக்கு ஆளாக்கினான்.

மாலை ஆனதும், சிறுவன் களைத்துப்போய் வீடு திரும்பினான். வைக்கோல் சட்டையைக் கழற்றி வராந்தா ஓரத்தில் வைத்து விட்டு, உள்ளே போனான். அம்மா அவனை அன்போடு வரவேற்றாள். ஊரில் நடந்த மாயா ஜாலங்களை எல்லாம் விவரித்தாள். பிறகு, ''உன்னைக் காணோமே என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். எங்கேடா போனாய்?'' என்று கேட்டாள். ''மலை ஓரமாக நடக்கப் போனேன், அம்மா!'' என்று ஒரு பொய்யைச் சொன்னான்.

இரவு வந்தது. உணவுக்குப் பிறகு சிறுவன் உறங்கத் தொடங்கினான். வாயிற் கதவைச் சாத்தும் போது, அம்மா அந்த வைக்கோல் சட்டையைப் பார்த்தாள். அவளுக்கு அது அழகாகவும் தோன்றவில்லை. சுத்தமாகவும் தோன்றவில்லை. அதனுடைய மாயக் குணம் அப்படி, அழுக்கேறிய ஒரு பழைய பாயாக அவளுக்கு அது தோன்றியது. ஆகவே, அதை வாசலில் போட்டு எரித்து விட்டாள்.



பேபியர் என்ற உரோமிய அறிஞர் பால் அருந்துகையில் அதில் கிடந்த ஆட்டு உரோமம் ஒன்று அவர் வாயில் சிக்கி இயற்கை எய்தினார். பாசர் என்ற அறிஞர் தனது இடது கை பெருவிரலில் ஒரு பெரிய ஊசி நுனி தைக்க அதனால் இறந்தார்.

— எம். ஆனந்தன், வந்தவாசி.

அடுத்த நாள் அதிகாலையில் சிறுவன் எழுந்தான். வைக்கோல் சட்டையைத் தேடினான். கிடைக்கவில்லை. ''அம்மா! இங்கே ஒரு புதிய வைக்கோல் சட்டை வைத்திருந்தேனே? அது பூதம் கொடுத்த சட்டை. அதைப் போட்டுக் கொள்ள வேண்டும். எங்கே அது?'' என்று கேட்டான்.

''சட்டையா அது? அழுக்குப் பிடித்த பாய்! வாசலிலேயே போட்டு எரித்து விட்டேன். விடியற் காலையிலேயே பூதம், கீதம் என்று விளையாட ஆரம்பித்து விட்டாயா? போ, போ!'' என்று அம்மா விரட்டினாள்.

சிறுவன் வாசலுக்குப் போனான். வைக்கோல் சட்டையின் சாம்பலை ஒரு பாத்திரத்தில் திரட்டினான். மிருதுவான அந்தச் சாம்பலுக்குள் கைகளை விட்டு அளைந்தான். அவனுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. வைக்கோல் சட்டையின் குணங்கள் அந்தச் சாம்பலுக்கும் வந்திருந்தன. அவனுடைய கைகள் மறைந்து விட்டிருந்தன!

சாம்பலை வாரித் தலை முதல் கால் வரையிலும், மேலும் ஆடைகள் மீதும் பூசிக் கொண்டான். கண்ணாடியில் பார்த்தான். அவன் உருவம் மறைந்து, அரூபமாக மாறியிருந்தான். உடனே, சிறுவன் குறும்பு உலகை நோக்கி உற்சாகத்துடன் கிளம்பினான்!

அவன் நாயின் வாயிலிருந்து எலும்புத் துண்டைப் பிடுங்கினான். மண்வெட்டியைச் சுழற்றி எறிந்தான். குழந்தைகளின் பிஞ்சுக் கரங்களிலிருந்த பொம்மைகளைப் பற்றினான். இவ்வாறு, முதல்நாளை விட அதிகமான அதிசயங்கள் நடப்பதை ஊரார் பேசிக் கொண்டனர்.

சிறுவனுக்குத் தாகம் எடுத்தது. அருகில் ஒரு முதியவர் கூஜா நிறையத் தண்ணீர் வைத்திருந்தார். சிறுவன் கூஜாவை எடுத்து அப்படியே தூக்கி வாயில் சரித்துக் கொண்டான்! புரையேறியது. கூஜா நீர் முகத்தில் வழிந்தது. முகத்துச் சாம்பல் கரையவே, கோடு, கோடாகச் சிறுவனின் கன்னம் தெரியத் தொடங்கியது. கையால் உதட்டைத் துடைத்துக்



கொண்டான். உடனே வாயும், கையின் பகுதிகளும் தெரியத் தொடங்கின.

"இதென்ன பேயா, பிசாசா?" என்று விடுதி உரிமையாளன் அலறினான். கொஞ்சம் கொஞ்சமாக, பகுதி பகுதியாக வெளிப்பட்டுக் கொண்டிருந்த சிறுவனை, மக்கள் சூழ்ந்து கொண்டனர். கண்ணீர் வழிய வழிய, சாம்பல்கரையக்கரையச் சிறுவனின் முகம் சிறிது சிறிதாக வளர்ந்தது.

"ஓ, இது நம் குறும்புச் சிறுவனின் முகம்!" என்று விடுதி உரிமையாளன் கத்தினான். "ஆமாம், ஆமாம்! ஆனால், நாம் ஏன் அவனை முழுமையாகப் பார்க்க முடியவில்லை? இது என்ன புது விளையாட்டு?" — என்று பல கேள்விகள் அந்தக் கூட்டத்தில் எழுந்தன.

இரண்டு நாட்களாக ஊர் மக்களைப் படுத்திய பாடெல்லாம் சிறுவனுடைய மனத்திரையில் மேலோங்கியது. அவர்கள் பதிலுக்குத் தன்னை என்ன செய்வார்களோ என்று அவன் பயந்தான். ஆற்றங்கரையை நோக்கி ஓடினான். சிறுவனுடைய சில பகுதிகள் மட்டுமே புலப்பட்டன. முழு உருவம், தெரியவில்லை. இருந்தாலும், மக்கள் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினர்.

"கோபக்கார மக்களின் கையில் சிக்குவதை விடக் குளிர்ந்த ஆற்று நீரே மேல்!", என்று நினைத்துச் சிறுவன் பாயும் ஆற்று வெள்ளத்தில் குதித்தான். அக்கரைக்கு நீந்தினான். அதிசயச் சாம்பல் முழுவதையும் ஆற்று வெள்ளம் நீக்கிவிட்டது. சிறுவன் அக்கரை சேர்ந்தான். தன் முழு உருவத்தோடு தோன்றினான். மக்கள் பாலத்தின் வழியே ஓடிச் சென்று, அவனைப் பிடித்தனர். சிறுவன் குளிராலும், பயத்தாலும், அவமானத்தாலும் நடுங்கினான். குன்றிப் போனான்.

கூட்டத்தில் இருந்த விடுதி உரிமையாளன் சிறுவனின் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டான். சிறுவனுக்கு ஆறுதல் சொல்லி அவனை ஊருக்கு அழைத்தான். எல்லோரும் கூட்டமாகப் பேசிக் கொண்டே நடந்து வந்தனர். பூதத்தை ஏமாற்றித் தான் வைக்கோல் சட்டை வாங்கியதையும், அதன் மூலம் அவர்களுக்குக் கஷ்டம் கொடுத்ததையும் சொல்லிச் சிறுவன் மனம் வருந்தினான்.

"நீ பூதத்தை ஏமாற்றியதை விட, அது உன்னை அதிகமாக ஏமாற்றியிருக்கிறது. அதனால்தான் நீ இப்படி அவமானத்தால் குன்றிப் போயிருக்கிறாய். இப்போது பூதம் உன்னைப் பார்த்து வயிறு குலுங்கச் சிரித்துக் கொண்டிருக்கும். சரி, சரி, வீட்டுக்குப் போ. இனியாவது ஒழுங்காக இரு!" என்று விடுதி உரிமையாளன் அறிவுரை கூறிச் சிறுவனை அனுப்பினான்.

சிறுவன் மனம் மாறினான். நாளடைவில் பெரியவன் ஆனான். பிறரது கஷ்டங்களை நீக்குவதையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டான். அதனால் பெரும்புகழ் அடைந்தான்.

தீண்டாமைக்கு மருந்து



ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் காந்தியடிகளைக் காணப் போயிருந்தார். ஆயுர்வேதத்தின் சிறப்பைப் பற்றி வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார் வைத்தியர்.

"எல்லா வியாதிகளையும் ஆயுர் வேதத்தினால் குணப்படுத்த முடியுமா?" என்று கேட்டார் காந்தியடிகள்.

"ஓ பேஷாக முடியும்" என்றார் வைத்தியர்.

"தீண்டாமை என்ற வியாதிக்கு ஏதாவது மருந்து இருந்தால் கொடுங்களேன் பார்க்கலாம்" என்றார் காந்தியடிகள்.

— தா. ஷேக் ஹுசைன், செஞ்சி.



கரடி கோயில்!

வேணு சீனிவாசன்

சித்தப்பா, களைப்பால் கண்களை மூடி மரத்தின் வேரில் சாய்ந்து கொண்டிருந்தார். மரங்களின் நிழல் குளிர்ச்சியாக இருந்தது. பறவைகள் ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்தன.

சங்கர் பைனாகுலரால் பார்த்துக் கொண்டு இருந்தான். மரங்களில் இருந்த அழகான பறவைகளையும், அவற்றின் கூடுகளில் இருந்த குஞ்சுகளையும் பார்த்து மகிழ்ந்தவாறே காட்டில் சிறிது தூரம் நடந்து வந்தான்.

நீண்ட காதுகளைக் கொண்ட சிறிய முயல் ஒன்று, சங்கரின் காலடிச் சத்தம் கேட்டுப் புதரில் இருந்து 'குபீரென்று' பாய்ந்து ஓடியது. அதைத் துரத்திக் கொண்டே சிறிது தூரம் ஓடினான். பாவம் முயல், பயந்து போய் வளைக்குள் ஓடிப் பதுங்கி விட்டது. இன்னும் சிறிது தொலைவு நடந்தான்.

மூங்கில்கள் புதராக வளர்ந்து இருந்தன. பெரிய பெரிய கறையான் புற்றுக்கள் காணப்பட்டன. கழுத்தில் வழிந்த வியர்வையைத் துண்டால் துடைத்துக் கொண்டான் சங்கர்.

அவனுக்கு வெகு அருகில், மூங்கில் புதரின் பின்னால், யாரோ 'புஸ் புஸ்' என்று பெருமூச்சு விடுவதைப் போல சத்தம் கேட்டது. சத்தம் செய்யாமல் மூங்கில் புதரை விலக்கிப் பார்த்தான்.

பெரிய கரடி ஒன்று கறையான் புற்றுக்குள் தன் முன் கையை விட்டு எதையோ தேடி எடுத்துத் தின்று கொண்டிருந்தது. கரடி, புற்றுச் சோற்றை விரும்பித் தின்னும் என்றும், அதனால் அவை கறையான் புற்றுக்கு அடிக்கடி வரும் என்றும் அவனுக்குத் தெரியும். அதைத்தான் இன்று நேரில் பார்க்கிறான்.

கரடியின், பளபளப்பான கறுப்பு மயிர் அடர்ந்த உடலும், வலிமையான கால்களும், செக்கச் செவேல் என்று நெருப்பு போலச் சிவந்த வாயும், கூனி வளைந்த முதுகும் சங்கரைக் கதிகலங்க வைத்தது.

கரடி 'புஸ் புஸ்' என்று பெருமூச்சு விட்டதில், கறையான் புற்றின் மேலே இருந்து மண்ணும், புழுதியும் சுழன்று பறந்தன.

கரடியின் கவனம் முழுவதும் புற்றில் இருப்பதால்தான் மனித வாடையை அது மோப்பம் பிடிக்கவில்லை' என்று தெரிந்து கொண்ட சங்கர், அங்கிருந்து தப்பிப் போக, வேகமாகத் திரும்பினான். காலடியில் கிடந்த காய்ந்த சருகுகள் ஓசை எழுப்பி அவனைக் காட்டிக் கொடுத்தன. சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தது கரடி.

அவ்வளவுதான்! அடுத்த நொடியில் அது புற்றை விட்டு விட்டு, சங்கர் பக்கம் திரும்பியது! புதர் நடுவில் இருந்ததால் கரடியின் கையில் சிக்காமல் தப்பிய அவன், "ஐயோ, கரடி, கரடி" என்று கூச்சல் போட்டுக் கொண்டே புதரைச் சுற்றிச் சுற்றி ஓட

ஆரம்பித்தான். கரடியும் தலையைக் குனிந்து கொண்டு தாவித் தாவி அவனைத் துரத்த ஆரம்பித்தது. பயத்தால் அலறிக் கொண்டே திக்குத் திசை தெரியாமல் ஓடினான் சங்கர்.

கரடியும் விடாமல் துரத்திக் கொண்டு வந்தது. ஓடிக் கொண்டிருந்த சங்கரின் கையில் இருந்து பைனாகுலர் நழுவித் தரையில் விழுந்தது. இதைப் பார்த்த கரடி அருகே வந்து அதை முகர்ந்து பார்த்தது. உருட்டி விளையாடியது. பிறகு மீண்டும் சங்கரைத் துரத்தியது!

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய சங்கர் இதைப் பார்த்தான். யோசனை ஒன்று பளிச்சிட்டது. ஓடிக் கொண்டிருக்கும்போதே அவன் தன் கையில் வைத்திருந்த முகம் துடைக்கும் துண்டை நழுவ விட்டான். கரடி அதைக் குழந்தைக் தனமாக் முகர்ந்து பார்த்துக் கொண்டு, சிறிது சங்கரை மறந்து விட்டு நின்றது. இதற்குள் சங்கர் சிறிது தூரம் ஓடி விட்டான். இப்படியே சங்கர் கரடியின் ஓட்ட வேகத்தைத் தடை செய்யத் தன் மேல் சட்டை, பனியன் ஆகியவற்றைக் கழற்றி ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டுக் கொண்டே ஓடினான்!

எதிரே ஒரு மணல்மேடு. சுற்றிலும் அடர்த்தியாக ஏராளமான மரங்கள். சங்கர் ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு, சிறிது நேரம் கவனித்தான். கரடி வரவில்லை.

அப்போது சங்கரின் தோளின் மீது 'சில்' என்று யாரோ கையை வைத்தது போலிருந்தது. பயத்தால் 'ஓ' என்று அலறியபடியே திரும்பிப் பார்த்தான். பெரிய கற்சிலை ஒன்று இடுப்பு வரை மணலில் புதைந்து இருந்தது. அதன் கைதான் சங்கரின் தோள் மீது பட்டது!

இதற்குள் 'சங்கர்' என்று சித்தப்பாவின் குரல் கேட்டது. கூடவே காட



னின் குரலும் கேட்டது. அவன் ஓடி னான் நிம்மதியுடன். நடந்தவற்றை அவன் விளக்கிய போது சித்தப்பா வுக்கு அதிசயமாக இருந்தது.

"நான் இந்தக் காட்டிலேயே பிறந்து வளர்ந்தவன். எனக்குத் தெரியாத இடமே இங்கு கிடையாது. கரடி பயத்தில் ஏதோ உளறுகிறாயா தம்பி? என்றான் காடன்.

சங்கர் இருவரையும் அழைத்துக் கொண்டு போய், அந்த இடத்தைக் காட்டினான்.

"அடடே! இப்படி ஒரு கோவில் இந்த இடத்தில் புதைந்து இருப்பது எனக்குத் தெரியாமல் போய் விட்டதே!" என்று ஆச்சரியப்பட்டான் காடன்.

"சிலையின் உருவ அமைப்பை வைத்துப் பார்த்தால் பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். எதற்கும், நாம் இதைத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினருக்கும் தெரியப்படுத்துவது நல்லது" என்று கூறிய சித்தப்பா, வீட்டிற்குச் சென்றதும், தன் கைப்படக் கடிதம் எழுதி தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கு அனுப்பி வைத்தார்.

அடுத்த பத்து நாட்களுக்குள் அங்கிருந்து ஆட்கள் வந்து கோயிலை அகழ்ந்து எடுக்க ஆரம்பித்தனர். கொஞ்சம், கொஞ்சமாகக் கோயிலின் கோபுரமும், அழகான சிலைகளும், சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்த பிரம்மாண்டமான தூண்களும் பூமிக்கு அடியில் தெரிந்தன.

கோயிலை ஆராய்ந்த அறிஞர்கள் அதன் வயது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தனர். அரிய கலைப் பொக்கிஷமான பழங்கோயிலைக் கண்டுபிடித்த சங்கரை எல்லோரும் வெகுவாகப் பாராட்டினர்.

"கரடி மட்டும் துரத்தி வராவிட்டால், இதைப் பார்த்தே இருக்க மாட்டேன். ஆகவே, பாராட்டுகள் எல்லாம் கரடிக்குத்தான் சேர வேண்டும். இது நான் கண்டுபிடித்த கோயில் அல்ல. கரடி கண்டுபிடித்த கோயில்' என்று சங்கர் சொன்னதைக் கேட்டு, அனைவரும் சிரித்தனர்.



"நம்ம ஊருக்குப் புதுசா ஒரு 'குழந்தை வைத்தியர்' வந்திருக்காராமே! அவரோட பேர் என்ன?"

"சிசுபாலன்."

— வி. என். சுப்பிரமணியன்

"ஆமை வடைதான் ரெடியாகிக்கிட்டிருக்கு... கொஞ்சம் உட்காருங்க."

"கொஞ்சம் சீக்கிரமாக் கிடைக்க முயலக் கூடாதாப்பா?"

— சீர்காழி. வி. ரேவதி.




"நான் சாப்பாட்டு விஷயத்துல 'புலி' மாதிரி..."

"அப்படின்னா?"

"எவ்வளவு பசித்தாலும் புல் சாப்பிட மாட்டேன்!"

— வி. என். சுப்பிரமணியன்.



மந்திரியின் தந்திரம்



முன்னொரு காலத்தில் பேரரசன் ஒருவன் ஒரு குறுநில மன்னனின் நாட்டிற்கு வருகை தந்தான்.

பேரரசனுக்கு அந் நாட்டில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு நாட்டு அரசர்களும் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது பேரரசன் ''உம் நாட்டு அமைச்சன் அறிவுக் கூர்மையில் சிறந்தவன் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?'' என்று கேட்டான்.

''உண்மைதான் அரசே!'' என்று பதில் சொன்னான் குறுநில மன்னன்.

''அப்படியானால், அந்த அமைச்சனை அழைத்து நம் இருவர்க்கும் குடிப்பதற்குப் பால் கொண்டு வரச் சொல்லுங்கள். அவன் உண்மையில் அறிவுள்ளவன்தானா என்பதை நான் கண்டுபிடித்து விடுகிறேன்'' என்று சொன்னான் பேரரசன்.

உடனே அமைச்சனை அழைத்த குறுநில மன்னன், ''எங்கள் இருவர்க்கும் குடிப்பதற்குப் பால் கொண்டு வா'' என்றான்.

அமைச்சனும் அழகான தட்டில் இரண்டு கிண்ணங்களில் பால் வைத்து அங்கே கொண்டு வந்தான்.

அப்போதுதான் அவனுக்கு யாரிடம் முதலில் தட்டை நீட்டுவது என்ற குழப்பம் ஏற்பட்டது. 'நம் அரசரிடம் முதலில் தந்தால் பேரரசன் தன்னை அவமானப்படுத்தி விட்டதாகக் கோபம் கொண்டு என்னைக் கொன்று விடுவான். மாறாகப் பேரரசனிடம் தந்தால் நம் அரசன் என் தலையை எடுத்து விடுவான்! என்ன செய்வது?' என்று சிந்தித்தபடி தயங்கி நின்றான்.

குறுநில மன்னனுக்கு இப்போது அமைச்சனின் சிக்கல் நன்கு தெரிந்தது. 'அவன் என்னதான் செய்கிறான் பார்ப்போம்' என்ற எண்ணத்தில் அவனும் அமைதியாக இருந்தான்.

ஆனால் அறிவுள்ள அந்த அமைச்சனோ தட்டைத் தன் அரசனிடம் நீட்டி, "அரசே! தங்கள் விருந்தினரான பேரரசருக்கு என் கையால் பால் தருவது தகுதி ஆகாது. அதைத் தாங்களும் விரும்ப மாட்டீர்கள். தங்கள் திருக்கரங்களாலேயே தந்து விருந்தினரைப் பெருமைப்படுத்துங்கள்'' என்றான்.

தன்னையும், விருந்தினரையும் ஒரே சமயத்தில் பெருமைப்படுத்திய அமைச்சனின் அறிவுக் கூர்மையை வியந்த பேரரசன், அவனுக்குப் பல பரிசுகளைக் கொடுத்துச் சிறப்பித்தான்.

ஏ. ஹரி கிருஷ்ணன்

அடகாக வந்த நாய்!

லாகா பஞ்சாரா பெரும்பணக்காரர். நாணயமானவர். உழைப்பாளி, உபகாரி. எனவே, அவர் பெயரும் புகழுமாக விளங்கினார்.

ஒருமுறை பஞ்சாரா பெருங் கஷ்டத்தில் மாட்டிக்கொண்டார். என்ன காரணமோ, அவர் தொடங்கிய தொழில்கள் எல்லாம் உருப்படாமல் போயின. தொழில் நொடித்து நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. செல்வம் எல்லாம் கரைந்து ஓட்டாண்டியானார் பஞ்சாரா.

அந்த நிலையிலும் பஞ்சாரா மனம் தளராமல் ஒரு சேட்டிடம் சென்று தனக்குக் கடனாகப் பண உதவி செய்ய வேண்டினார்!

''எவ்வளவு பணம் தேவை?'' சேட்ஜீ கேட்டார்.

'ஐயாயிரம் ரூபாய்.'

''தருகிறேன். ஆனால், அதற்கு ஈடாக நீ என்ன தருவாய்?'' என்று கேட்டார் சேட்ஜீ.

'என்னிடம் ஈடாக வைக்க ஒரு பொருளும் இல்லை. நான் அன்பாக வளர்த்து வரும் ஒரு நாய் என்னிடம் இருக்கிறது. அதை வேண்டுமானால் ஈடாக வைத்துக் கொள்ளுங்கள்.'

நாயை ஈடாக வைத்துக்கொண்டு சேட்ஜீ,பஞ்சாரா கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டார். சேட்ஜியிடம் அடகு வைக்கப்பட்ட பஞ்சாராவின் அருமை நாயின் பெயர் டாகா.

ஒரு நாள் சேட்ஜீயின் வீட்டில் ஒரு திருடன் நுழைந்தான். அவன் பணப்பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்ட பொழுது டாகா அவனைப் பார்த்து விட்டது. அவன் மேல் பாய்ந்து குதறியது. திருடனும் பதிலுக்குக் கத்தியால் குத்தி நாயைப் படுகாயப்படுத்தி விட்டான். ஆனால் அந்த அபாய நிலையில் கூட டாகா அவனை ஓடிப் போக விடவில்லை.


அதற்குள் 'சேட்ஜீ விழித்துக் கொண்டார். திருடனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டார்.

சேட்ஜீ டாகாவுக்கு நன்றி பாராட்டித் தம் கையாலேயே மருந்திட்டுக் கட்டுப்போட்டுக் குணப்படுத்தினார்.

சேட்ஜீக்கு உடனே லாகா பஞ்சாராவின் நினைவு வந்தது. ''அவன் ஐயாயிரம் ரூபாய்க்கு ஈடாகத் தன் அருமை நாயை வைத்து விட்டுப் போனதால்தானே நம் பணம் கொள்ளை போவதிலிருந்து தப்பியது?'' என்று எண்ணி பஞ்சாராவை நன்றி பாராட்டினார். தனது நன்றியைக் காட்டும் வகையில் டாகாவைப் பஞ்சாராவின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

சேட்ஜியிடம் ஈடாக விட்டு வைத்திருந்த நாயைத் தன் வீட்டு வாசலில் கண்டதும், லாகா பஞ்சாரா பதறிப் போனார்! 'நன்றி கெட்ட நாய். என் மானத்தைக் காற்றில் பறக்க விட்டு விட்டு இப்படி ஓடி வந்து விட்டதே!'

மழலைக் குறும்பன்



என்று எண்ணி, ஆத்திரத்தோடு கைத் தடியால் அதன் மண்டையில் ஒரு போடு போட்டார்.

நாய் சுருண்டு விழுந்து உயிரை விட்டது.

அப்புறம்தான் லாகா அதன் கழுத்துப் பட்டையில் ஒரு காகிதம் சொருகியிருந்ததைக் கண்டார். எடுத்துப் படித்தார். ''டாகா என் செல்வத்தைக் கொள்ளை போவதிலிருந்து காப்பாற்றியது. அதன் எஜமான விசுவாசத்தைப் பாராட்டுகிறேன். உன்னால்தான் என் செல்வம் பறி போவதிலிருந்து தப்பியது. எனவே, எனது நன்றிக் கடனாக டாகாவை விடுவித்து, உன்னையும் கடனிலிருந்து விடுவிக்கிறேன்'' என்று சேட்ஜி எழுதியிருந்தார்.

லாகா பஞ்சாரா தலையைப் பிடித்துக் கொண்டு 'அவசரப்பட்டு விட்டேனே' என்று தேம்பித் தேம்பி அழுதார்.


பர்வதனின் சாபம்!
கதை: கமலா
படம்: செல்வம்
தேவலோகத்து நாரதரும் அவரது அக்கா மகன் பர்வதனும் இணை பிரியாத் தோழர்கள்.
இருவரும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.
நமக்குள் எந்தவிதமான இரகசியமும் இருக்கக் கூடாது பர்வதா...
நம் உள் மன ஆசை களைக் கூட ஒரு வருக்கொருவர் மறைக் காமல் சொல்லி விட வேண் டும்...
நம்மில் யாராவது மூடி மறைத் தால்...?
மற்றவர் அவ ரைச் சபிக்கலாம். என்ன, சம்ம தமா?
நான் தயார்!


ஒருநாள் நாரதர் சிந்தனை செய்து கொண்டிருக்கப் பர்வதன்...
எதை நினைத்துச் சிந்தனை வசப்பட்டிருக்கிறீர்கள், மாமா?
பூலோகத்தில் மனிதர் உண்ணும் விருந்தைச் சாப்பிடணும், சாம்பார், பாயசம், வடை... அடடா...!
இவ்வளவு தானே?
நாம் பூமிக்குச் சென்று சுவைப்போம்.
இருவரும் தேவலோகத்திலிருந்து கிளம்பினர்...
பூலோகத்துக்கு வந்தனர்.
ராஜா சிருஞ்சயனின் அரண்மனைக்கு விஜயம் செய்தனர்.


சிருஞ்சயனின் சபையில்...
ராஜகுமாரி எத்தனை அழகு? ரம்பையெல்லாம் தோற்றாள்!
நாங்கள் இங்கே சில நாட்கள் தங்க விரும்புகிறோம்...
நான் பாக்கியம் செய்தேன்!
அங்கிருந்த சில நாட்களில் தன் அழகாலும், குணங்களாலும் நாரதரின் மனத்தில் இளவரசி சுகுமாரி இடம் பிடித்தான்!
இதென்ன விபரீதம்! சுகுமாரியை மணக்க என் மனம் விரும்புகிறதே! இதைப் பர்வதன் அறிந்தால் எவ்வளவு கேவலம்!
என் மாமா வுக்கா கல் யாண ஆசை! அதிசயமாயிருக்கே!



என்னவோ நினைக்கி றீர்கள் போலிருக் கிறதே, மாமா?
ம...! நானா?
ஒன்றும் நினைக்க வில்லையே!
மறைக்கா தீர்கள், மாமா!
பர்வதன் விடவில்லை!
நீங்கள் எதையோ மறைக் கப் பார்க்கிறீர்கள். அது என்னவென்று எனக்குத் தெரியும்!
நம் உடன்படிக்கை யை நீங்களே மீற லாமா? இதோ சாபம்! சுகுமாரி உங்கள் மனைவியா வாள். ஆனால்... நீங்கள்...
மணமானபின் மற்ற வர்களுக்குக் குரங்கா கக் காட்சியளிப் பீர்கள்...!
சாபத்தினால் சினமுற்றார் நாரதர். தாம் செய்ததும் தவறுதான் என்பதை உணராமல்...
என்னை நீ சபித்தாய் அல்லவா? உன்னா லும் தேவலோகம் செல்ல முடியாமற் போகட்டும்!


அன்று முதல் தேவலோகம் செல்ல முடியாமல் பர்வதன் பூலோகத்தில் தனியாகச் சுற்றித் திரிய லானான்...
நாரதர் விரும்பியபடியே நடந்தது...
கேட்டதுமே சுகு மாரியை மணம் செய்து தர, சிருஞ் சயன் மகிழ்ச்சி யுடன் இணங்கி விட்டான்!
திருமணத்தின் போது சுகுமாரி தன் கணவ னைப் பார்த்தாள்... ஆனாலும்...
என் கணவர் ஒரு மனிதக்குரங்கா?
துளியும் மனவருத்தமோ, வெறுப்போ இன்றி அவள் நாரதரின் மனைவியானாள்.
பாவம், இந் தக் குரங்கு அரண்மனை யில் வாழ்ந் தாகணுமே!
அவர் மகிழ்ச்சியே என் விருப்பம்! அவர் விருப்பப்படி காட் டுக்குப் போக வேண் டியதுதான்...
சுகுமாரியின் உன்னத குணம், பர்வத னின் சாபத்தின் பாதிப்பை வென்றது!
ஆனால், நாரதரின் சாபம், பர்வதனைப் பூலோகத்திலேயே தங்க வைத்தது!
எப்படித் தேவலோகம் போவது? மாமாவை ஏன்தான் சபித் தேனோ?


வருந்திய அடுத்த கணமே, பர்வதன் அடர்ந்த காட்டின் நடுவே இருப்பதை உணர்ந்தான்! அங்கே...
அட! நாரதர் மாமா!
நாரதரும் அவனைப் பார்த்துவிட்டார்!
பர்வதா!
நாரத மாமா!
மாமா, உங்கள் சாபத்தால் தேவலோகம் செல்ல முடியாமல் தவிக்கிறேன், என்னை மன்னித்து சாபத்திலிருந்து விடுவியுங்கள்!
பர்வதா! அருமைக் குழந்தாய்! நான் உன்னை விடுவிக்கிறேன்.



பிறரிடம் வெளியிட முடியா
தது ஒவ்வொருவரிடமும்
இருக்கும். இதை உணராமல்
உடன்படிக்கை செய்து
கொண்டதால் வந்த
கஷ்டம் இது!
உன் சாபம் என்னைப் பாதிக்கவில்லை.
பெருமை சுகுமாரிக்கே. ஆனால் என்
சாபத்தால் நீ...
...தவித்திருக்கிறாய்!
சாபத்தை மாற்றி
உன்னைத் தேவலோகம்
அனுப்புகிறேன்.
நானும் என் சாபத்தை மாற்று
கிறேன், மாமா. சுகுமாரி உங்கள்
உண்மை உருவத்தைத் தரிசிக்
கட்டும்!
அடுத்தகணம்...
இருவரும் அருகில் வந்ததும் சுகுமாரி பதை
பதைத்து எழுந்தாள்...
யார் நீங்கள்?
என் கணவர் எங்கே?
அவரை என்ன செய்
தீர்கள்?



பயந்து அங்கிருந்து ஓடினாள்!
இரு! இரு. கருமாரி, ஓடாதே!
இங்கே திரும்பி வா! நான் எல்லா வற்றையும் விளக்குகி றேன்!
கருமாரி சற்றுத் தொலைவில் வந்து நின்று கொண்டாள்.
அவர் தேவலோகத்து மாமுனிவர்;போற்று தற்குரிய நாரதர். உன் கணவர்!
தங்கள் உடன்படிக்கை, நாரதர் மீறியதால் சாபமிட்டது எல்லாவற்றையும் விளக்கி னான்.
எல்லா வகையிலும் நீ அவருக்குப் பொருத்த மானவன். ஏற்றுக் கொள் ளுங்கள், மாமா!
சாபம் நீங்கிய பர்வதன் தேவலோகத்துக்குக் கிளம்பினான். பாடம் கற்றுக் கொண்ட நாரதர் வழியனுப்பினார்!


சிரிக்கச் சொல்லும் நாடு எது?
தெரியலையே?
'சிரி'யா
பத்திரிகைக்கு எழுதின கதை திரும்பி வந்துச்சின்னு சொன்னியே... கதை பேர் என்ன?
'பூமராங்'
இந்தப் பத்திரிகையில உள்ள பக்கங்கள் எல்லாம் ஈரமா யிருக்கே! ஏன்?
அதில் வர்ற கதைகள் எல்லாம் 'கண்ணீர்' கதைகளாச்சே!
சிரிப்
கருத்து:
என்.உமாமகேஸ்வரி
சரோஜினி எப்பவும் சர்க்கரையைத் தின்னு கொண்டிருக்கிறாள்
அப்படின்னா, சரோ'ஜீனி'ன்னு கூப்பிடலாம்.
பார்க்கக் கூடிய மிருகம் எது?
'காண்டா'மிருகம்
செல்லம்

வண்ணம் தீட்டுங்கள்





“கோமதி, சேதி தெரியுமா? என் அண்ணன் அடுத்த வாரம் திருச்சியிலிருந்து வரப் போகிறான்...” — இதைச் சொன்ன போது ராணியின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

அடுத்து அவள் என்ன சொல்வாள் என்பது கோமதிக்குத் தெரியும். “என் அண்ணனுக்கு என்மேல் எவ்வளவு ஆசை தெரியுமா? வரும் போது அவன் சும்மா வரமாட்டான். எனக்குப் புதுசு புதுசா டிரஸ், விளையாட்டுச் சாமான், தின்பண்டம் எல்லாம் நிறைய, நிறைய வாங்கிக்கிட்டு வருவான். என் பாடு படுஜாலிதான்!”

கோமதியிடம் மட்டுமா? வகுப்பிலுள்ள ஒவ்வொருத்தியிடமும் ராணி பேசிப் பெருமையடித்துக் கொண்ட

அண்ணனுக்கும் வேலையும்!

வார்த்தைகள்தான் இவை.

அவள் சொல்வதை வேண்டா வெறுப்புடன் கேட்டுக்கொண்டிருந்த அதே சமயம், கோமதிக்குத் தன் சகோதரனைப் பற்றிய நினைவும் வராமல் இல்லை.

கோமதியின் அண்ணனுக்கும் ராணியின் அண்ணன் வயதுதான். இருவரும் ஒன்றாகத்தான் படித்தார்கள். பள்ளியிறுதித் தேர்வில் முதல் மதிப்பெண் எடுத்தான் கோமதியின் அண்ணன் கண்ணபிரான். ஆனால் ராணியின் அண்ணனான சம்பத்குமாரோ, சுமாரான மதிப்பெண் பெற்று, ‘தத்துக்குத்த’லாகத்தான் பாஸ் செய்தான்.

ராணியின் குடும்பத்தார் பணக்காரர்கள். பெருந்தொகை ஒன்றை இலஞ்சமாகக் கொடுத்து, சம்பத்குமாருக்கு நல்ல வேலை கிடைக்கச் செய்துவிட்டார் அவன் அப்பா. ஆனால் கோமதியின் தந்தையோ ஏழை விவசாயி. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பம் அவர்களுடையது. அதனால்படிப்புத்திறமைக்கு ஏற்ற வேலை ஒன்றைக் கண்ணபிரானுக்குப் பெற்றுத் தர அவன் அப்பாவால் முடியவில்லை.

கண்ணபிரான் அரசாங்க உதவித் தொகை பெற்று, பிளஸ் டூ இரண்டு ஆண்டுகள் படித்து விட்டு, வேலை தேடித்தரும் நிறுவனத்தில் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டான். செய்தித் தாள்களில் வரும் “தேவை” விளம்பரங்களைப் பார்த்து விண்ணப்பிப்பதிலேயே பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான்.

சம்பத்குமார் மாதம் ஒரு முறை கிராமத்திற்கு வருவான். அப்படி வரும்

புவனை கலைச்செழியன்

போது, வெறும் கையை வீசிக் கொண்டு வருவதில்லை. தங்கை ராணி எல்லாரிடமும் காட்டி ஜம்பம் அடித்துக் கொள்கிற மாதிரி, ஏதாவது வாங்கி வந்து கொடுப்பான்.

பள்ளித் திடலில், மாலை, விளையாட்டு முடிந்து ஒன்றாகவே வந்து கொண்டிருந்தனர் கோமதியும் ராணியும். "அடி, கோமதி! அண்ணன் வரப் போவதைப் பற்றிச் சொல்லிக்கிட்டிருந்தேன் அல்லவா..... நாளைக்கே வந்து விடுகிறானாம்'' என்றாள் ராணி.

''அப்படியா, ரொம்ப சந்தோஷம்!" போலியாகச் சிரித்து வைத்தாள் கோமதி.

ராணியின் அண்ணனால், அவன் பார்த்து வரும் உயர்ந்த வேலையால் சிநேகிதிகளுக்கு நடுவே மதிப்புக் கூடுகிறது ராணிக்கு. ஆனால், தன் அண்ணன் கண்ணபிரானால், தான் பீற்றிக் கொள்கிற மாதிரி, கோமதிக்கு சிறப்பு ஏதும் கிடைப்பதில்லையே?

"வரட்டுமா கோமதி! பிச்சாவரத்திற்கு வீட்டில் எல்லோரையும் உல்லாசப் பயணம் அழைத்துக் கொண்டு போகப் போகிறானாம் அண்ணன். நான் இரண்டு நாட்களுக்குப் பள்ளிக்கூடத்திற்கு மட்டம் போட்டு விட்டேன். சம்பத்குமாரோடு பேசிப் பொழுதைக் கழிக்கத்தான் நேரம் சரியாயிருக்கும்." —கும்மாளத்துடன் கூறிக் கொண்டே, சிட்டாய்ப் பறந்தாள் ராணி.

வாடிச் சுருங்கிய முகத்துடனும், பாரம் நிறைந்த மனத்துடனும் வீட்டை நோக்கிச் சோர்வுடன் நடந்தாள் கோமதி.

வீட்டு முகப்பில் அமர்ந்து, ஓசியில் வாங்கி வந்த பத்திரிகை ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணபிரான்.

கோமதியின் சோர்ந்த முகத்தைப் பார்த்ததும், அவனுக்குத் தாங்க முடியாத அதிர்ச்சி!

''ஏம்மா கோமதி... என்னமோ போல வர்றே?'' என்று கேட்டான்.

அண்ணனை அமைதியாக ஏறிட்டாள் கோமதி. ''ஏன் அண்ணா? உனக்கு எப்ப வேலை கிடைக்கும்?'' என வினவினாள்.

அவள் குரலில் இருந்த தீவிரம், கண்ணபிரானை வியக்க வைத்தது. ''என்னம்மா திடீர்னு இப்பிடிக் கேட்டுட்டே! கூடிய சீக்கிரம் கிடைச்சுடும்னு நினைக்கிறேன்'' என்றான்.

''அது எப்படி, அவ்வளவு நிச்சயமாய்ச் சீக்கிரம் வேலை கிடைச்சுடும்னு சொல்ல முடியும் அண்ணா?"

''எதுக்கும் நேரம் காலம்னு ஒண்ணு வரணும் கோமதி! வேலையைப் பத்தி உறுதியாய்ச் சொல்றதுக்கு இல்லைதான். கிடைக்கிறபோது கிடைக்கும்.''

சப்பிட்டுப் போன பதிலைக் கேட்டு, கோமதியின் மனக்குறை அதிகமாவது போல் இருந்தது.

''அலட்சியமாக இருக்காதே, அண்ணா! தீவிரமாய் முயற்சி பண்ணி, ஏதாவது ஒரு வேலையில் அமரப் பார்!'' என்று படபடப்பாகச் சொல்லி விட்டு வீட்டிற்குள் நுழைந்தாள் கோமதி.


எப்போதும் போல இல்லாமல், இன்று கோமதியின் மனம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

'எப்படியெல்லாம் பகட்டாய்ப் பேசுகிறாள். ராணி! எப்போது பார்த்தாலும் சந்தோஷம், எக்களிப்பு, புன்சிரிப்பு! கண்ணபிரானும் சம்பத்குமாரைப் போல வேலையில்



குவாம்பூரில் லெட் கெ மன்னா என்ற பலசாலி ஒருவர் தன்னுடைய தலைமுடியால் போயிங் 737 விமானத்தை 16.85 மீட்டர் தொலைவு இழுத்து சாதனை படைத்தார். இந்த விமானம் 28 டன் எடை இருந்தது. இந்த சாதனையை பல கோடி மக்கள் நேரிலும், டீவியிலும் கண்டுகளித்தார்கள். தன்னுடைய நீண்ட சுருண்ட முடியால் விமானத்தை இழுத்த இம் மனிதர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

— இந்திரா கோபாலன், திருச்சி —



இருந்தால், ராணியைப் போலவே, "என் அண்ணன் பிரியப்பட்டதையெல்லாம் வாங்கித் தருகிறான்" என்று நானும் இஷ்டத்திற்குக் கண்டபடி பீற்றிக் கொள்ளலாம்? எண்ண அலைகள் அவள் உள்ளத்தில் துள்ளின.

எப்படி இந்த மாதிரி, பெரிய மனிதத்தனத்தோடு தங்கை பேசக் கற்றுக் கொண்டாள் என்று மனத்தைத் துளைத்துக் கொண்டான் கண்ணபிரான். இதன் 'வயணத்தை' எப்படியாவது அறிந்து கொண்டு விட வேண்டுமென்ற துடிப்பு அதிகரித்தது அவனுக்கு.

"ஏம்மா கோமதி.. என்னிக்கும் இல்லாத திருநாள் போல, நான் வேலைக்குப் போறதைப்பத்திக் கவலையோடும் பொறுப்போடும் விசாரிக்கிறியே! காரணம் என்ன?"

"என்னமோ சும்மா கேட்டு வெச்சேன்."

"உனக்காகவேவா இப்படிக் கேட்கத் தோணுச்சி?"

கோமதி அமைதியாக இருந்தாள்.

"என்ன, நான் கேட்டது காதில் விழலை?"

"ஏன், நானாகக் கேட்கக் கூடாதுங்கிறியா?"

தங்கையின் வார்த்தைகள் நம்பக் கூடாத மாதிரித் தோன்றவே, அவளைச் சந்தேகத்துடன் நோக்கினான் கண்ணபிரான்.

"ஏன் அண்ணா, நீ வேலைக்குப் போனால், எனக்கு வேண்டியதெல்லாம் கிடைக்குமில்லே?"

"என்னோட ஒரே தங்கச்சி நீ! நீ ஆசைப் பட்டுக் கேட்கிற ஒவ்வொண்ணும் உனக்கு வாங்கித் தருவேன்! வேலை மட்டும் கிடைக்கட்டும்,

பாரேன்!''

''நான், 'என்னோட அண்ணன் பெரிய உத்தியோகத்திலே இருக்கான். அவனுக்குக் கைநிறையச் சம்பளம். எனக்கு என்னவெல்லாம் வாங்கித் தருவான் தெரியுமா?' என்று பள்ளிக் கூடத்திலே எல்லார்கிட்டவும், என் சிநேகிதி ராணிமாதிரி சொல்லிக் கர்வப்பட்டுக்கலாம் இல்லையா!'' என்று தன் ஆவலை முழுமையாக வெளிப்படுத்தினாள் கோமதி.

தங்கையின் ஏக்கம் பூரணமாகப் புரிந்தது கண்ணபிரானுக்கு. அவளுடைய உள்ளத்தை அலைக்கழித்த ஆசைப் பெருக்கின் அளவு புரிந்தது. கோமதியைக் கூர்ந்து பார்த்த கண்ணபிரானின் கண்கள் கலங்கின.

''என்ன அண்ணா! உன்னை நான் வருத்தப்படுத்தி விட்டேனா? நான் நினைச்சது நடக்காதா?''


''எனக்கு வருத்தமே இல்லேம்மா கோமதி. சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதியிருக்கிறேன்.... கட்டாயம் எனக்கு ஒரு நாள் வேலைக்கான உத்தரவு வரும். அது சம்பத்குமார் பார்க்கிற வேலை மாதிரி, கையூட்டுக் கொடுத்து வாங்கின வேலையாய் இருக்காது! நியாயமாய்க் கிடைச்ச சாதாரண வேலையாய் இருந்தாலும், இதயத்திற்கு நிறைவைக் கொடுக்கிற நல்ல வேலையாய் அது இருக்கும். 'ஆகா... ஓகோ' என்று இல்லாவிட்டாலும், உன்னுடைய சின்னச் சின்ன ஆசைகளைப் படிப்படியாக நிறைவேற்றி வைக்கிற அளவுக்கு எனக்குச் சம்பளம் கிடைக்கும்.'' இப்படிக் கூறிய கண்ணபிரான், கோமதியின் முதுகைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்தான்.

கோமதியின் மனம் தெளிவடைந்து விட்டது. மன நிறைவோடு தெருவுக்கு விளையாடப் போனாள்.

இரண்டு தினங்கள் கழித்ததும், ராணி பள்ளிக்கு வருவாள். காதுத் தோடு, கால் கொலுசு, மணிச் சரம், பட்டு ரிப்பன் என்று எதையாவது கொண்டு வந்து காட்டி, 'இது என் அண்ணன் வாங்கித் தந்தது' என்று பகட்டுக் காட்டுவாள்! அவைகள் எல்லாம் அவளுக்கு உசத்தியாய் இருக்கலாம்.

ஆனால் கோமதி, இவையெல்லாம் லஞ்சம் கொடுத்து வாங்கின உத்தியோகத்திலிருந்து கிடைத்த சாமான்கள்... ஆனால், நேர்மையான வழியிலே சம்பாதித்து என் அண்ணா வாங்கிக் கொடுக்கப் போகிற பேனா, பென்சில், சாவிக் கொத்து இவைகளுக்குத்தான் மதிப்பு அதிகம்' என்று, வாயால் சொல்லாவிட்டாலும் மனத்தால் நினைத்துக் கொள்வாள்.

தங்கையின் மனமாற்றம், கண்ணபிரான் முகத்தில் களிப்பை வரவழைத்தது.



தெரியுமா உனக்கு?

1. பறவைகளைப் பற்றி ஆராய்வதை ஆர்னிதாலாஜி என்றும், பறவைகள் பறப்பதைப் பற்றி ஆராய்வதை ஏரோடைனோமிக்ஸ் என்றும் அழைக்கிறார்கள்.

2. அலுவலகம் செல்வது என்றாலேயே சிலருக்குப் பயம். இப்படி வேலையைக் கண்டு பயப்படுவதற்கு எர்கோபோபியா என்று பெயர்.

3. பாட்டாலஜி என்பது முட் செடிகளைப் பற்றி விவரிக்கும் துறைக்குப் பெயர்.

4. நல்ல செய்திகளைக் கேட்டால் சிலருக்குக் காரணமின்றி பயம் ஏற்படும். இந்தப் பய உணர்ச்சியை மருத்துவத்தில் யூபோபியா என்கின்றனர்.

— ஆர். ராஜாராம், திருவண்ணாமலை.

ஒரு முறத்துப் பறவைகள்

14

அன்று காலை பள்ளிக்குச் செல்ல பவித்ரா, காரில் ஏறிய போது, பக்கத்தில் நின்று கொண்டிருந்த சந்தோஷ், ''நத்திங் டு வொர்ரி. பயமே வேண்டாம். நானிருக்கேன்!' என்று அவளுக்கு மட்டுமே கேட்கும்படி அவள் செவிகளில் முணுமுணுத்தான்.

''மூன்று மணிக்குக் கூட்டம். அதை மறக்கக் கூடாது'' என்று கெஞ்சும் பாவனையில் அவனிடம் சொன்னாள் பவித்ரா.

''நேற்று இரவு ஒன்பது மணி வரைக்கும் நாம் சுறுசுறுப்பாகச் செயல்பட்டதற்கு நிச்சயம் பலன் கிடைக்கும். அதைரியப்படவே வேண்டாம்'' என்று சிரித்தான் சந்தோஷ்.

பவித்ரா காரிலிருந்து இறங்கி வகுப்பை அடைகிற வரை ஒரே சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தாள். வகுப்புக்குள் நுழைந்ததும் அவள் கண்கள் ஆவலோடு துழாவின. ஆனால், ஏமாற்றம்தான் மிஞ்சியது.

வழக்கம் போல் தனக்கு முன்னதாகவே வந்து அவளுக்காகக் காத்திருக்கும் மீனாவைக் காணவில்லை. ஒரே நேரத்தில் ஓராயிரம் எண்ணங்கள் பவித்ராவின் நெஞ்சிலே கட்டிப் புரண்டு, அவளைப் பாடாய்ப்படுத்தின.

மீனா பள்ளியை விட்டு நின்று விட்டாளோ? கமலம்மாள் அவள் படிப்பையே நிறுத்தி விட்டாளோ? நினைத்தபோதே அவளுக்குப் 'பகீர்' என்றது. 'தன்னால் தன் சிநேகிதிக்கு ஏதும் பயன்தரக்கூடிய அளவில் உதவி செய்ய முடியாமல் போனாலும் இப்படி அவள் வாழ்க்கையே பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு உபத்திரமாவது தன்னால் ஏற்படாமல் இருந்திருக்கலாமே!' என்று தன்னை நொந்து கொண்டாள் பவித்ரா.

''ஏய் பவி! எங்கேடி உன் இன்டிமேட் ஃப்ரண்டு மீனாவை இன்னும் காணல்லே?'' என்று ஒரு மாதிரியாகச் சிரித்துக் கொண்டே அவள் அருகில் சென்றாள் திவ்யா.

'அவள் உண்மையாகவே விஷயம் அறியக் கேட்கிறாளா, இல்லை தெரிந்து கொண்டே கிண்டல் செய்கிறாளா?' என்ற குழப்பத்தில் பவித்ரா வாயைத் திறந்து எந்தப் பதிலும் சொல்லவில்லை. ஆனால், அவள் கண்களைப் பார்த்த திவ்யா, ''அதுக்கேன்டி என்னை இப்படி முறைக்கிறே! என்னை எரிச்சிடாதேடி, தாயே! யார் எப்படிப் போனால் எனக்கென்ன?'' என்று ஒதுங்கிப் போய் விட்டாள்.

அடுத்து இரண்டு டெஸ்க் தள்ளி அமர்ந்திருந்த வஹிதாவிடம் போனாள் பவித்ரா.

''வஹிதா! மீனா வீட்டுப் பக்கம் தானே இருக்கே நீ? மீனா இன்றைக்கு ஸ்கூலுக்கு வரலையா?'' என்று கேட்டாள்.

''நேற்று மாலை பார்த்தேன். அவள் அம்மாவோடு வெளியேயிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள் வீட்டுக்கு. நான் எதிரே போனேன். இலேசா 'ஸ்மைல்' பண்ணிட்டு ஏதும் பேசாமலேயே போயிட்டா. காலையிலே நான் பார்க்கல்லே. தினமும் குழாயிலே தண்ணீர் பிடிக்க வரும் போது பார்ப்பேன். இன்றைக்கு அவளைக் காணல்லே'' என்றாள் வஹிதா.

''ஒருவேளை... அவளுக்கு உடம்பு சுகம் இல்லாமல் இருக்குமோ? இன்றைக்கு அவளுக்கு இலக்கிய மன்ற விழாவில் பரிசு கூட இருக்கே. ஏன்

நெல்லை அமுதன்

வரல்லே?'' என்று குழம்பினாள் பவித்ரா.

சற்று நேரத்தில் பள்ளியின் முதல் மணி ஒலித்தது. அப்போதும் மீனாவைக் காணவில்லை. திவ்யா அவளை விஷமமாகப் பார்த்துக் கொண்டிருந்தது வேறு அவளுக்கு எரிச்சலை அதிகமாக்கியது.

இரண்டாம் மணி ஒலிப்பதற்குள் அறிவியல் ஆசிரியை அந்த வகுப்புக்குள் வந்தார். எல்லா மாணவிகளும் எழுந்து நின்றார்கள்.

''குட்மார்னிங் சில்ரன்!'' என்று அவர் கூறியதன் எதிரொளி போல், ''குட்மார்னிங் மேடம்'' என்று கோரஸாக ஒலித்தனர் மாணவிகள்.

''முதலிலே உங்களுக்கு ஒரு குட் நியூஸ். தொலைந்து போன என் பணம் கிடைத்து விட்டது'' என்று சிரித்தார்.

''ஓ! தப்பிச்சோம்!'' என்று ஒரு குரல் உரக்கக் கேட்டது. ஆசிரியையின் முகம் அடுத்த கணமே வெயிலில் வைத்த ரோஜாப் பூவாக வாடிப் போய் விட்டது.

''ஸாரி ஸ்டூடன்ஸ்! அநியாயமா உங்களுக்கெல்லாம் கஷ்டத்தைக் கொடுத்திட்டேன். இதற்கெல்லாம் காரணம் என் அஜாக்கிரதைதான். அதற்காக முதல்லே நீங்க என்னை மன்னிக்கணும்'' என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார் ஆசிரியை.

''என்னங்க மேடம்...? நீங்க போய்... எங்களிடத்திலே... இப்படியெல்லாம்...'' என்று ஆசிரியையின் பெருந்தன்மையை எண்ணிப் பூரித்துப் போன பவித்ரா, ''மேடம்... அன்றைக்கு நான் வகுப்பிலே இல்லை... தொலைந்தது எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டாள்.

''அதைச் சொல்லத்தானே இரண்டாவது மணிக்கு முன்னாடியே வந்திருக்கேன். அந்த நோட்டை நான் அப்படியே வாங்கி, என் நோட்ஸ் ஆஃப் லஸன் நோட்டிலே, அதான் நான் நடத்துகிற பாடங்களுக்குக் குறிப்பு எழுதி வைத்துக் கொள்கிற நோட்டிலே வைத்து மூடி விட்டேன். நான் நினைச்சுக்கிட்டிருக்கேன்.. நூறு ரூபாய் நோட்டைப் பையிலே தான் வச்சிருப்பதாக. நான் பையைத் திறந்து தேடினேன். கையிலே வைத்திருந்த புத்தகங்களை ஏடு ஏடாகக் கூடத் தள்ளிப் பார்த்திட்டேன். எச். எம்.முக்கு அனுப்பிச்சிருந்த அந்தப் பாடக் குறிப்பு நோட்டு என் கவனத்துக்கே வரல்லே."

''எச். எம். சைன் பண்றதுக்கு என் நோட்டைத் திறந்த போது இந்த நோட்டு அவங்களைப் பார்த்துச் சிரிச்சிருக்கு. உடனே கூப்பிட்டனுப்பிக் கொடுத்தாங்க. உடனே நான் ஓடி வந்தேன், உங்களிடம் விஷயத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்க!'' என்றார் அவர்.

"கணக்கு டீச்சர்.. அநியாயமா எங்களைச் சந்தேகப்பட்டதை நினைத்தால்தான் எங்களுக்குக் கஷ்டமாயிருக்கு'' என்றாள் பவித்ரா.


''அவங்க கொஞ்சம் படபடப்பாய் பேசிட்டாங்கதான். ஆனால், அதற்கப்புறம் அவங்க அதுக்காக ரொம்பவும் வருத்தப்பட்டாங்க, தெரியுமா? வேண்டுமானால் நான் அந்த டீச்சருக்காகவும் இன்னொரு முறை மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார் அறிவியல் ஆசிரியை.

''முதல்லே... இந்தப் பணம் கிடைத்த விஷயம் கணக்கு டீச்சருக்

''கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தால் என்னாகும்னு சொல்லு?''

அப்படியும் 'வேர்த்து'க் கொட்டும்!''

— சுவீட் ரவி.





குத் தெரிஞ்சாகணும் மேடம்'' என்றாள் பவித்ரா.

"இப்பவே போயி அந்த டீச்சரிடம் சொல்லிடறேன். வேண்டுமானால் அவங்களையும்...''

''மன்னிப்பு ஒண்ணும் கேட்க வேண்டாம். தப்பா நினைச்சிட்டதுக்கு வருத்தம் தெரிவிக்கிறதாச் சொன்னாலே போதும்'' என்றாள் பவித்ரா.

''ஷ்யூர்! ஆங்... நான் மறந்திட்டேன் பாரு... இன்னொரு குட் நியூஸ்..! இன்றைக்கு வெறுமே இலக்கிய மன்ற ஆண்டு விழா மட்டும் இல்லே... இதுங்கூட, பெற்றோர் — ஆசிரியர் சங்கமும் இணைந்து விழா நடத்தப் போகுது. பெற்றோர் சங்கத் தலைவர் திடீரென்று இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். எல்லாம் நன்மைக்குத்தான்'' என்று சொல்லிவிட்டுப் போனார் அறிவியல் ஆசிரியை.

பவித்ராவுக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது. அண்ணன் சந்தோஷின் அரிய யோசனையையும் ஏற்பாடுகளையும் எண்ணி எண்ணிப் பூரித்துப் போனாள்.

''வெற்றி நமக்கே!'' என்றாள் பவித்ரா. அதைக் கேட்ட மாணவிகள் புரியாமல் விழித்தனர். என்ன பந்தயம் நடந்தது? அதிலே நாம என்ன வெற்றி பெற்றோம் என்று ஒவ்வொருவரும் குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில், முன் தினம் தானும் சந்தோஷும் முக்கியமான சில பெற்றோர்களைச் சந்தித்துப் பேச, வீடு வீடாகச் சென்றதைப் பவித்ரா எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் பொன்னம்பலம் நிறையப் படித்தவர். பவித்ரா தன் அண்ணன் சந்தோஷுடன் சென்று, தலைமை ஆசிரியை ஜெயலட்சுமி கிருஷ்ணமூர்த்தி பள்ளியை விட்டு விலக எடுத்திருக்கும் முடிவினை மாற்ற வேண்டும் என்று விளக்கமாகக் கூறிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

''அதெல்லாம் பள்ளிக்கூட நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயம். இதிலெல்லாம் நாங்கள் தலையிடுவது நல்லதில்லை'' என்று ஆரம்பத்தில் கூறி விட்டார் பொன்னம்பலம். பவித்ரா அவரை விட்டு விடவில்லை.

''அப்படியானால் நான் பள்ளியை விட்டு நின்று போகணும்'' என்றாள் பவித்ரா.

''பவித்ரா பள்ளியை விட்டு நின்று போவதோ, சஸ்பெண்ட் செய்யப்படுவதோ தெரிந்தால், பள்ளியில் எல்லா மாணவிகளும் சேர்ந்து போராட்டமே நடத்துவார்கள். அது மட்டுமல்ல... இந்த ஊரில் உள்ள மற்ற பள்ளிகளும் போராட்டத்திலே கலந்து கொள்ளும்'' என்றான் சந்தோஷ்.


''அந்தப் போராட்டத்திலே பள்ளி நிர்வாகத்தின் அடாத செயல்கள் எல்லாம் அம்பலத்துக்கு வரும். எந்த ஆசிரியைக்கும் ஒழுங்கா, சம்பளம் தரப்படுவதில்லை என்ற உண்மை வெளிப்படும். இன்னும் எத்தனையோயிருக்கு. இதெல்லாம் இந்த ஊர் பெரியவர்களுக்குச் சரியாகத் தெரியவருமானால், அந்த நிர்வாகத்தையே ஒழித்துக் கட்டி, பள்ளியை நடத்தும் பொறுப்பை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டி வரும்'' என்றாள் பவித்ரா.

"எதுக்குடா சட்டையைக் கழட்டிப் போட்டு மாத்திரையைச் சாப்பிடறே?''

"வெறும் வயத்துலதான் மருந்து சாப்பிடணும்னு டாக்டர் சொல்லி இருக்கார். அதான்.''

— எல். அமுதா.





சிறுவன் 1: டெய்லருக்கு பிடிச்ச காய் எது...?

சிறுவன் 2: 'கத்தரி'க்காய்!

— வி. என். சுப்பிரமணியன்.

"நீங்கள் இதையெல்லாம் நிர்வாகிகளுக்குப் புரிய வச்சிட்டீங்கன்னா, போதும். நிர்வாகம் அசந்து போய் விடும். பள்ளியே கையை விட்டுப் போய் விடுமோ என்ற பயத்திலே நியாயமா நடக்க ஆரம்பிக்கும். அடியோடு மாற்றிக்க முடியலேன்னாலும் தவறுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகவாவது குறைத்துக் கொள்ளும்..." என்றான் சந்தோஷ்:

"அது சரி பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்துக்கு எந்தப் பெற்றோர் சுலபமா வரேங்கிறாங்க? பள்ளியிலே சேர்த்ததுக்கப்புறம் பிள்ளைங்க எப்படிப் படிக்கிறாங்கன்னு யார் வந்து பார்க்கிறாங்க? மொத்தம் பத்துப் பதினைந்து பேர் தேறினாலே பெரிய காரியமாக இருக்கே!" என்று சிரித்தார் பொன்னம்பலம்.

"பெற்றோர்கள், சங்கத் தலைவரோடு கூட்டத்துக்கு வந்து, கரஸ்பான்டன்டையும் மற்ற நிர்வாகிகளையும் சந்தித்தாலே போதும். அதற்கப்புறம் அவங்க சரியா நடந்துக்குவாங்க! அதட்டல் மிரட்டலோடு அதிகாரம் பண்றதும், ஆசிரியைங்க பயந்து பயந்து அடங்கிப் போறதும் ஒழிஞ்சி போகும்" என்றான் சந்தோஷ்.

தன் அண்ணனை வியப்போடு பார்த்தாள் பவித்ரா. உண்மையிலேயே அண்ணன் தைரியமுள்ளவன் தானா? பிறகு ஏன்... அம்மா அட்டகாசத்துக்குக் கொஞ்சம் கூட எதிர்ப்புக் காட்ட மாட்டேங்கிறான்?

"சந்தோஷ்! கீப் இட் அப்! வெளியிலே மட்டும் இல்லே... இப்படியே வீட்டிலேயும்" என்று மெதுவாக அவனிடம் முணுமுணுத்துச் சிரித்தாள் பவித்ரா.

தமிழாசிரியை எழில்வதனி வகுப்புக்குள் வந்து, எல்லா மாணவிகளும் எழுந்து நின்ற போதும், பவித்ரா முந்தைய நாள் சிந்தனையிலேயே அமர்ந்து கொண்டிருந்தாள்.

"பவித்ரா!" என்று உரக்கவே குரல் கொடுத்தார் ஆசிரியை. நினைவிலிருந்து விடுபட்டுத் திடுக்கிட்டு எழுந்து நின்றாள் பவித்ரா.

"மன்னிச்சிக்குங்க அம்மா. கவனிக்கல்லே" என்று தலை கவிழ்ந்து நின்றாள்.

"கவனம் இங்கே இருந்தால் தானே! சரி, உட்கார்!", என்று சொல்லி விட்டு ஆசிரியை நின்று கொண்டேயிருந்தார்.

"நான் பரீட்சைக்கு வேண்டிய பாடங்களை எல்லாம் நடத்தியாச்சு. இனி, படிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. இன்னைக்கு என் மனசு சரியில்லை. சில தினங்களா அமைதியே இல்லாமல் இருக்கு. அதனாலே,நீங்கள் ஏதாவது மௌனமா, சப்தமில்லாமே படிச்சிக்கிட்டோ எழுதிக்கிட்டோயிருங்கோ" என்றார் அவர்.

மாணவிகளைப் பார்த்துக் கொண்டே அவர் இருக்கையில் அமர்ந்ததும் பவித்ரா எழுந்து அவரிடம் சென்றாள்.

"அம்மா! உங்கள் மனசிலே ஏன் அமைதி இல்லை என்பது எனக்கு ஓரளவு தெரியும்?" என்று மெதுவாகச் சொன்னாள்.

"என்ன தெரியும் உனக்கு?" என்று கேட்டார் எழில்வதனி.

"என்னைத் தண்டிக்க விரும்பாததனாலே தலைமை ஆசிரியை, தம்மையே தண்டித்துக் கொள்ள முடிவு செய்திட்டாங்க..."

"இதெல்லாம் உனக்கு யார் சொன்னது? அதை ஒண்ணும் அவங்க தண்டனையா நினைக்கல்லே. அது அவங்க தன்மான உணர்வு. இது போல எத்தனையோ முறை அவங்களுக்குச் சோதனை வந்திருக்கு.



"கும்பகர்ணனுக்குப் பிடிக்காத சினிமா எது, சொல்லு?"

"'தூங்காதே தம்பி தூங்காதே' தான்!"

— கவிட் ரவி.

அப்போதெல்லாம் என்னைப் போல டீச்சர்ஸ் பல பேர் கெஞ்சிக் கேட்டுக் கிட்டோம். அவங்க வேலையிலிருந்து போயாச்சின்னு சொன்னால், அப்புறம் எங்களுக்குக் கொஞ்சம் நஞ்சமிருந்த பாதுகாப்பும் இல்லாமே போயிடும். என்ன பண்றது? இனி, நாங்கள் எல்லாம் உத்யோகத்தைக் காப்பாத்திக்கணும்னா மேனேஜ் மெண்ட்டுக்கு முழு அடிமைகளாகத் தான் இருக்கணும். இந்தம்மா போயிட்டாங்கன்னா, தங்களுக்குத் தாளம் போடுறவங்களைத்தான் எச்.எம்மா போட்டுக்குவாங்க. யாராவது எதிர்த்தா, அது தான் தேதியிடாமல் எழுதிக் கொடுத்திருக்கிற ராஜினாமா லெட்டர் இருக்கே'' என்று சொல்லி வருத்தப்பட்டார் எழில் வதனி.

''அப்படியெல்லாம் நடக்க விடப் போறதில்லே நாங்கள். பெற்றோர்கள் எல்லாம் திரண்டு வரப் போகிறார்கள். அநியாயமா நடந்துக்க விட மாட்டாங்க. தலைமை ஆசிரியை விலகிப் போகவும் விட மாட்டாங்க. பாருங்க...'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினாள் பவித்ரா. பின்னர் தன் இடத்துக்குத் திரும்பினாள். எழில்வதனி தீவிர சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

தன் இடத்துக்கு வந்து அமர்ந்த பவித்ராவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இன்னும் 'மீனாவைக் காணோமே!

சில மணி நேரத்தில் பள்ளியில் நடைபெறும் விழாக் கூட்டத்தில், தான் எதிர்பார்த்திருப்பதைப் போல எல்லாம் நடைபெறுமா என்றும் கவலைப் பட்டாள். அந்தக் கூட்டத்தில் பேசுவதற்கு மீனா வர வேண்டுமே என்றும் வேதனைப்பட்டாள். அவளுக்கு என்னவோ ஆகியிருக்கிறது. மதியம் உணவு இடைவேளை எப்போது வரும் என்று ஏக்கத்தோடு காத்திருந்தாள்.

வகுப்பிலே நடந்த எந்த விஷயமும் அவள் கவனத்தில் பதியவில்லை. எஸ்தரையும் வஹிதாவையும் கூட்டிக் கொண்டு மீனாவின் வீடு தேடி விரைந்தாள்.

பவித்ராவைக் கண்டதும் மீனா விம்மி விம்மியழுதாள். ''நான் ஸ்கூலுக்குப் புறப்படுன்னு சொன்னேனம்மா. இவள்தான் மனசு சரியில்லை. மத்தியானம் போறேன்னு சொன்னாள். புறப்படத்தான் இருந்தாள். அதற்குள் நீ வந்திட்டே. ஆனால், இனிமேல் நீ மீனாவோடு சேரவே கூடாதம்மா'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டுக் கொண்டாள் கமலம்மாள். அப்போது மீனா தலைகுனிந்தபடியே நின்றிருந்தாள். பவித்ராவால் ஏதும் பேச முடியவில்லை. பக்கத்திலே எஸ்தரும் வஹிதாவும் இருந்தார்களே! அவர்களுக்குத் தெரியக் கூடாது என்று நினைத்தே, வந்த அழுகையை அடக்கிக் கொண்டு மௌனமாக இருந்தாள். அதைப் புரிந்து கொண்டவள் போல் மீனா புத்தகங்களை எடுத்துக் கொண்டு முன்னே நடந்தாள். பவித்ராவும் மற்றவர்களும் அவள் பின்னே வந்தார்கள்.

பள்ளியில் மூன்று மணியளவில் கூட்டம் தொடங்கியது. அதற்கு முன்பே பெற்றோர்கள் திரளாக வந்திருந்தனர். விழா மேடையருகே நின்றிருந்தாள் பவித்ரா. சற்று நேரத்தில் தலைமை ஆசிரியையும், கரஸ்பான்டெண்ட்டும் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் பொன்னம்பலத்தோடு சிரித்தபடி பேசிக் கொண்டு மேடைக்கு வந்தார்கள்.



கேள்வி கேட்டதும் எழுந்திருச்சு 'திரு திரு'ன்னு முழிக்கிறியே... உம் பேர் என்ன?''

'' 'திரு'மலைசாமி.''

— புன்செய் புளியம்பட்டி.

தலைமை ஆசிரியை ஜெயலட்சுமி கிருஷ்ணமூர்த்தி பவித்ராவைச் சைகை செய்து தம்மருகே அழைத்துத் தனியாகச் சென்று ஏதோ கூறி அவளைத் தட்டிக் கொடுத்தார். பொன்னம்பலமும் பவித்ராவின் அருகே வந்து. ''எல்லாம் நல்லபடியா முடிஞ்சிதும்மா. ஒரு குளறுபடியும் பள்ளிக்கூடத்திலே இனி இருக்காது. உங்களுக்குக் கவலையே வேண்டாம். இந்த ஸ்கூல்லேயே மிஸஸ் ஜெயலட்சுமி இன்னும் ஆறு வருஷத்துக்கு ஹெட் மிஸ்ட்ரஸாயிருப்பாங்க. சந்தோஷந்தானே!'' என்றார் பொன்னம்பலம். மகிழ்ச்சியோடு பவித்ரா அங்கே வந்திருந்த சந்தோஷை நோக்கி சிரித்துக் கொண்டே அவனருகே சென்றாள்.

சில நிமிடங்களில் விழா தொடங்கியது. தலைமை ஆசிரியை விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசினார்.

''அன்பிற்கினிய என் பண்புள்ள மாணவிகளே! இன்றைய தினம் என்னால் மறக்க முடியாத ஒரு தினமாக அமைந்து விட்டது. நான் சரியாகவோ தவறாகவோ எடுத்திருந்த ஒரு முடிவை என்னுடன் பணியாற்றும் ஆசிரியைகளாலும் மாற்ற முடியாமல் இருந்தது. ஆனால், உங்கள் பள்ளி மாணவியர் தலைவி பவித்ரா தன்னுடைய அரிய முயற்சியினால் உங்கள் பெற்றோர்களைத் திரட்டி, என் முடிவை மாற்றி வைத்து விட்டாள். இனி இங்கே நடப்பவை நல்லவையாகவே இருக்கும். பவித்ராவுக்கும், அவளுடைய நல்லெண்ணத்தைப் புரிந்து கொண்டு ஒத்துழைக்கும் உங்களுக்கும், ஆசிரியைமார்கள் சார்பாகவும் என் சார்பாகவும் மனங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்...''

தலைமை ஆசிரியை மேலும் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். பள்ளி ஆசிரியைகளின் பார்வைகள் அடிக்கடி பவித்ராவின் பக்கம் சென்றது. பவித்ராவின் அம்மா உதயாவும் அப்பா முத்துமணியும் கூட விழாவுக்கு வந்திருந்தனர். அப்பா, அம்மாவிடம் ஏதேதோ சொல்லிச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்ததையும் உதயா தன்னைப் பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டிருந்ததையும் பவித்ரா கவனித்தாள். ஆனால், மீனா தன்னை ஒருமுறையாவது நிமிர்ந்து பார்க்கிறாளா என்பதிலேயே அவள் கவனம் அதிகமாக இருந்தது.

மீனா, பவித்ராவின் பக்கமே திரும்பவில்லை. அதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே, யார் என்ன பாராட்டிப் பேசிக் கொண்டிருந்த போதும் அவள் உள்ளத்தில் வருத்தமே நிறைந்திருந்தது.

கூட்டம் முடிந்தது. உதயாவும் முத்துமணியும் பவித்ராவின் அருகே வந்தார்கள். சந்தோஷும் பொன்னம்பலமும் சற்றுத் தள்ளி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

மீனா விடுவிடுவென்று தனியாக வேகமாகத் தன் வீட்டுக்குப் புறப்பட்டாள். லலிதா அவளை அழைத்துக் கொண்டே அவள் பின்னால் ஓடினாள்.

திவ்யா தன் தாயார் ஹேமாவோடு பவித்ராவும் அவள் பெற்றோரும் இருந்த இடத்துக்கு வந்தாள்.

''ஏய் பவி! என்னடி உன் ஃபிரண்டு மீனா உன்னைத் திரும்பியும் பாராமே போய்க்கிட்டிருக்கா?'' என்று கேட்டாள். அது எரிகிற நெருப்பில் எண்ணெய் கொட்டியதைப் போன்றிருந்தது. எரித்து விடுபவள் போல் அவளை முறைத்துப் பார்த்தாள் பவித்ரா. அதையடுத்து அவளுக்கு லேசாகத் தலை சுற்றுவதைப் போலிருந்தது. அடுத்த கணமே அவள் தடால் எனத் தரையில் சாய்ந்து விட்டாள்.

(தொடரும்)

கல்விப் பயன்



மாதவனும் ரகுவும் பள்ளிக்கு நடந்து கொண்டிருந்தார்கள். அன்று மாதத் தேர்வு ஆரம்பம்.

பஸ் ஸ்டாப்பில் ஒருவர் கவனிக்கும் நிலையில் நின்று கொண்டிருந்தார்.

உயரமான ஆள். படை வீரர் தோற்றம். ஆனால்... கால்கள் இரண்டும் செயற்கை. கம்பு ஊன்றி நின்ற அவர், கையில் துணிப் பை ஒன்றையும் வைத்திருந்தார்.

வயதானதாலோ வேறு காரணத்தாலோ அவர் சோர்வாக நின்றார்.

''தம்பி பள்ளிக்கூடமா போறீங்க? என்றார் அந்த முதிய போர் வீரர்.

''ஆமாய்யா''என்றான் மாதவன் முதலில். ஏனென்றால், அவன்தானே அவரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன்.

''உன் பேரு என்னப்பா?''

''மாதவன்.''

''நல்ல பேரு. நீ நல்ல பையனாவும் இருப்பே. எனக்கு ஒரு உதவி செய்யிறியாப்பா?''

மாதவன் கேட்டான்: ''என்ன உதவி?''

''டவுனுக்கு பென்ஷன் வாங்கப் போகணும். எனக்கு யாருமில்லே. அதனாலே தனியாகத்தான் போவேன். இன்னைக்கு எனக்குக் காய்ச்சல். உங்களில் ஒரு தம்பி என் கூட வந்தா...'' என்று பெரியவர் பேச்சை முடிக்காமலே விட்டார்.

மாதவன் அவரைப் பார்த்தான். ''சரிய்யா நான் வரேன்'' என்றான்.

''டேய் என்னடா இது... இன்னிக்கு டெஸ்ட் ஆச்சே?'' என்று ரகு கூச்சலிட்டான்.

''ம்... ம்...'' என்றபடியே தன் நோட்டுப் புத்தகத்தில் ஒரு தாள் எடுத்து ஒரு லீவு லெட்டர் எழுதி, ''ரகு தயவு செய்து இதை நம்ம ஆசிரியரிடம் நினைவாக் கொடுத்துடுடா'' என்றான் மாதவன். ரகு பேசாமல் வாங்கிக் கொண்டான்.

பென்ஷன் வாங்குமிடத்துக்கு அருகிலேயே பெரியவரும் மாதவனும் இறங்கிக் கொண்டனர். அவன் தோளில் லேசாகக் கையை வைத்தபடி மெல்ல மெல்ல நடந்தார் அவர்.

''தம்பி, பாவம் உனக்கு ஒரு ம வாங்கிக் கொடுக்கக் கூட இப்பத் துட்டில்லே. பென்ஷன் வாங்கினதும் அதான் முதல் வேலை. அதுக்கப்புறம் தான் என் காய்ச்சலுக்கு வைத்தியம்" என்றார் படை வீரர்.

அழகி

''ஊ, காப்பி நான் சாப்பிடுற தில்லே.''

''நல்ல பழக்கம். பாலே வாங்கித் தந்திடுறேன். அதைச் சாப்பிடலாமில்லே மாதவா?''

மாதவன் சிரித்துக் கொண்டான்.

அவன் ஏதோ யோசனையுடன் இருப்பதைக் கண்ட படை வீரர், ''என்ன இது, எல்லாத்தையும் வழிச் செடுத்துச் செலவு செய்துட்டு இப்படி நிக்கிறாரே'ன்னு நினைக்கிறாயா? அப்படியில்லே...'' என்று அவன் முகத்தைப் பார்த்தார்.

மாதவன் புரியாமல் அவரையே நோக்கினான்.

''ஒவ்வொரு மாதமும் பென்ஷன் வாங்கப் போறதுக்கு முந்தின நாள் அந்த மாதம் செலவு செய்து மிஞ்சினதை ஒரு அனாதை விடுதிக்கு அனுப்பிடுவேன். நேத்தும் அப்படித்தான் அனுப்பினேன். ஆனா, இந்த முறைதான் சோதனையா எனக்குக் காய்ச்சல். இப்படி ஒரு நிலைமை. உனக்கும் கஷ்டம்.''

''பரவாயில்லய்யா''

பள்ளியில் பிற்பகல் அடுத்த பாட வேளைக்கான மணி அடித்தது.

ரகு பயிலும் வகுப்பில் கணித ஆசிரியர் மகேந்திரன் நுழைந்தார்.

பின்னாலேயே பியூன் வந்து, ''சார் மாதவனை அவங்கம்மா தேடி வந்திருக்காங்க. தலைமையாசிரியர் அவனை அனுப்பச் சொன்னாங்க'' என்று சொல்லிப் போய் விட்டார்.

''மாதவா'' என்றார் ஆசிரியர்.

''இல்லை ஸார்'' என்று எகிறிய பந்து போல உடனே பதில் மாணவர்களிடமிருந்து வந்தது.

''என்ன! அவன் வரலையா? இன்னைக்கு டெஸ்ட் எழுதலையா? நூறு மார்க்கு வாங்கிடுவேன்னானே?'' என்று சொன்ன மகேந்திரன், ''என்ன ரகு, மாதவன் ஏண்டா வரலே? லீவு லெட்டர் கொடுத்தானா? — அவங்கம்மா ஏன் அவனைத் தேடி வரணும்?'' என்று கேட்டார்.

ரகு, ''அவன் கொடுத்த லீவு லெட்டரைக் கொண்டு வந்து கொடுத்தேன். எங்க ஆசிரியர் 'பெற்றோர் கையெழுத்தில்லே'ன்னு எங்கிட்டேயே திருப்பி விட்டுட்டார் சார்'' என்று அந்த லீவு லெட்டரைக் கணக்காசிரியரிடம் நீட்டினான்.

''பின்னே என்னடா? பெற்றோர் கையெழுத்தில்லையே'! என்று அவனிடமே திருப்பி அதைக் கொடுக்கப்



போனார். பின், 'என்னடா இது!' என்று அந்தக் கடிதத்தை உற்றுப் பார்த்து விட்டுச் சற்று யோசித்து அவனிடம் கொடுத்தார்.

"சரி ரகு, நீ போய் அவங்கம்மாவிடம் சொல்லு, அவன் இங்கே வரலேன்னு" என்று ரகுவை அனுப்பி வைத்தார். பின் பாடம் நடத்தினார். ரகுவும் வந்து விட்டான்.

மகேந்திரன், மாதவனின் தெருவில்தான் இருந்தார். விதவையான மாதவனின் தாய் அவன் விஷயமாக எதையும் ஆசிரியர் மகேந்திரன் வீட்டிற்குப் போய் விசாரித்துக் கொள்வாள். 'விஷயம் என்ன என்று வீட்டுக்குப் போனால் தெரியும்' என்று எண்ணிக் கொண்டார் மகேந்திரன்.

மறுநாள் தலைமை ஆசிரியர் அறைக்கு முன்னால் மாதவன் புத்தகப் பையுடன் நின்று கொண்டிருந்தான். உள்ளே தலைமையாசிரியருடன் கணித ஆசிரியர் பேசிக் கொண்டிருந்தார். மாதவனுடன் முதியவரான படை வீரரும் இருந்தார்.

"...இதுதான் விஷயம். அவன் இவருக்கு உதவி செய்யறதுக்காகப் பள்ளிக்கு வராமே போயிட்டான். அவங்கம்மா சந்தேகப்படும்படியா மாட்னிக்கோ வேறெதுக்கோ போகலே. ஆனா, அந்தம்மா சாயந்திரம் வந்த அவனை வீட்டுக்குள்ளேயே விடலே. பேசக் கூட இல்லே. அவனை ராத்திரி எங்க வீட்லதான் சார் சாப்பிட்டுப் படுக்க வச்சிருந்தேன். அந்தம்மாவுக்கு இவன் ஒரே மகன். இருந்தாலும் அந்தம்மாவுக்கு இந்தக் கோபம் கூடாது. இந்தா பாருங்க. அவன் துணிஞ்சு உண்மையான காரணத்தையே லீவு லெட்டரிலே எழுதியிருக்கான்" என்று தலைமையாசிரியரிடம் சொன்ன மகேந்திரன் ரகுவிடமிருந்து வாங்கிய லீவு லெட்டரையும் அவரி



டம் கொடுத்தார்.

தலைமை ஆசிரியர் லீவு லெட்டரில் எழுதப்பட்ட காரணத்தை மட்டும் வாய் விட்டு வாசித்தார். "'முதியவர் ஒருவருக்கு உதவி செய்ய...' இப்படி ஒரு காரணத்தை இதுவரை எந்த மாணவனும் எழுதி நான் பார்த்தது இல்லை! அவங்கம்மாவுக்கு ஆள் விட்டிருக்கேன். அவங்களும் வந்துடட்டும்" என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தபோதே பியூன் உள்ளே வந்து, "அந்தம்மா வந்திருக்காங்க" என்றான்.

மாதவனும் அவன் தாயும் உள்ளே வந்தனர்.

"உங்க சொந்தப் பிள்ளையை இப்படி வீட்டுக்கு வரக் கூடாதுன்னு பிடிவாதமா சொல்லலாமா?" என்றார் தலைமை ஆசிரியர்.

"தப்புப் பண்ணலையா! — அதென்ன சாரு, அப்படிச் சொல்றீங்க? நேத்து 'மத்தியானம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுட்டுப் போ, அப்பா நினைவு நாளு'ன்னு ஒண்ணுக்குப் பத்துத் தடவை சொல்லியிருந்தும் இவன் எங்கேயோ போய்ட்டு வரான்" என்று இரைந்தாள் மாதவனின் தாய்.

"அப்படியா விஷயம்? சாப்பிடத்தான் செய்யணும். ஆனாலும், நான் சொல்றதைப் பொறுமையா கேக்கணும்... பையங்க தப்புச் செஞ்சா உடனே 'உனக்கு எந்த வாத்தியார் சொல்லிக் கொடுத்தாருன்னு'தாம்மா கேக்கறாங்க. ஆனால், உங்க பையன் இப்போ நல்லதுதான் செய்துட்டு வந்தான். புத்தகத்திலே 'கஷ்டப்படுகிறவங்களுக்கு உதவு' — என்று கறுப்பு அச்சில எழுதின பாடத்தைச் சொல்லித் தர்றோம்!

"நாங்க வாயாலே சொல்லிக் கொடுப்போம். அது காதுல விழுமோ, காத்துலே அடிச்சிட்டுப் போகுமோ! ஆனால், அதைக் கேட்டு ஒரு கஷ்டப்படற பெரியவருக்கு — அதுவும் நம்ம நாட்டுக்காக உயிரைக் கூடக் கொடுக்கத் தயாராக இருந்த ஒரு படை வீரருக்குக் காய்ச்சல் வந்த சமயம் போய் உதவி செய்திருக்காம்மா உங்க பையன்! புத்தகத்துல படிச்சதை, செய்து காட்டிருக்காம்மா! அவருக்கு யாரும் கிடையாது. அந்தச் சமயத்தில், சின்னவனா இருந்தாலும் 'பள்ளிக்கூடத்திலே அடிப்பாங்களே, வீட்டிலேவைவாங்களே'ன்னு தெரிஞ்சும், 'எல்லாம் வாங்கிப்போம், பின்னாலே, இப்போ உதவி செய்யறதுதான் பெரிசு'ன்னு சரியான முடிவை எடுத்து, உதவி செய்யத் தைரியமாய்ப் போனானே, அவன்தாம்மா சரியான கல்வி கற்றவன். நாங்க இப்படிப்பட்ட கல்வியைத்தாம்மா சொல்லிக் கொடுக்க நினைக்கிறோம். என்ன சார் மகேந்திரன், நான் சொல்றது எப்படி?" என்றார் தலைமை ஆசிரியர்.

"ரொம்பச் சரி சார். இங்கே பாருங்கம்மா. அவங்கப்பா இருந்தா 'இப்படிப்பட்ட மகனைப் பெற நாம கொடுத்து வச்சிருக்கோம்'னுதாம்மா நினைப்பாரு. இல்லையா?" என்றார் மகேந்திரன்.


"ஆமா சாரு. எங்க வீட்டுக்காரரும் இப்படித்தான் மத்தவங்களுக்கு உதவி செய்வாரு. அவரு போயிட்டாரு..." என்று கண்ணீர் விட்டவள், "அவர் நினைவு நாளிலே ஊரைச் சுத்திப்புட்டு அவன் சாப்பிட வரலையேன்னுதான் எனக்குக் கோவம்" என்றாள்.

"கோவப்பட்டுத்தான் அந்தச் சாப்பாட்டை ராத்திரி கூட அவனுக்கு போடலையோ? ஆனா, அவர் நினைவு நாள்லே அவன் சாப்பிடுறது பிடிக்குமா, மத்தவங்களுக்கு ஒரு நல்ல உதவியைச் செய்தது பிடிக்குமா மாதவன் அப்பாவுக்கு?" என்று

"எங்க ஏரியா பிச்சைக்காரனுக்கு ரொம்பத் திமிரு..."

"ஏன்?"

"பிச்சை போடறவங்களோட பேருக்கு மாசம் ஒரு குலுக்கல் நடத்தி எவர்சில்வர் அண்டா பரிசாத் தர்றானாம்...!"



கேட்டார் தலைமை ஆசிரியர்.


மாதவனின் அம்மா அவனை அருகில் இழுத்துச் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள்.

''அவங்கப்பா நினைவு நாளிலே சாப்பிடுறதை விடவும் பெரிய காரியம் செய்திருக்கான் உங்க மகன். படிச்ச படிப்பு இதுக்குத்தான்னும் காட்டியிருக்கான். இதுக்கு பள்ளி ஆண்டு விழாவிலே இவனுக்கு ஒரு பரிசு தரப் போறேன். நீங்களும் விழாவுக்கு வந்திடுங்கம்மா'' என்றார் தலைமை ஆசிரியர்.

''நல்லது சாரு. நான் வர்றேன். எம் பையன் வகுப்புக்குப் போயிட்டு வீட்டுக்கு வரட்டும்'' என்று மாதவனின் தாய் புறப்பட்டாள்.

இதுவரை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்த முதிய படை வீரர் கண்களில் கண்ணீர் 'குபுக்'கென்று வந்து விட்டது. அது ஆனந்தக் கண்ணீர்!

எங்கே போனது நம்பிக்கை!



ஒரு பால்காரி ஆற்றுக்கு அக்கரையிலே வசித்து வந்த முனிவர் ஒருவருக்குத் தினந்தோறும் பால் கொண்டு போய்க் கொடுப்பது வழக்கம்.

ஒரு சமயம் படகுப் போக்குவரத்து சரியாக நடைபெறவில்லை. ஆதலால், நாள்தோறும் சரியான நேரத்திற்குப் பாலைக் கொண்டு போய்க் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. முனிவர் விசாரித்தார்.

பால்காரி, ''சுவாமி நான் என்ன செய்வேன்? தினமும் அதிகாலையிலேயே வீட்டை விட்டுக் கிளம்பி விடுகிறேன். ஆனால், நதிக்கரைக்கு வந்ததும் நீண்ட நேரம் ஓடக்காரனுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது'' என்று பதில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் முனிவர், ''ஏ பெண்ணே! பகவானுடைய நாமத்தை உச்சரித்துப் பெரியோர், பிறவியாகிய பெரிய கடலையே தாண்டிக் கடந்திருக்கிறார்கள்! உன்னால்,கேவலம் இந்தச் சிறிய ஆற்றைக் கூடக் கடக்க முடியவில்லையா?'' என்று கேலியாகக் கேட்டார்.

கள்ளங்கபடமில்லாத அந்தப் பால்காரி, முனிவர் சொன்னதை அப்படியே நம்பினாள். ஆற்றைக் கடப்பதற்குச் சுலபமான வழி தெரிந்து விட்டது என்று பெரிதும் மகிழ்ந்தாள். வஞ்சம் இல்லாத நெஞ்சம் அவளுடையது.

அடுத்த நாள் முதல் முனிவருக்கு அதிகாலையிலேயே உரிய நேரத்தில் பால் கிடைத்தது. ஒருநாள் அவர் பால்காரியிடம், ''நீ முன்போல் இப்பொழுதெல்லாம் தாமதமாக வருவதில்லையே! எப்படி?'' என்று கேட்டார்.

''சுவாமி, தேவரீர் சொன்னபடியே, பகவானின் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து வருகிறேன். ஓடக்காரனுக்காகக் காத்திருப்பதில்லை'' என்று பால்காரி பணிவாகப் பதில் சொன்னாள். முனிவர் இதை எப்படி நம்புவார்? பால்காரியின் வார்த்தையில் நம்பிக்கையில்லாத அவர், ''நீ எப்படி ஆற்றைத் தாண்டி வருகிறாய் என்பதை எனக்குக் காட்டுவாயா?'' என்று கேட்டார்.

பால்காரி சூதுவாது தெரியாதவள். அவள் முனிவரை அழைத்துக் கொண்டு நதிக்கரைக்குப் போனாள். பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்று நீரின் மேல் சர்வ சாதாரணமாக நடந்து போக ஆரம்பித்தாள்! அப்படிச் சிறிது தூரம் சென்றதும் பின்னால் திரும்பிப் பார்த்தபோது முனிவர் நடக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள்!

''சுவாமி! இது என்ன? பகவானின் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள். ஆனால், அதே சமயம் துணி எங்கே நனைந்து விடப் போகிறதோ என்று கைகளினால் தூக்கிப் பிடித்துக் கொள்கிறீர்கள். தங்களுக்குப் பகவானிடத்தில் பரிபூரண நம்பிக்கை இல்லையே!'' என்று கேட்டாள் பால்காரி.

பகவானிடத்தில் வைக்கும் பரிபூரண நம்பிக்கையே எல்லாச் செயல்களுக்கும் காரணமாக உள்ளது.

— ஏ. ஹரி கிருஷ்ணன்,
மேலப்பாளையம்.





● 'சோப்' என்ற சொல் 'SAPO' என்ற இலத்தீன் மொழியில் இருந்து வந்திருக்கிறது. சோப்புக்கு நுரையைத் தருவது 'சபோனின்' என்ற இரசாயனப் பொருள். இது 500 வகைத் தாவரங்களில் இருக்கிறது. 'சபோனின்' என்று வழங்கப்பட்டு 'சபோ' என்று மாறி இப்போது சோப் என்று வழங்கப்படுகிறது.

— நாகை கே. ரவி. கோவை – 18.

கின்னஸ்க்கு நண்பன்!

● சோவியத் யூனியனில் பாரி என்ற செய்தி ஸ்தாபனம் புதிதாகத் தோன்றியுள்ளது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அற்புதங்கள், அசாத்திய சாகசங்கள் பற்றிய தகவல்களை அது சேகரிக்கும். பின்னர் அவை பாரியின் ரிக்கார்டுகள் என்ற அற்புதத் தகவல் களஞ்சியமாக ஆண்டு தோறும் பிரசுரிக்கப்படும். உலக அற்புதங்களிலும் ரிக்கார்டுகளிலும் 70 சதம் சோவியத் யூனியனில் நடைபெறுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். புகழ்பெற்ற கின்னஸ் ரிக்கார்டுகளை விட, பாரியின் ரிக்கார்டுகள் மிகச் சிறப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீரங்கம் ரா. ராகவன்.



சிங்கம் வந்தால்..?

● ஒருமுறை கோபால கிருஷ்ண கோகலே காந்தியிடம் நீங்களும் உங்கள் பெற்றோரும் காட்டு வழியே போய்க் கொண்டிருக்கிறீர்கள். அப்போது, எதிரில்

ஒரு சிங்கம் வருகிறது. அச் சமயம் நீங்கள் தாய் தந்தை இருவரில் முதலில் யாரைக் காப்பாற்றுவீர்கள்? என்று கேட்டார். அதற்கு காந்தி,'முதலில் நான் சிங்கத்தின் வாய்க்குள் புகுந்து விடுவேன். சிங்கம் என்னைக் கொன்று தின்னும் முன் என் தாயும் தந்தையும் தப்பித்து ஓடி விட முடியும். இப்படி அவர்கள் இருவரையும் காப்பாற்றி விடுவேன்'' என்றார்.

— எஸ். ஜெயஸ்ரீ, கைலாசபுரம்.



பிச்சைக்காரன்

● ஓர் அரசன் நகர் உலாவுக்குச் சென்றான். தெருவில் பிச்சைக்காரன் ஒருவனைப் பார்த்தான். அவன் மீது இரக்கம் கொண்ட அரசன், ''என்னோடு வா, நான் உனக்குப் பெரும் பொருள் பரிசாகத் தருகிறேன். அதைக் கொண்டு வசதியாக வாழலாம்'' என்றான்.


அரண்மனைக்கு வந்து சேர்ந்ததும், ''நான் தினமும் இறைவனை வணங்கும் நேரம் வந்து விட்டது. அதை முடித்து விட்டு வருகிறேன். அதன் பிறகு உன் உள்ளம் மகிழப் பெரும் பொருள் பரிசாகத் தருகிறேன்'' என்றான்- அரசன் பிச்சைக்காரனிடம்.

''இறைவா! வந்தவர்களுக்கு எல்லாம் வாரி வழங்குவதற்கு, எனக்கு நிறைந்த செல்வத்தைத் தா!'' என்று அரசன் வழிபாட்டு அறையில் வேண்டிக் கொண்டது பிச்சைக்காரனுக்குக் கேட்டது. அரசன் வெளியே வந்தான்.

ஆனால், பிச்சைக்காரனோ அரசனிடம் பரிசு பெறாமலேயே அரண்மனையை விட்டுச் செல்லத் தொடங்கினான். இதைக் கண்டு திகைத்த அரசன், ''பரிசு பெற வந்த நீ அதைப் பெறாமலேயே செல்வது ஏன்?'' என்று கேட்டான்.

அதற்குப் பிச்சைக்காரன், ''அரசே! நீங்களே கடவுளிடம் பிச்சை கேட்கும் நிலையில் இருக்கிறீர்கள். ஒரு பிச்சைக்காரரிடம் பிச்சை பெற எனக்கு விருப்பம் இல்லை. எனக்கு வேண்டியதை நானே கடவுளிடம் கேட்டுக் கொள்கிறேன்'' என்றான்.

'புதிர்க் கதைகள்' நூலிலிருந்து: நல்லாலம் காசிதாசன்.



1. ஆர்யபட்டா — 1975 ஏப்ரல் 19ந் தேதி ரஷ்யாவிலிருந்து ஏவப்பட்டது.
2. பாஸ்கரா — I — 1979 ஜூன் 7ம் தேதி ரஷ்யாவிலிருந்து ஏவப்பட்டது.
3. பாஸ்கரா II — 1981 நவம்பர் 20ல் ரஷ்யாவிலிருந்து ஏவப்பட்டது.
4. ஆப்பிள் — 1981 ஜூன் 19ல் பிரெஞ்சு கயானாவிலிருந்து அனுப்பப்பட்டது.
5. இன்சாட் — 1 A — 1982 ஏப்ரல் 10ந் தேதி ஏவப்பட்டது.
6. அனுராதா — 1985 ஏப்ரல் 29ல் ஏவப் பட்டது.
7. ரோகிணி — ஸ்ரீ ஹரி கோட்டாவிலிருந்து அனுப்பப்பட்டது. இது 97 நிமிடங்களில் பூமியைச் சுற்றுகிறது.

— கே. உமாமகேஸ்வரி, ஸ்ரீவில்லிபுத்தூர்.



● இமயமலை. இமம் என்றால் வடமொழியில் பனி என்று பொருள். எப்பொழுதும் இம் மலைகள் பனி மூடியவாறு காட்சியளிப்பதால் இவற்றிற்கு இமயமலைகள் என்று பண்டைய மக்களால் பெயரிடப் பட்டது. அதையே ஆங்கிலத்தில் ஹிமாலயாஸ் என்கின்றனர்.

ஆல்ப்ஸ் மலை.ஆல்ஃப்ஸ் என்றால் கெல்டிக் மொழியில் வெண்மை என்று பொருள். வெண்பனி மூடிய மலைச் சிகரங்களைக் கொண்ட மலைத் தொடருக்கு ஆல்ப்ஸ் மலைகள் என்று பெயர் வைக்கப்பட்டு, நாளாவட்டத்தில் ஆல்ப்ஸ் என்று மாறியது.

— ஆர். ஜெயலெட்சுமி.

கிளியே பேசு!



கொஞ்சும் கிளியே மொழிபேசு,
குலவும் அருமைத் தமிழ் பேசு;
நெஞ்சில் நிறைந்த மனிதரையே
நிதமும் அழைத்திடத் தமிழ் பேசு!

பறவை இனத்தில் பிறந்ததுபோல்,
பலரின் நினைவில் கலந்ததுபோல்,
உறவைச் சொல்ல உலவுதல் போல்,
உயர்தனி மொழியாம் தமிழ் பேசு!

எத்தனை வண்ணம் உன்னுடலில்,
எத்தனைத் திண்ணம் உன் அலகில்;
எத்தனை கனிகள் நீ சுவைக்க!
என்னருங் கிளியே தமிழ் பேசு!

உன்னையும் உனது இனங்களையும்,
அழகின் சிரிப்பாய் பாடியவன்
தன்னையும் புதுவைக் குயிலாக்கிக்,
கூவிடும் வழியில் தமிழ் பேசு!

— கா.வெ. தியாகசாந்தான்,
மாத்தூர்.



அணில்...


மிளகெனவே கருமைபூசிப் பிள்ளை அணிலே — கண்கள்
மிளிர்ந்திடுதே ஒளியைவீசிப் பிள்ளை அணிலே!
அளவினிலே சிறியமீசை பிள்ளை அணிலே — கண்டு
அரும்பிடுதே கவிதைஆசை பிள்ளை அணிலே!

துளசிஇலை வடிவழகில் பிள்ளை அணிலே — நாணித்
தோற்றிடுமுன் செவியழகில் பிள்ளை அணிலே!
தெளிவுடனே சுலைமிளிரப் பிள்ளை அணிலே — கோடும்
தீட்டியதார் முதுகொளிரப் பிள்ளை அணிலே?

எழிலுடனே பின்னங்கால்கள் பிள்ளை அணிலே — ரெண்டும்
இங்கிதமாய்த் தான்மடக்கிப் பிள்ளை அணிலே!
பழமதனை முன்னங்கால்கள் பிள்ளை அணிலே — கொண்டு
பற்றியுண்ணும் பாங்குதனி பிள்ளை அணிலே!.

கிளைகளிலே வாலையாட்டிப் பிள்ளை அணிலே — துள்ளிக்
கீழும்மேலும் ஓடியாடும் பிள்ளை அணிலே!
உளமுலவும் ஓவியமே பிள்ளை அணிலே — உந்தன்
உருவமொரு காவியமே பிள்ளை அணிலே!

— தளவை இளங்குமரன்.





உண்மைக் கதை.

குழந்தைகளா கெட்ட சகுனம்?

கதவை யாரோ 'படபட'வென்று இடித்தார்கள். ரங்கப்பா சென்று திறந்தார். பின்னாலேயே மல்லம்மா சென்றாள்.

வாசலில் ஆண்களும் பெண்களுமாக ஊரே திரண்டு வந்து நின்றிருந்தது. எல்லேர் முகத்திலும் அனலும் வெறுப்பும்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கி முன் னின்ற பெத்தண்ணா படியேறி வந்து நின்றார்.

''ரங்கப்பா, பொட்டி கிரி ஏரி உடைப்பு எடுத்து, பயிர் பச்சையெல்லாம் நாசமடைந்து போச்சு. கிராமத்துக் கால்நடைகளுக்கு நோய் வந்து ஒவ்வொண்ணா செத்துக்கிட்டிருக்கு. இதுக்கெல்லாம் காரணம், ஒட்டிப் பிரிந்துள்ள உன் இரட்டைக் குழந்தைகள்தான் என்று எல்லோரும் உறுதியாக நம்புகிறார்கள். பெண் குழந்தைகள் இப்படிப் பிறந்தால் ஊருக்கே அழிவு காலமாம்.''


பெத்தண்ணா, ரங்கப்பாவைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார்.

''இன்று கிராமத்துப் பஞ்சாயத்துக் கூடியது. இதைப் பற்றி எல்லோரும் நிறையப் பேசினார்கள். உன் குழந்தைகளைக் காட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வர வேண்டும் என்று முடிவாகியது.''

கணவனை முந்திக் கொண்டு மல்லம்மா கண்ணீர் மல்க முன்னே வந்தாள்.

''இது அநியாயமான குற்றச்சாட்டு. என் குழந்தைகள் கெட்ட சகுனம் என்றால், அது எங்கள் குடும்பத்தைத்தானே பாதிக்கும்? எப்படி ஊரைப் பாதிக்கும்? போன வருஷம் அடைமழை பெய்த போது காலபைரவி கோவில் அரசமரம் விழுந்ததே...? அதுக்கு யார் காரணம்? அதற்கு முன் ஆண்டு, மழை பொய்த்துப் பஞ்சம் வந்ததே...? அதற்கு என்ன காரணம்? போன ஆண்டுகூட இந்தப் பருவத்தில் கிராமத்துக் கால்நடைகளுக்குக் கோமாரி நோய் வந்ததே...? அப்ப என் குழந்தைகள் பிறந்திருந்தார்களா? இதெல்லாம் இயற்கைச் சதிகள். இதற்கும் என் குழந்தைகளுக்கும் சம்பந்தமே இல்லை. உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு, என் அருமைக் குழந்தைகளைக் காட்டில் விட்டு நாய்களுக்கு இரையாக்க மாட்டேன். இதைச் செய்யச் சொல்பவர்கள் நரகம்

ஹரிசிங்



போவார்கள்'' என்று அழுகையும் துக்கமும் பொங்கக் கூறிய மல்லம்மா, உள்ளே ஓடிச் சென்று, குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்த ஏனையை இறுக அணைத்துக் கொண்டாள்.

ரங்கப்பா, கண்ணீர் மல்க பெத்தண்ணாவை நோக்கினார்.

''நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ... பஞ்சாயத்துத் தீர்ப்புக்கு நாம் கட்டுப்பட்டாக வேண்டும் ரங்கப்பா. விவாதித்துப் பயனில்லை. வரும் வெள்ளிக்கிழமை காலை சூரியன் உதிக்கும் போது உன் குழந்தைகள் இங்கே இருக்கக் கூடாது.
மனைவியைச் சமாதானப்படுத்தி, பஞ்சாயத்துத் தீர்ப்பை நிறைவேற்றுவது உன் பொறுப்பு.''

கனக்கும் உள்ளத்தோடு தெரிவித்த பெத்தண்ணா, படியிறங்கிப் போனார். ஊராரும் பின்தொடர்ந்தனர்.

''எவ்வளவோ ஆண்டுகளாக விரதம் இருந்து பிறந்த குழந்தைகள் என் மல்லீஸ்வரியும் சண்முகேஸ்வரியும். ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் என்பதற்காக, இவர்களைக் காட்டில் கொண்டு போய் விட்டு விடமாட்டேன். இவர்கள் இந்தக் கிராமத்தில் இருக்கக் கூடாது என்பதுதானே பஞ்சாயத்து முடிவு? நாம் இந்தக் கிராமத்தை விட்டே போய்விடலாம்'' என்று விசும்பினாள் மல்லம்மா.

மல்லம்மா நன்றாகப் பாடுவாள். ரங்கப்பா ஹார்மோனியம் வாசிப்பார். அபூர்வமாக ஒட்டிப் பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகளை விட்டுப் பிரிய மனமில்லாது, குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு கிளம்பிய இருவரும், ஊர் ஊராக அலைந்து, பாடித் திரிந்து பிழைத்தனர். அதிசயப் பிறவிகளான மல்லீஸ்வரியையும் சண்முகேஸ்வரியையும் மற்றவர்கள் கண்ணில் படாது மறைத்து வளர்த்தனர். குழந்தைகளுக்கு மூன்று வயதாயிற்று. மல்லீஸ்வரிக்குக் காய்ச்சல் வந்தது. வேறு வழியில்லாது வைத்தியரிடம் குழந்தைகளைக் காட்டும்படி நேர்ந்தது. வைத்தியர் காய்ச்சலுக்கு மருந்து கொடுத்தார்.

அந்த அதிசயக் குழந்தைகளை வளர்க்க ரங்கப்பாவும், மல்லம்மாவும் படும் பாட்டை அறிந்து நெகிழ்ந்து போன வைத்தியர், ''மைசூர் மன்னர், அதிசயக் குழந்தைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுபவர். உங்களுக்கு விருப்பமானால் கூறுங்கள். மன்னரிடம் உங்கள் பெண் குழந்தைகளைப் பற்றிக் கூறுகிறேன். உங்களுக்கு அதிர்ஷ்டம்

இருந்தால், மன்னர் தம் பொறுப்பில் வளர்க்க இவர்களை ஏற்கலாம். உங்களுக்குக் கவலை இருக்காது'' என்று கேட்டார். இருவரும் சம்மதித்தனர்.

மல்லீஸ்வரியையும் சண்முகஸ்வரியையும் நேரில் வரவழைத்துப் பார்த்த மன்னர், உடலொட்டியிருந்த அந்த அதிசயப் பிறவிகளிடம் இரங்கினார். அவர்களுக்கு ஆதரவு காட்ட முன்வந்தார். குழந்தைகளை மன்னரின் பொறுப்பில் விட்டுவிட்டு மன அமைதியுடன் சொந்த ஊர் திரும்பினர் ரங்கப்பாவும் மல்லம்மாவும்.

நாட்கள் ஓடின.


மைசூரில் தசரா. மன்னராட்சி நிலவிய காலம். கோலாகலத்திற்குக் கேட்கவா வேண்டும்? சாமுண்டீஸ்வரி கோவில் வாசலில் கற்பூரம், ஊதுவத்தி வியாபாரம் செய்து கொண்டிருந்தார் புட்டண்ணா. கோவிலில் அன்று அளவுக்கு அதிகமான கூட்டம்.

புட்டண்ணா விசாரித்தார்.

''உடம்பு ஒட்டிய இரட்டைச் சிறுமிகள் மல்லீஸ்வரியும் சண்முகஸ்வரியும் கோவில் பிராகாரத்தில் கோலம் போடுகிறார்கள். இடுப்புக்குக் கீழே ஒரு முழ அளவுக்கு இவர்கள் உடம்பு ஒட்டியிருக்கிறது. இருவரும் விரும்பினால்தான் நடக்கலாம். குளிக்கலாம், உட்காரலாம், படுக்கலாம். இப்படிப்பட்ட அதிசயப் பிறவிகள், ஆலயத்தின் பிராகாரத்தில் குனிந்து கோலம் போடுகிறார்கள் என்றால் அது வியப்பான காட்சிதானே?'' என்று விளக்கிவிட்டு ஓடினார் ஒரு ஜிகினா தொப்பிக்காரர்.

வத்திக் கடையைச் சுருட்டிப் பையில் வைத்துக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாகத் தாமும் சென்று பார்த்தார் புட்டண்ணா. உடம்பு ஒட்டிய இரட்டைச் சிறுமிகள் ஒன்றாகக் குனிந்து, நகர்ந்து, நிமிர்ந்து ஒரே கோலத்தை இருவருமாகப் போட்டு முடித்த காட்சி வியக்க வைப்பதாக இருந்தது. சாமி தரிசனத்திற்காகக் காத்திருந்த கூட்டத்தை விட, இரட்டைச் சிறுமிகளைக் காணக் கூடியிருந்த கூட்டமே மிக அதிகமாக இருந்தது!

புட்டண்ணாவின் வியாபார மூளை தீவிரமாக வேலை செய்தது. இரட்டைச் சிறுமிகள் கோலம் போடுவதைக் காணவே இவ்வளவு கூட்டம் என்றால், இவர்களுக்கு ஏதாவது ஆட்ட பாட்டம் சொல்லித் தந்து,



பூகம்பச் செய்தி

சீனாவிலுள்ள டியென்ட்சின் பகுதியில் 1965 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் தேதி ஒரு பூகம்பம் ஏற்பட்டது. இந்தப் பூகம்பம் ஏற்படவிருந்த சில மணி நேரங்களுக்கு முன் அந்தப் பகுதியிலிருந்த கோழிக் குஞ்சுகள் கூட்டிற்குள் செல்ல மறுத்தன. புலிகள் அமைதி யிழந்து காணப்பட்டன. யாக் எருமைகள் சாப்பிட மறுத்து விட்டன. குதிரைகளும், ஆடுகளும் பரபரப்புடன் இங்குமங்கும் ஓட ஆரம்பித்தன.

இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்ததில் பூகம்பம் ஏற்படப் போவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் சக்தி விலங்குகளுக்கு உள்ளது புலனாகிறது என்று ஸ்ரீவத்சவா தமது 'ஃபோர்காஸ்டிங் எர்த் குவேக்ஸ்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

— சா. இரா. மணி, வந்தவாசி.

காட்சிப் பொருளாக்கிக் கட்டணம் வைத்தால் எவ்வளவு கூட்டம் வரும்? எவ்வளவு வசூலாகும்?

புட்டண்ணா சிறுமிகளைப் பற்றி விசாரித்தார். அவர்கள் மன்னரின் ஆதரவில் இருப்பது தெரிந்ததும் சிறிது நம்பிக்கையிழந்தார். ஆனால், முயற்சிகளை விடவில்லை. கிராமத்திற்குச் சென்று மல்லம்மாவையும் ரங்கப்பாவையும் பார்த்துப் பேசினார். பெற்ற குழந்தைகளின் உடல் குறையைக் காட்சிப் பொருளாக்கிப் பணக்காரர்களாக மல்லம்மா மறுத்து விட்டாள். புட்டண்ணா அயரவில்லை.

''மன்னருக்கு வயதாகிவிட்டது. அவர் காலத்திற்கும் பிறகு என்னவாகும் என்று சொல்ல முடியாது. விரட்டி விட்டால் என்ன செய்ய முடியும்? அவர்கள் வயது வந்த பெண்களாக இருப்பார்கள். நீங்கள் இன்னும் தள்ளாதவர்களாக இருப்பீர்கள். என் யோசனைக்கு இணங்கினால், அவர்களின் எதிர்காலத்திற்குப் பணம் சேர்த்து வைக்கலாம்.'' என்று உண்மை நிலையைக் கற்பனை செய்து கூறினார். மல்லம்மா இறங்கி வந்தாள்.

அதிசய இரட்டைச் சிறுமிகளான மல்லீஸ்வரியும், சண்முகஸ்வரியும் மன்னரின் ஆதரவிலிருந்து விடுக்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர். படிக்க, ஆட, பாட, கோலாட்டம் போட, அம்மானை ஆட, ஸ்கிப்பிங் ஆட, பாண்டியாட, ஓவியம் வரையப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆங்கிலமும் சொல்லித் தரப்பட்டது. எல்லாம் புட்டண்ணாவின் ஏற்பாடுதான். அடுத்த ஆண்டு தசரா கொண்டாட்டத்தின் போது ''மைசூர் அதிசய இரட்டைப் பெண்களின் கலைக் காட்சி'' ஸ்டாலை அமைத்துப் பரபரப்பாக விளம்பரப்படுத்தி, கட்டணக் காட்சி நடத்தினார் புட்டண்ணா. கூட்டத்தையும் பண வசூலையும் கட்டுப்படுத்த முடியவில்லை! கட்டணத்தை இரட்டிப்பாக்கினார்! அப்படியும் கூட்டம் குறையவில்லை! வசூல் கொழித்தது. பேண்டு வாத்தியம், மேளம் எல்லாம் சேர்த்துக் கொண்டு, மேலும் சில புதுமைகளைப் புகுத்தி, 'கம்பெனி'யைப் பெரிதாக்கினார். இரட்டைச் சிறுமிகள் முழுமையாக ஒத்துழைத்தார்கள். வசூல் பயங்கர வேகத்தில் கொழித்தது!

வெளியூர்களிலிருந்தெல்லாம் அழைப்பு வந்தது. சென்னை கபாலீஸ்வரர் கோவில் திருவிழா, திருவொற்றியூர் திருவிழா, திருச்சி, தஞ்சை, மதுரை என்று தமிழகத்தின் பல நகரங்களிலும் இரட்டையர் காட்சி நடந்து, புதையலாகச் சம்பாதித்துக் கொடுத்தது. பம்பாய், கல்கத்தா, டெல்லி என்று இந்தியாவெங்கிலுமிருந்தும் அழைப்பு வந்து, 'கம்பெனி' சென்றது. கடல் கடந்து இலங்கைக்கும், பர்மாவுக்கும் கூடச் சென்று வந்தனர். பிரான்ஸ், எகிப்து, இத்தாலி, ஸ்வீடன், ஸ்பெயின், ஜெர்மெனி, ஹங்கேரி, கிரீஸ், நார்வே, டென்மார்க், ஹாலந்து, ஸ்விட்சர்லாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் அப்படியே லண்டனுக்குப் போக ஒரு பயணத் திட்டம் போடப்பட்டது!

முதலில் பிரான்சுக்கு வந்தனர். ஐரோப்பியக் கலைகளின் தாயகமான பாரிஸ் நகரில், புகழ்மிக்க ''டிரபால்கர்'' சதுக்கத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். இந்திய அதிசய இரட்டைப் பிறவி

களான மல்லீஸ்வரியையும், சண்முகஸ்வரியையும் எல்லா நாளேடுகளும், பத்திரிகைகளும் புகழ்ந்து எழுதி, புகைப்படத்தையும் வெளியிட்டுத் தங்களை மறந்து அவர்களுக்குக் காசில்லாமல் மிகப் பெரிய விளம்பரம் கொடுத்தன! வசூல் பிய்த்துக் கொண்டு போனது! உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் பெர்னார்ட்ஷா நேரில் வருகை தந்து, இரட்டையர்களின் திறமையைக் கண்டு வியந்து பாராட்டி வாழ்த்தினார்! அவர்களோடு கேரம் போர்டு ஆடித் தோற்றார்!

இங்கிலாந்து பர்மிங்ஹாமின் பிக்னிஹாலில் காட்சி நடந்தபோது, அரச குடும்பத்தினரிடமிருந்து அழைப்பு வந்தது. லண்டனில் இங்கிலாந்து அரசியாரின் விருந்தினராகத் தங்கியிருந்து அரச குடும்பத்தினரை மகிழ்வித்தனர். உலகப் புகழ்பெற்ற 'ஒலிம்பியா தியேட்டரில்' தொடர்ந்து இவர்கள் காட்சி நடந்து சாதனை படைத்தது.

புட்டண்ணா தாம் வாக்குக் கொடுத்தபடியே வசூலில் கணிசமான ஒரு பகுதியை இரட்டையர்களுக்கு வழங்கினார். அவர்களுக்கு எவ்விதக் குறையும் இன்றிக் கருத்தாகக் கவனித்து அன்புடன் நடத்தினார். இதன் காரணமாகவே, எவ்வளவோ பேர் பணத்தாசை காட்டியும் இரட்டையர்கள் புட்டண்ணாவை விட்டு விலகிவர மறுத்து உண்மையாக இருந்தனர்.

பெரும்புகழோடும், செல்வத்தோடும் பெங்களூரில் வந்து நிலையாகத் தங்கினர் இரட்டையர்கள். மல்லீஸ்வரிக்கு விஷக் காய்ச்சல் வந்தது. என்ன வைத்தியம் பார்த்தும் பயனில்லாது அவள் இறந்தாள். அவசரம் அவசரமாக அறுவைச் சிகிச்சை செய்து, சண்முகஸ்வரியையாவது காக்க முயன்றனர். ஆனால், அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருக்கும் போதே சண்முகஸ்வரி இறந்தாள்.

ஒட்டிப் பிரிந்த இரட்டையர் என்றாலே சயாமிய இரட்டையரைப் பற்றியே நினைக்கிறோம்! மல்லீஸ்வரியையும் சண்முகஸ்வரியையும் எவ்வளவு பேர்களுக்குத் தெரியும்?




'அதோ என் அம்மா!'வுக்குப் பரிசு!

குழந்தைக் கவிஞரின் மறைவுக்குப் பின் குழந்தை எழுத்தாளர் சங்கம் திரு. நெ. சி. தெய்வசிகாமணியின் தலைமையில் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. இலக்கியச் சிந்தனையைப் போலவே மாதந்தோறும் வெளியாகும் எல்லாச் சிறுவர் கதைகளையும் பரிசீலனை செய்து, சிறந்த ஒன்றைத் தேர்வு செய்து பரிசும் வழங்குகிறார்கள்! கோகுலத்தில் வெளியான 'தனலக்ஷ்மி கருப்பையா'வின் 'அதோ என் அம்மா!'வும், புவனை கலைச்செழியனின் 'பணத்தைத் திருப்பிக் கொடு!'வும், முறையே செப்டம்பர், அக்டோபர் மாதங்களின் சிறந்த சிறுகதைகளாகத் தேர்வு செய்யப்பட்டுப் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளன. பரிசு அளித்த அமைப்பையும், எழுதிய ஆசிரியர்களையும் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகிறோம்.



'பணத்தைத் திருப்பிக் கொடு!'வுக்குப் பரிசு!



படம் இங்கே! பாடல் எங்கே? —போட்டி

படத்தை நன்றாகப் பாருங்கள். அழகான குடும்பம் ஒன்றின் மகிழ்ச்சியான காட்சி!

பட்டாளத் தாத்தா யூனிபாரத்திலேயே யானையாக மாறித் தவழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் முதுகில் அருமைப் பேரன். தாத்தாவின் முகத்தில் பெருமிதம். மகிழ்ச்சி. பேரனின் முகத்தில் ஒரே ஆனந்தம்.

யானைக்கு இரு பக்கமும் யார் யார் இருக்கிறார்கள் பாருங்கள். டப்பாவைத் தட்டிக் கொண்டு அண்ணன். தட்டைத் தட்டிக் கொண்டு அக்கா. தம்பியும், தங்கையும்... ஒருவர் பீப்பி ஊதுவது போலவும், இன்னொருவர் மேளம் கொட்டுவது போலவும் கைகளால் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். அட...! அவர்களுக்கும் முன்னால் பாருங்களேன்... பூனையார் இரு கால்களையும் தூக்கிக் கொண்டு ஆடுகிறார். நான் சளைத்தவனா என்று ஜிம்மியும் ஆடுகிறது!

இந்த ஊர்வலத்திற்குப் பின்னால் கையை மோவாயில் வைத்து அதிசயித்தபடி பாட்டி. புன்சிரிப்போடு அப்பா, வாயில் கைபொத்திச் சிரிப்பை அடக்கி அம்மா, எல்லோரும் இருக்கிறார்கள். எல்லோர் முகத்திலும் பெருமிதம், ஆனந்தம்.

இதில் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, அக்கா, அண்ணன், தங்கை, குட்டிப் பாப்பா, ஜிம்மி, பூனையார், யானையார் எல்லோரும் இருக்கிறார்கள். இன்னும் என்ன வேண்டும்? இவர்களை வைத்து 20 வரிகளுக்கு மேற்படாமல் ஒரு பாடலை எழுதி அனுப்புங்கள். பாடலைப் பாடும் குழந்தைகள், மகிழ்ச்சியுடன் தாங்களாகவே தாளம் போடும்படி பாடல் இருக்க வேண்டும். கண்டிப்பாகப் பரிசு உண்டு. மறக்காது கூப்பனை அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர், கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032.

பாடல் எழுதுங்கள் — போட்டி

கூப்பன்

பெயர்: ....


முகவரி: ....

....

....

பின் கோடு ....

முடிவு தேதி: 16.1.1991.



லைட் மிடில் பிரிவில் கனடாவின் டோவ்னே இந்தியாவின் நிவாங் மோதலில் ஒரு கட்டம்.

ஸ்போர்ட்ஸ்-1
உலகக் குத்துச் சண்டை

தென்றமணி

குத்துச்சண்டை என்ற பாக்சிங் தற்காப்புக்கு உதவுவதோடு, எதிரியைத் தாக்கி மடக்கும் பந்தயமுமாகும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சுமேரியர்கள் (Sumerians) இந்தக் கலையில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். ஏதென்சில் நடைபெற்ற குத்துச் சண்டையின் போது வெறும் கைகளால் தாக்கிச் சண்டையிடுவதைக் கண்ணியமற்ற விளையாட்டாகக் கருதுவோர் எண்ணிக்கை கூடியது. பார்வையாளர்களும் இதே கருத்தோடு இருந்தனர். இதன் விளைவாகக் கைகளில் கையுறைகளை அணிந்து குத்துச் சண்டையிடுவது என்ற பழக்கம் 1872 இல் ஏற்பட்டது. ஆனால், உலகக் குத்துச் சண்டைப் பந்தயங்களில் 'கையுறை' அணிய அனுமதி இல்லை. இருப்பினும் இப்பொழுது நவீன குத்துச் சண்டை வீரர்கள் எட்டு அவுன்ஸ் எடையுள்ள தோல் கையுறைகளை அணிந்துதான் சண்டையிடுகிறார்கள்.

1865 ஆம் ஆண்டுக்கு பாக்சிங் பந்தய வரலாற்றில் முக்கிய இட

புகைப்படம் — நன்றி: தினமணி

முண்டு. இந்த ஆண்டில்தான் குயீன்ஸ்பரி சட்டதிட்டங்களின்படி இந்த விளையாட்டில் வன்முறைத் தன்மை நீக்கப்பட்டு, மற்ற விளையாட்டுகளுக்கு இணையாக இதுவும் ஒரு கலையாக ஏற்கப்பட்டுக் கௌரவமான ஓர் இடம் மக்களிடையே தரப்பட்டது.

குத்துச் சண்டைக்கலைஞர் ஒருவர் எதிரியின் தாக்குதலில் விழுந்து விட்டாலோ, சோர்ந்து சாய்ந்தாலோ, அவருக்குப் பத்து வினாடிகள் அவகாசம் கொடுப்பார்கள். இதற்குள் அவர் முயன்று எழுந்து விடலாம். அப்படியும் அவர் எழுந்திருக்கா விட்டால் உடனே ரெஃபரி பத்து வரை எண்ணுவார். அதற்குளும் அவர் எழுந்திருக்கா விட்டால், அக்கலைஞர் தோல்வியுற்று விட்டதாக ரெஃபரி அறிவித்து விடுவார்!

குத்துச் சண்டைக் கலைஞர்கள் எட்டு வகைகளாக உடல் எடையின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறார்கள்! இரண்டாவது உலகப் போரின் போது, குத்துச் சண்டை தீவிரம் பெற்றது. வலிமைக்காக இராணுவ வீரர்கள் இதில் ஆர்வம் காட்டிப் பயின்றார்கள். இந்த விளையாட்டில் வயிற்றுக்குக் கீழே தாக்குவது 'பௌல்' ஆகும்!

பீஜிங்கில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட இந்தியக் குத்துச் சண்டை வீரர் கோபால் தேவாங் ஆறாவது உலகக் கோப்பைப் போட்டிக்கு அனுப்பப்படும் இந்திய அணியின் எட்டுப் பேர்களில் ஒருவர்! இவர் பீஜிங்கில் சீனக் குத்துச் சண்டை வீரர் வாங்க் யீ வீயிடம், வெற்றி தோல்வி பற்றிக் கருத்து வேறுபாடு எழத் தோல்வியைத் தழுவியவர்! கோபால் தேவாங்கோடு செல்லும் மற்றொரு பிரபல இந்தியக் குத்துச் சண்டை வீரர் கிள்ளிகர். இவர் 89 ஆம் ஆண்டில் ஆசியக் குத்துச் சண்டைப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்றவர். இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற தெற்காசிய பெடரேஷன் குத்துச் சண்டைப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் பெற்றவர். இந்தியாவின் 'இரு நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்றுஇவர்களைக்குறிப்பிடுகிறார்கள்.

நவம்பர் பத்தாம் தேதியிலிருந்து பம்பாயில் அமெச்சூர் பாக்சிங் கழகம் 'எம். ஆர். எப்.' உதவியோடு உலகக் குத்துச் சண்டைப் போட்டியை நடத்தியது. இதே பம்பாயில்தான் 1980 ல் ஆசியக் குத்துச் சண்டைப் போட்டி நடைபெற்றது.

நியூயார்க்கின் மாடிசன் சதுக்கப் பூங்கா குத்துச் சண்டை வரலாற்றில் தனிப்பெருமை பெற்றது. இதில்தான் முகம்மது அலி, மைக்டைசன், சுகர்ரே லியோனார்டுபோன்றஉலகக்குத்துச் சண்டைக் கலைஞர்கள் தங்கள் திறமையைக் காட்டிப் புகழேணியில் ஏறினார்கள்.

இன்றைய நவீன குத்துச் சண்டைப் போட்டியில் சிறப்பான இடத்தைப் பிடித்திருப்பவர்கள் க்யூபாவைச் சேர்ந்த கலைஞர்கள். குத்துச் சண்டைக் கலைஞர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களை உலக அரங்கில் முன்னேற்றிய பெருமைக்கு உரியவர் அல்சைட்ஸ் செகரா குப்பா. உலகப் போட்டியாளர்களில் இரண்டாவது இடத்தைப் பெற்ற ரிகலியோ மார்வலோ, 1989 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஈரிக் கிரிபினிடம் தோல்வி கண்டவர் என்பது சுவையான செய்தி!

ஆக்லண்ட் காமன்வெல்த் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற கனடா குத்துச்சண்டை வீரர் ரெய்மாண்ட் டௌனி உலகின் ஐந்தாவது இடத்தைப் பெற்றவர். இவருக்கு ஸீயோல் ஒலிம்பிக் பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் கிட்டியது. இவர் மற்றொரு தங்கப்பதக்கத்தை ஒலிம்பிக்கில் பெற்று விட்டு 1992 ஆம் ஆண்டு புரொபஷனல் ஆட்டக்காரராக மாறவிருக்கிறார்! இவரது கனவு நனவாகுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

உலகக் குத்துச் சண்டைப் போட்டி சில அதிர்ச்சி முடிவுகளையும்தந்தது!

க்யூபா சாம்பியன்களை முறியடிக்கக் கூடிய அபாரத் திறமை அமெரிக்கக்குத்துச்சண்டை வீரர்களான ஈரிக் கிரிப்பின், செக்கியோரெய்ஸ், லாரி

டோனால்டு போன்றவர்களுக்கு உண்டு என்ற எண்ணத்தை அமெரிக்கக் கலைஞர்கள் பார்வையாளர்களின் மனத்தில் தோற்றுவித்தனர்.

உலக சாம்பியன் முகம்மது அலி வண்ணத்துப் பூச்சி மாதிரிப் பறந்து, தேனீ மாதிரிக் கொட்டி தாம் ஹெவி வெயிட் சாம்பியன் என்பதை நிரூபித்திருக்கிறார். உலகின் சூப்பர் பாப்புலர் விளையாட்டுச் சேம்பியனான இவர், பல விளையாட்டுப் போட்டிகளில் லட்சக்கணக்கான டாலர்களைப் பரிசாகப் பெற்றவர்.

உலகம் நன்கறிந்த ஜார்ஜ் போர்மன்,மது அருந்துவதிலும்மாத்திரைகளை விழுங்குவதிலுமே பொழுதைப்போக்கினார். பதினாறு வயதில் டெலிவிஷன் வர்த்தக ஒளிபரப்பைக் கேட்டு, குத்துச் சண்டையில் பங்கேற்க வந்தவர் இவர். இவர் ஒலிம்பிக் சாம்பியன் ஆனதும், மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் ரஷ்யாவின் குத்துச் சண்டை வீரர் ஐயோனாஸ் செபூலின்சைத் தோல்வியடைய வைத்து, அமெரிக்கக் கொடியை ஏந்தி வெற்றிப் பவனி வந்தவர்!

க்யூபாவின் தலைசிறந்த குத்துச் சண்டைக் கலைஞர் ராபர்ட்டோ பாலாடோ கலந்து கொள்ள இயலாமல் தடை விதிக்கப்பட்டது. காரணம் இவர் கிழக்கு பெர்லினில் வெள்ளிப் பதக்கம் பெற மறுத்ததோடு ஒழுங்கீனமாகவும் நடந்து கொண்டார்! இதற்காக மன்னிப்புக் கோரி, அதற்குப் பிறகு அனுமதி பெற்றுத்தான் பம்பாயில் நடந்த போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்!

க்யூபா குத்துச் சண்டைக் கலைஞர்கள் இந்திய தட்பவெப்பச் சூழ்நிலையைப்புரிந்துகொண்டு சண்டையிடுவதற்காக பெங்களூருக்கு வந்து, பயிற்சி எடுத்திருக்கிறார்கள்! க்யூபாவின் 'பாபுலர்' விளையாட்டு இது. இளமையிலேயே குத்துச் சண்டை வீரர்களைப் பழக்கித் தயாரித்துத் தருவது க்யூபாவின் தனிச் சிறப்பு. இந்தியாவில் கிரிக்கெட்டுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் க்யூபாவில் பாக்சிங்குக்குத் தரப்படுகிறது. க்யூபாவின் ஹீரோ டி. ஸ்டீவன்சன் மூன்று ஒலிம்பிக்களில் தங்கப் பதக்கங்களைத் தொடர்ந்து பெற்றவர்! (மியூனிச், மாண்ட்ரீல், மாஸ்கோ)

ஸேவியன் பெலிக்ஸ் க்யூபாவுக்கு உலக அமெச்சூர் குத்துச்சண்டைப் போட்டிகளில் பெருமை தேடித்தருவதைப் பார்த்து, அமெரிக்கக் குத்துச் சண்டை விசிறிகள், பத்து மில்லியன் டாலர்களில் அவரை ஒப்பந்தம் செய்ய முன் வந்தார்கள்! ஆனால், ஸேவியன் பெலிக்ஸ் என்ன சொன்னார், தெரியுமா?

"எனக்கு,எங்கள் க்யூபாவிலேயே பத்து மில்லியன் விசிறிகள் இருக்கிறார்கள்! பத்து மில்லியன் டாலர்களை விட என் விசிறிகளே எனக்குப் பெரும் சொத்து!" என்று சொல்லி மறுத்து விட்டார்! இவர் போன்ற நாட்டுப் பற்று மிக்க கலைஞர்களைப் பெற்றுள்ள க்யூபா கொடுத்து வைத்த நாடுதான்!

தமிழ்நாட்டின் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தனஞ்சயன், இராணுவத்தில் ஹவில்தாராகப் பணியாற்றுகிறார்! தலைசிறந்த க்யூபா ஆட்டக்காரர்களையும் 'ஜகா' வாங்கும்படி வைத்த இவரது திறமை அனைவரையும் மூக்கில் விரல் வைக்கச் செய்தது!

கடுமையான போட்டிகள்! இறுதி வரை யார் வெல்லுவார் என்பதை ஊகிக்கக் கூட முடியாத நிலை! ஆனால், எம். ஆர். எப். நிறுவனம் கிரிக்கெட்டைப் போலவே குத்துச் சண்டைக் கலைக்குப் புத்துயிர் கொடுத்திருப்பதை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

பம்பாய் உலகக் குத்துச் சண்டைப் போட்டியில் ஒரே ஒரு தங்கத்தைத் தவிர எல்லாத் தங்கப் பதக்கங்களையும் க்யூபா நாட்டுக் குத்துச் சண்டை வீரர்கள் அள்ளிக் கொண்டு போனார்கள்! க்யூபாவின் கோச் சக்கரா,பெருமிதத்துடன் எம். ஆர். எஃப் கோப்பையை உயரத் தூக்கி வைத்துக் க்யூபாவின் பெருமையை உலகறிய வைத்தார்! ஒரே ஒரு தங்கப் பதக்கத்தைப் பெற்றுச் சாதனை படைத்தவர் அமெரிக்கக் குத்துச் சண்டை வீரர் கிரீபின். தம் நண்பர்

கிரீபின் பதக்கம் பெற்றதைக் கண்டு அமெரிக்கக் குத்துச் சண்டை வீரர் லயனல் ஓடாம், அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார். அந்த மகிழ்ச்சி வெள்ளத்தில் குத்துச் சண்டையின் பல்வேறு நுணுக்கங்களை மேடையில் செய்து காட்டி விசிறிகளை மகிழ்வித்தார்!

இந்தியக் கலைஞர்களைப் பற்றிச் சொல்லவில்லையே என்கிறீர்களா? இந்தியாவின் பதினேழு வயதான யாதவ், செமிஃபைனலில் மிக அற்புதமாகத் தன் திறமையைக் காட்டிக் க்யூபா நாட்டுக் கலைஞர் ஆர்லேன் டோவின் வெற்றி முயற்சிகளுக்குப் பல முட்டுக்கட்டைகளைப் போட்டு, விசிறிகளை வியக்க வைத்தார்.


க்யூபா கலைஞர்களின் திறமை உலகத் திறனாய்வாளர்களை அயர வைப்பதாக அமைந்தது.

ஸ்போர்ட்ஸ்-2

பலூன் திருவிழா

சென்னை எழும்பூர் இராஜரத்தினம் ஸ்டேடியம் வெள்ளிக்கிழமை அதிகாலையிலேயே களை கட்டியிருந்தது. குளிரையும் பொருட்படுத்தாது நூற்றுக்கணக்கான குழந்தைகளும் பெரியவர்களும் கூடியிருந்தார்கள். வண்ண வண்ண உடையணிந்த குழந்தைகளுக்குப் போட்டியாக வண்ண வண்ண இராட்சத பலூன்கள் மைதானத்தின் நடுவில் குடைவிரித்து வானில் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தன.

வாயால் காற்றை ஊதி உப்ப வைக்கும் சின்னச் சின்ன பலூன்களைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், அதுவரை நாம் கண்டறி





யாத காட்சி. ஸ்டேடியத்தின் திறந்த வெளி நடுவில் காற்றில் அசைந்து கொண்டு வானில் பறக்கத் தயாராகிக் கொண்டிருந்த இராட்சத வண்ண பலூன்களை வெப்பக் காற்றால் உப்ப வைத்துக் கொண்டிருந்தார்கள்!


இந்த இராட்சத பலூன்கள் காற்றில் மிதக்கும் அளவுக்கு இலேசாக இருக்க வேண்டும் என்பதற்காக, ஆயிரம் சதுர மீட்டர்கள் கொண்ட நைலான் இழைகளால் உருவாக்கப்பட்டவை. ஆனால, வலுவில் சற்றும் குறைந்தவை அல்ல. அதோடு, இந்த நைலான் இழைகள் தீப்பிடிக்காதவை!

ஓர் இராட்சத பலூனின் உயரம் எவ்வளவு தெரியுமா? 24 மீட்டர்! இவற்றை உப்ப வைக்கத் திரவ நிலையிலான பேரேஃபின் வாயு அல்லது பூடேன் வாயு 'பர்னரில்' எரிக்கப்பட்டு, வெப்ப வாயுவாகப் பலூன்களுக்குள் அடைக்கப்பட்டு, அவைகளை உப்ப வைக்கின்றன. அடைக்கப்பட்ட இந்த வெப்ப வாயுக்கள், பலூனை 12,000 மீட்டர் உயரம் வரை தூக்கி, காற்றில் மிதக்க வைக்கும் சக்தி கொண்டவை! ஆனாலும் கூட, 160 மீட்டர் உயரம் வரைதான் பலூன்களைப் பறக்க விடுகிறார்கள்.

இந்த இராட்சத பலூன்கள் வானில் இரண்டரை மணி நேரம் வரை காற்றடிக்கும் திசையில் பறந்து செல்லக்கூடியவை. ஆனாலும், இவற்றைச் சிக்கனமாக இயக்கி இருபது மணி நேரம் வரை கூடப் பறக்க வைக்கலாம்! இந்த வகையிலான ஒரு பலூனைத் தயாரிக்க சுமார் நாலரை இலட்சம் ரூபாய் வரை செலவாகுமாம்!

துணிச்சலான சாகசச் செயல்களை வானில் செய்து காட்டிச் சாதனை படைக்கத் துடிப்போர்கள் ஒன்று கூடி, அயல்நாடுகளில் 'பலூன் கிளப்' அமைப்புகளை ஆரம்பித்துள்ளார்கள். மக்களைத் திகைக்க வைத்த இவர்களது சாதனைகள், இத்தகைய ஒரு கிளப்பை இந்தியாவிலும் ஆரம்பிக்கத் தூண்டின. 1970 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்ட்ராங் இந்திய பலூன் கிளப்பைத் தொடங்கி வைத்தார். இதுவரை இந்த கிளப், ஐந்து சர்வதேச பலூன் விழாக்களை நடத்தியுள்ளது. ஒருமுறை இதில் பங்கு கொண்ட டச்சு நாட்டு பலூன் நிம்பஸ், சப்தர் ஜங் டெல்லி விமான நிலையத்திலிருந்து கிலாசபர்கர் வரை பறந்து சாதனை படைத்துள்ளது.

இந்த ஆண்டு (1990) இந்திய பலூன் கிளப் தனது 20 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. அதன் ஒரு நிகழ்ச்சியாகவே சென்னை இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் பலூன் திருவிழா நடந்தது. இதில் இந்திய பலூன்காரர்களோடு இங்கிலாந்து, போலந்து, டென்மார்க், ஸ்பெயின் ஆகிய பல நாட்டுக் காரர்களும் பங்கு கொண்டனர்.



பலூன் திருவிழாவில் போட்டிகளும் உண்டு. ஒரு குறிப்பிட்ட எல்லையை எந்த பலூன் கடக்கிறதோ அதற்கு ஒரு பரிசு. அது மட்டுமா? எந்த பலூன் கடைசியாகக் கீழே இறங்குகிறதோ அதற்கும் கூடப் பரிசு உண்டு!

'த்ரில்' போட்டிகளும் இதில் உண்டு. ஏதாவது ஒரு பலூனில், முயல் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். எந்த பலூனில் அது இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஒரு கொடிக் கம்பத்தில் சாவி வளையம் ஒன்று மாட்டப்பட்டிருக்கும். பலூன்காரர், பலூனை லாவகமாக இறக்கி, சாவிக் கொத்தை எடுக்க வேண்டும். இதற்குக் கார் பரிசு கிடைக்கும்!

இந்திய பலூன் கிளப்பின் உறுப்பினரான புது டெல்லி பாண்டு சிந்தாமணி பலசுவையான அனுபவங்களைத் தந்தார்.

''ஒருமுறை இந்திய பலூன் கிளப் உறுப்பினர்கள் பயணம் செய்த பலூன், இந்திய எல்லையைக் கடந்து பாகிஸ்தானின் கிராமம் ஒன்றில் இறங்கி விட்டது! கிராம மக்கள் ஓடி வந்தனர் எங்களை நோக்கி. என்ன செய்வார்களோ என்று எல்லோரும் நடுங்கிக் கொண்டிருந்தோம். ஆனால், அவர்கள் எங்களுக்கு எவ்வித தீங்கும் செய்யவில்லை. மாறாகக் குழந்தைகள் ஒன்றுகூடி எங்கள் பலூனைச் சுற்றி ஆட்டம் ஆடி, பாட்டுப் பாடி மகிழ்ச்சியோடு இனிப்பு வழங்கி அன்பு காட்டி மெய்மறக்க வைத்தனர்!''

''எங்கள் புது டெல்லி இந்திய பலூன் கிளப் தலைவர் விசுவ பந்து குப்தா, ஒருமுறை ஜெய்பூரில் பலூனில் பறந்து விட்டுக் கீழே இறங்கும் போது, கேரட் ஏற்றிய வண்டியில் இறங்கி விட்டார்! சொந்தக்கார விவசாயிக்கு ஒரே கோபம். அவர் அவைகளை விற்பதற்காகச் சந்தைக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்தார். ஆனால், இறங்கிய வண்ண பலூனைக் காண ஓடி வந்து உற்சாகமாகத் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள், வண்டியில் இருந்த கேரட்டைத் தாங்களே விலைக்கு வாங்கிக் கொண்டதும் விவசாயிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி!''

''சமீபத்தில், ஹைதராபாத் நகரில் ஏற்பட்ட கலகத்தைப் பற்றியும், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதையும் செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள். நான் பறந்த பலூன் எதிர்பாராதவிதமாகக் கலகம் பாதிக்கப்பட்ட பகுதி ஒன்றில் திடீரென இறங்கி விட்டது! கலகம் ஏற்படக் காரணமான, தங்கள் வேற்றுமைகளை மறந்து மக்கள் ஒன்று திரண்டு என்னை அன்போடு வரவேற்றுப் பாராட்டி, உற்சாகப்படுத்தினர். ஊரடங்கு உத்தரவை அமுல்படுத்த நின்றிருந்த இராணுவத்தினரும், காவல் துறையினரும் கூட இதைக் கண்டு திகைத்து மகிழ்ந்தனர்!''

புதிய துணிவுமிக்க அனுபவங்களுக்காக ஏங்குவோருக்கு மட்டும் தான், பலூன் திருவிழாக்கள் உதவுகின்றன என்பதில்லை. இவற்றில் பங்கு கொள்ள வரும் அயல் நாட்டினரால் சுற்றுலாத் துறைக்குக் கணிசமான வருமானமும் கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற பலூன் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்த பெருமை ஐ. டி. சி. நிறுவனத்திற்கு உரியது. விழா நடைபெற்ற போது, கூடியிருந்த குழந்தைகள் தாங்களும் பலூனில் பறந்து செல்லும் அனுபவத்தைப் பெறத் துடித்தனர். ஆனால், அந்த அரிய வாய்ப்பு ஒருசிலருக்கே கிடைத்தது. இருப்பினும் கண்கவர் இராட்சத பலூன்கள் வானை நோக்கிப் பறந்த போது மனத்தில் நிறைந்த ஒரு பிரமிப்பும், மகிழ்ச்சியும் கூடியிருந்தோர் அனைவருக்குமே கிடைத்தது!


கந்தன் ஒரு முழுச்சோம்பேறி.
முனிவர் தந்த மருந்து!
அடுத்த காட்டில் உள்ள முனிவரைக் கண்டு உழைக்காது வாழ வழி கேட்கப் புறப்பட்டான்.
கதை எஸ். ஜெகதீசன்.
படம்:
வழியில் எதிரே ஒரு சிங்கம் வருவதைக் கண்டான்.
ஐயோ! சிங்கம்..!
எங்கே போகறே?
முனிவரிடம்!
எனக்கு அடிக்கடி நெஞ்சு வலிக்குது, வரும் போது மருந்து கேட்டு வா.
சிங்கம் அவனைக் கடந்து சென்றது.
அப்பாடா தப்பித்தேன்!
1




பாதி வழியில் ஒரு மாமரம் கந்தனிடம்-
கந்தா! என்னிடம் பூக்கும் பூக்கள் எல்லாம் உதிர்ந்து விடுகின்றன. அதற்கு மருந்து கேட்டு வா!
சரி!
சோம்பேறி ஒருவன் வருவதை அறிந்தார் முனிவர்.
இவனுக்குப் புத்தி புகட்ட வேண்டும்!
கந்தன் கூறியதைக் கேட்டு மாமரத்திற்கும் சிங்கத்திற்கும் பரிகாரம் கூறினார் முனிவர்.
முனிவரே! எனக்கு... மந்திரம்?
முதலில் அவைகளுக்குப் பரிகாரத்தைச் சொல்லிட்டு வா! பிறகு உனக்கு வழி சொல்றேன்!
முனிவர் கூறியதைக் கந்தன் மாமரத்திடம்-
உன் வேருக்குக் கீழே புதையல் இருக்குதாம்! அதை எடுத்து விட்டால் போதுமாம்!
கந்தா! அதை நீதான் எடுத்துக் கொள்ளேன்!


ஐயையோ என்னால் மண்ணைத் தோண்ட முடியாது!
அப்போது அங்கு வந்த சிங்கம்
கந்தா! எனக்கு என்ன சொன்னார்?
ஒரு முழுச் சோம்பேறியா பார்த்துத் தின்னால் சரியாயிடுமாம்!
சிங்கம் கந்தனைத் துரத்தியது!
உன்னை விட முழுச் சோம்பேறி யாரும் இல்லை!
விட்டுடு இனி நான் சோம்பேறி இல்லை!
தப்பி ஓடிய கந்தன் முனிவரிடம்...
முனிவரே! என்னைக் காப்பாத்துங்க! எனக்குப் புத்தி வந்து விட்டது!
திருந்திய கந்தன் மாமரத்தின் அடியில் இருந்த புதையலை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றான்.
முற்றும்.

மாதங்கள் வந்த விதம் தெரியுமா?





ஜனவரி: ஜனவரி என்று வழக்கமாகச் சொல்லப்படும் ஜன்யுவரி மாதம் இப்பெயரை எப்படிப் பெற்றது தெரியுமா? இப்பெயர் ஜனுயேரியஸ் என்ற லத்தீன் சொல்லிலிருந்து வந்தது. ஜனுஸ் என்ற ரோமானியக் கடவுளின் மாதம் என்பது இதன் பொருள்.



பிப்ரவரி: பிப்ரவரி என்று வழக்கமாகச் சொல்லப்படுவது ஃபெப்ருவரி மாதத்தை. ஃபெப்ருயேரியஸ் என்பது லத்தீன் சொல். இதற்குத் தூய்மையாக்கல் என்று பொருள். இம்மாதம் 15 ஆம் தேதியன்று தங்களைத் தூய்மையாக்கிக் கொள்வதற்காக முன்பு விழாக் கொண்டாடினர்.



மார்ச்: மார்ஸ் என்ற ரோமானியப் போர்க் கடவுளுக்குரிய மாதம் என்ற பொருளில், இம்மாதம் மார்ச் என்ற பெயரைப் பெற்றது.



ஏப்ரல்: ஏப்ரிலிஸ் என்பது ஏப்பரைர் என்ற லத்தீன் சொல்லிலிருந்து வந்தது. 'ஏப்பெரைர்' என்றால் 'துவக்கம்' என்பது பொருள். பண்டைய ரோமானியர்கள் ஏப்ரல் மாதத்தில் ஆண்டைத் துவக்கினார்கள். அதன் பிறகு ரோமானியக் காலெண்டர் கணிக்கப்பட்டவுடன் மார்ச் மாதத்தை ஆண்டின் துவக்க மாதமாக ஆக்கினார்கள்.



மே: ரோமானியக் கடவுளான மெர்க்குரியின் தாய் மேய்யா என்ற தேவதையின் பெயரிலிருந்து வந்தது தான் மே மாதம். மேய்யா வளர்ச்சிப் பெருக்கத்தின் தேவதை.



ஜூன்: இளமை அறிகுறியின் தேவதையான ஜூனோ என்ற பெயரிலிருந்து வந்ததுதான் ஜூன் மாதம்.



ஜூலை: ஜூலியஸ் சீசர் இந்த மாதத்தில் பிறந்ததால் அவர் நினைவாக இம்மாதத்திற்கு ஜூலை என்று பெயரிடப்பட்டது. ஜூலியஸ் சீசரே இம்மாதத்திற்குத் தம் பெயரை வைத்தார்.



ஆகஸ்ட்: ரோமானியச் சக்கரவர்த்தியான ஆகஸ்ட்டஸ் சீசரைக் கௌரவிக்க இந்த மாதத்திற்கு ஆகஸ்ட் என்று பெயரிடப்பட்டது.

செப்டம்பர்: ரோமானியக் காலண்டரின்படி மார்ச் மாதம் ஆண்டு துவங்கியது. ஆகவே, ஏழாவதாக வந்த மாதத்திற்கு செப்டம்பர் என்று பெயர் வைக்கப்பட்டது.




செப்டம்பர் என்றால் ரோமானிய மொழியில் ஏழு என்று பொருள்.



அக்டோபர்: ரோமானியக் காலண்டர்படி அக்டோபர் மாதம் எட்டாவதாக வருவது. ரோமானிய மொழியில் அக்டோ என்றால் எட்டு என்று பொருள்.



நவம்பர்: ரோமானியக் காலண்டர்படி இது ஒன்பதாம் மாதம். நவெம் என்றால் ரோமானிய மொழியில் ஒன்பது என்று பொருள்.



டிசம்பர்: ரோமானியக் காலண்டர்படி இது பத்தாவது மாதம். டிசெம் என்றால் ரோமானிய மொழியில் பத்து என்று பொருள்.

தொகுப்பு: **ஆர். மகாதேவன்**



உங்கள் நூலகம்

நவபாரத நாயகன்

(முத்துமணி — பக். 104 — ரூ. 14/- தேன் மழைப் பதிப்பகம், 34, கொத்தவால் தெரு, ஆலந்தூர், சென்னை, — 16, விற்பனை உரிமை: ஐந்திணைப் பதிப்பகம், சென்னை — 5.)

குழந்தைப் பாடல் எழுதுவோரில் நேருஜியைப் பற்றி எழுதாதோர் இல்லவே இல்லை. என்ற அளவுக்குக் குழந்தைப் பாடல்களில் பாடும் பொருளாக நிறைந்திருப்பவர் நேரு. நேருஜியின் வாழ்க்கை வரலாற்றைக் கவிதை வடிவில் சுவை குன்றாமல் தந்திருக்கிறார் ஆசிரியர்.

உலகினி லெங்கும் உன்னத அமைதி
நிலவிட நெஞ்சில் பண்டித நேரு!

நாடுகளிடையே நல்லுற விருக்கப்
பாடுகள் பட்டவர் பண்டித நேரு!

போன்ற சந்தம் நிறைந்த பாடல்களைக் குழந்தைகள் விரும்புவார்கள். எனினும், இடையிடையே சற்று வித்தியாசமான சந்த அமைப்போடு பாடல்கள் இருந்தால், குழந்தைகள் அதிகம் விரும்புவார்கள். ஆசிய ஜோதியின் வரலாற்றைக் குழந்தைகளுக்குப் பாடலாக்கித் தருமுன், ஆசிரியர் குழந்தைக் கவிஞரின் 'பாட்டிலே நேரு கதை'' யைப் படித்திருந்தால் இன்னும் சிறப்பாகச் செய்திருக்க முடியும் என்று தோன்றுகிறது. வயது வந்த குழந்தைகள் விரும்பத் தக்க முயற்சி.

வைரஸ் முதல் மனிதன் வரை

(கே. என். ராமச்சந்திரன், பக் 184 — ரூ. 17/—, வானதி பதிப்பகம், தீன தயாளன் தெரு, சென்னை -- 600 017.)

— சூரியனுக்கு ஒரு துணை விண்மீன் இருக்கிறதாம். அது சூரியனை 2.6 கோடியாண்டுகளுக்கு ஒரு முறை சுற்றி வருகிறதாம்! அப்படிச் சுற்றி வரும்போது அது சூரிய மண்டலத்தைச் சுற்றி அமைந்திருக்கும் ஊர்மேகம் என்ற ஒரு வால் மீன் கூட்டத்துக்குள் புகுந்து செல்கிறது. அதில், சுமார் பத்தாயிரம் கோடி வால் விண் மீன்கள் உள்ளன.

இதுபோன்ற, கேட்பதற்கே அதிசயமாகத் தோன்றும் பற்பல அறிவியல் தகவல்களை இந்த நூலில் தந்து பிரமிப்படைய வைத்திருக்கிறார் பேராசிரியர் கே. என். ராமச்சந்திரன். தமிழகத்தில் தோன்றியுள்ள அறிவியல் மறுமலர்ச்சிக்கு நீண்ட காலமாகவே பெரிதும் தொண்டாற்றி வரும் ஆசிரியர், மிக எளிய நடையில் பல சிக்கலான அறிவியல் செய்திகளை விளங்கும்படி தந்துள்ளார். போற்றத்தக்க முயற்சி.

சிறுவர் கவிப் பூங்கா

(ஆர். பி. சாரதி. — பக். 76 — ரூ. 7.50 — பாரதி கலைக் கழகம், 50, மசூதித் தெரு, சைதை, சென்னை — 600 015.)

தன்னையே குழந்தையாக மாற்றிக் கொண்டு, அந்த அணுகு முறையிலேயே பாடல்களைப் படைத்ததால்தான் குழந்தைக் கவிஞரின் பாடல்கள் பல தலைமுறைகளைக் கடந்து இன்றும் குழந்தைகளால் பாடி மகிழப்படுகின்றன. இதே அணுகு முறையில் குழந்தைகளுக்காகப் பல ஆண்டுகளாகப் பாடல்கள் எழுதி வெற்றி கண்டு வருகிறார் ஆசிரியர். கோகுலம் வாசகர்களுக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமானவர். இவரது தனிச் சிறப்பு நெஞ்சை அள்ளும் சந்தமும், நகைச்சுவையும்.

பொறியில் சிக்கிக் கொண்ட எலி, எப்படிப் புலம்புகிறது பாருங்கள்!

வட்டு திருடும் கிட்டு உன்னை
கட்டி முத்தம் கொடுக்கிறார்.
வாட்டும் பசிக்கு வடையை வைத்து
வஞ்சகமாய் ஏன் மடக்குறார்?
கிட்டுப் பயலே, கிட்டுப் பயலே
கிட்டே வரக் கூடாதா?
எட்டி எட்டிப் பார்க்கும் என்மேல்
இரக்கம் கொள்ளக் கூடாதா?

இப்படிக் குழந்தைகளின் கருத்தைக் கொள்ளை கொள்ளும் பாடல்களின் அருமையான தொகுப்பு.

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். முகவரி: ஆசிரியர் — கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 32.

என்ன செய்யலாம்?

போட்டி முடிவு

போட்டி வைப்பதற்கே பயப்படும் அள வுக்கு ஆயிரக்கணக்கான வாசகர்கள் இப் போட்டியில் கலந்து கொண்டுள்ளார்கள். எவ்வளவு விதமான கற்பனைகள்! ஆனால், மிகவும் பெருமைப்படக் கூடியது, ஒருவராவது விளக்கைத் தங்கள் சுயநலத் திற்காகப் பயன்படுத்திக் கொள்வேன் என்று எழுதாதது! பரிசுக்குரியதை முடிவு செய்யும்பணிஎளிதாகஇல்லை.ஒவ்வொன் றும் ஒவ்வொரு வகையில் சிறப்பாக இருந் தது.

முதல் பரிசு ரூ. 25 பெறுவோர்:

ஆர். சிந்துஜா,
அடையாறு, சென்னை — 113.
600 113.

* அ. முஸ்தபா,
தக்கோலம் — 631 151.

* இரா. சீனிவாசன்,
ஷெனாய் நகர்,
சென்னை — 30.

பரிசு பெற்ற "என்ன செய்யலாம்?" முடிவுகள்

நான் காந்தித் தாத்தாவை நேரில் கண்ட தில்லை. அதனால், என்னைச் சொர்க்க லோகம் கொண்டு போகும்படி கேட்பேன். மகிழ்ச்சியும், இன்பமும் நிறைந்த சொர்க்க




* ஆர். சிந்துஜா

லோகத்தில் காந்தித் தாத்தா மட்டும் ஓர் ஒதுக்குப்புறமாக உட்கார்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பார். நான் அவரை வணங்கிக் காரணம் கேட்பேன். நாட்டின் ஒற்றுமைக்காகத் தாம் உயிர் விட்டதாகவும், மீண்டும் மதக் கலவரங்கள் இந்தியாவில் தலைதூக்கியிருப்பது தம்மை வருத்தத்தில் ஆழ்த்தியிருப்பதாகவும் கூறுவார். என் பூதத் தைக்கொண்டு, மக்களிடையே மத ஒற்றுமை உணர்வைத் தோற்றுவித்து அவரை மனம் மகிழ வைப்பேன் என்று உறுதி கூறித் திரும்பு வேன்.

— ஆர். சிந்துஜா.


விளக்குக் கிடைத்ததற்காக நான் மகிழ மாட்டேன். வந்தது போலவே அது எப்பொ ழுது வேண்டுமானாலும் போய் விடலாம். இருக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கும்!



* அ. முஸ்தபா

ஆனால், போய்விட்ட பிறகு அந்தத் துன்பத் தைத் தாங்கும் துணிவு இருக்காது. அத னால், விளக்கைப் புதைத்து விட்டுத் தம்பிக் குக் குடும்ப நிலையைப் புரியும்படி அவனைக் கஷ்டங்களை ஏற்கத் தயாராக்கு வேன்!

— அ. முஸ்தபா.



* இரா. சினிவாசன்

சுயநலத்திற்காக எதெதையோ கேட்க மனது துடிக்கும். பேராசை ஆட்டிப் படைக்கும். உழைக்காது வாழும் வசதியான வாழ்க்கையைக் கேள் என்று மனது தூண்டும். ஆனால், நான் எதுவும் கேட்க மாட்டேன். உழைக்காது கிடைக்கும் எதுவும், உண்மையான மகிழ்ச்சியைத் தராது. ஏற்கெனவே நாம் சோம்பேறிகள். இதைக் கொண்டு உழைக்காமல் வசதியாக வாழ்ந்து சோம்பேறித் தனத்தை வளர்த்துக்கொள்ள மாட்டேன். பிறர் பயன் படுத்த முடியாதபடி விளக்கைச் சுக்கு நூறாக்கிக் கடலில் வீசி விடுவேன்.

— இரா. சினிவாசன்.

பாராட்டுப் பரிசாக ரூ. 5/- பெறும் முடிவுகள்

நம் நாட்டில் பெட்ரோல் வளம் சீக்கிரம் தீர்ந்து விடுமாம். அதனால், நிறைய பெட்ரோல் வளத்தை நமது நாட்டுக்குக் கொடுக்கும்படி கேட்பேன்.

— எம். ஐ. அருண்.
சென்னை — 10.

அருமையான எங்கள் கோகுலத்தின்

தவறு என்ன தெரியுமா?

—போட்டி முடிவு—

இன்னும் இருநூறு பேர் கலந்து கொண்டிருந்தால் 2000 பேர் கலந்து கொண்ட போட்டி என்று இது பெருமை பெறும்! திக்குமுக்காட வைத்து விட்டார்கள் அன்பு வாசகர்கள்! அப்படியிருந்தும் ஒருவராவது 4 படங்களிலும் உள்ள தவறுகள் எல்லாவற்றையும் குறிப்பிட்டுக் காட்டவில்லை! அதனால் ஒவ்வொரு படத்திற்கும் ஒரு பரிசளிப்பது என்று பரிசீலித்தோம். இவர்கள், ஒரு படத்தில் உள்ள எல்லாத் தவறுகளையும் சுட்டிக் காட்டியவர்கள்.

முதல் பரிசாக ரூ. 25/- பெறுவோர்:

* வ. விஷ்ணு சக்ரவர்த்தி,
  சேலம் — 6.
* சி. ஞானப்பிரியா,
  பொன்னேரி.
* மு. கண்ணன்,
  காரைக்குடி.
* அழகு முத்தையா,
  நேமத்தான்பட்டி.

படங்களில் உள்ள தவறுகள்

முதல் படம்:

1. காலண்டரில் ஜனவரி மாதம் 30 தேதியே உள்ளது.
2. கடிகாரத்தில் மணி ஆறரை ஆகும் போது இரு முட்களும் சந்திக்காது.
3. கடிகாரத்தில் VIII க்குப் பிறகு VI இருக்கிறது.

அட்டையில்: சங்கமித்ரா, ராஜா.
வண்ணப்படம்: யோகா.

விலை உயராமல் இருக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்பேன்!

— பி. சந்தானராமன்,
மேட்டூர் அணை.

மதக் கலவரங்கள் இல்லாதிருக்கும்படி செய்யக் கேட்பேன்.

— கே. சுபாஷிணி, கோவை.

குழந்தைக் கவிஞரை உயிர் பிழைத்து வர வழைப்பேன்.

— எஸ். ரவி, சிதம்பரம்.

மக்களுக்குத் தூய்மையாக இருக்கக் கற்றுக் கொடுக்கும்படி கேட்பேன்.

— எஸ். இரவிசங்கர், சென்னை — 42.

உழைக்காது ஏமாற்றுவோர்களைத் தண்டித்து உழைக்க வைக்கக் கேட்பேன்.

— தா. அருள்வேல்குமார், சென்னை —7.

இந்திய ஆறுகளை இணைத்து, கங்கையில் காவேரியைப் பாய வைக்க என்று கேட்பேன்.

— ஜெ. கலைவாணி, திருக்குவளை.

அயோத்தி ராமர் — பாபர் மசூதிப் பிரச்னைகளை நல்ல முறையில் தீர்த்து வைத்து நாட்டைக் காக்கும்படி கேட்பேன்.

— எம். விஜயகுமாரன், திருவையாறு.

எல்லாச் சிறுவர் சிறுமிகளையும் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்கும்படி கேட்பேன்.

— சி. ஜானகி, திருப்பராய்த்துறை.

குவைத்தை சதாம் உசேனின் பிடியிலிருந்து மீட்டு, உலகப் போர் மூளாமல் காக்கும்படி கேட்பேன்.

— இரா. கண்ணன், அண்ணாமலைநகர்.

---

4. சிறுவனின் இடது கால் கட்டைவிரல் மாறியுள்ளது.

2 வது படம்:

1. ரயில்படிக்கட்டுஉள்ளடங்கியுள்ளது.
2. ரயிலின் சக்கரங்களுக்கு, வெளியே விளிம்புகள் உள்ளன.
3. சக்கரங்களை இணைக்கும் இரும்புத் தண்டு இல்லை.



* சி. ஞானப் பிரியா

4. தண்டவாளங்களின் கீழே பொருத்தப்படும் ஃபிஷ் பிளேட்ஸ் இல்லை.
5. இஞ்சின் பெட்டிக்கு மூடு ஜன்னல் இருக்காது.

3 வது படம்:

1. வாழை மரத்தில் மாம்பழம் காய்ப்பது.
2. வாழைத்தாரில் காய்கள் கீழ் நோக்கி



* மு. கண்ணன்

இருக்கக் கூடாது.

3. குலை தள்ளிய மரத்திற்குக் கீழே கன்றுகள் இல்லை.
4. வெந்நீர் விடப்படுகிறது.
5. வாழை மரத்திற்குக் கணுக்கள் கிடையாது.

4 வது படம்:

1. மின்விசிறிக்கு 3 வது பிளேடு இல்லை.
2. ஊஞ்சலுக்கு 4 வது கம்பி இல்லை.
3. கம்பியை மாட்ட வளையம் இல்லை.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுக்கள்.



ஏன்? ஏன்? ஏன்?

இருட்டு பரவியதும், வானத்தை நிமிர்ந்து பார்க்கிறோம். வைரங்களை வாரி இறைத்தது போல் நீலவானமெங்கும் நட்சத்திரக் கூட்டங்கள். ஒளி சிந்தும் நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையே சில நட்சத்திரங்கள் மட்டும் கண் சிமிட்டுவது போல் தொடர்ந்து அல்லது விட்டு விட்டு மின்னுவது போல் ஒளி வீசுகின்றன! இப்படிச் சில நட்சத்திரங்கள் மட்டும் ஏன் கண் சிமிட்டி ஒளி சிந்துகின்றன? உண்மையாகவே இவை கண் சிமிட்டுகின்றனவா? இல்லை, நமது கண்களுக்குத்தான் அப்படித் தோன்றுகின்றதா? இதற்கு என்ன காரணம்?

சூரியன் என்னும் நட்சத்திரம் பூமியிலிருந்து சுமார் 15 கோடி கி. மீ. தொலைவில் இருந்து ஒளி வீசுகிறது. சந்திரன், சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று, பூமிக்குப் பிரதிபலிக்கிறது. சூரிய ஒளியும் சந்திர ஒளியும் எவ்வித இடையூறும் இல்லாது காற்று மண்டலத்தை ஊடுருவி, தொடர்ந்து ஒளியை வீசுகின்றன.

நட்சத்திரக் கூட்டங்கள் சூரியனுக்கும் அப்பால் வெகு தொலைவில் உள்ளன. இந்தத் தொலைவை, கி. மீ. களால் அளக்க இயலாது என்று ஒளியின் வேகத்தை அளவுகோலாக்கி வைத்துள்ளார்கள். ஒளியின் வேகம் வினாடிக்கு 3,00,000 கி. மீ. ஆகும். இதன்படி, ஓர் ஆண்டில் ஒளி 9,38,510 கோடி கி. மீ. பாய்கிறது. இதைத்தான் ஒளியாண்டு என்கிறார்கள். நட்சத்திரங்கள் நான்கு ஒளியாண்டுத் தொலைவில் உள்ளன. (9,38,510 கோடி கி.மீ. X 4!) அதாவது நான்கு ஆண்டுகளுக்கு முந்திய நட்சத்திர ஒளியைத்தான் நாம் இன்று காண்கிறோம்!

ஒவ்வொரு நட்சத்திரமும் ஒளி வீசுகிறது. இந்த ஒளிக்கதிர் 4 ஒளியாண்டுத் தொலைவைக் கடந்து வரும்போது எவ்வளவோ குறுக்கீடுகள். காற்று மண்டலம், அவற்றின் தூசு தும்புகள், மற்ற நட்சத்திரக் கூட்டங்களின் ஒளிக் கிரணங்கள் இப்படி எவ்வளவோ குறுக்கீடுகள். இந்தக் குறுக்கீடுகள், இவற்றின் ஒளிக் கிரணங்களைச் சிதற வைத்துத் துண்டிக்கின்றன. ஒரு மேசை மின் விசிறியை இயக்கி விட்டு அதன் பின்னாலிருந்து டார்ச் விளக்கைக் காட்டினால், ஒளி சிதறுவதில்லையா? அதே போல்தான்! இந்தச் சிதறலின் விளைவால்தான் நட்சத்திரங்கள் கண் சிமிட்டி விட்டு விட்டு மின்னுவது போல் தோன்றுகின்றன.

சேரநம்பி

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—


புத்துணர்வூட்டும் புதிய அனுபவம்!
ஆ! டர்போ!
புதிய
Campco
TURBO
சக்தியளிக்கும் சாக்லேட்
அனுபவியுங்கள் ஒரு புத்துணர்வூட்டும் சக்தியை... கேம்ப்கோவின் புதிய டர்போவில். ஊக்கம் தரும் சத்தான பால் கொண்டு தயாரிக்கப்பட்ட சாக்லேட் பார். களிப்பூட்டும் சுவை, துடிப்பூட்டும் சக்தி... கேம்ப்கோ டர்போ!
TOP QUALITY
LOW PRICE
இந்தியாவின் மிகப் பெரிய நவீன ஆலை அளிப்பது. கேம்ப்கோ லிமிடெட், மங்களூர்.
Campco chocolates
Milk
White
TURBO
Eclairs
Playtime
RUBIES
TOFFEE
Campco beverages
WINNER
R K SWAMY/CL/8351

REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

